# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# (நெடுஞ்சாலைகள் துறை)

# 2018

## நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

# முன்னுரை

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2018 ஆம் ஆண்டுக்கான இந்த வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றித் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கை நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் பொதுவான தகவல்களையும் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகையையும் விளக்குகின்றது.

## உள்ளடக்கம்

## நெடுஞ்சாலைகள் பிரிவு


**1.0 நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கண்ணோட்டம் 1**

1.1 நெடுஞ்சாலைகள் துறை பற்றிய அறிமுகம்........................................................ 1

1.2 தொழிற்பாட்டுப் பிரிவுகள்........................................................................ 2

1.3 ஊழியர்கள் பற்றிய தகவல்கள்............................................................... 3

1.4 பிரிவுகளின் செயலாற்றுகை................................................................... 6

1.5 பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் (நெடுஞ்சாலைகள் துறை)............................. 30

1.6 நிதிச் செயலாற்றுகை.......................................................................... 33

**2.0 மேம்பட்ட முதலீடுகளும் புதிய முன்னெடுப்புகளும் 35**

2.1 புதிய முன்னெடுப்புக்கள்...................................................................... 35

**3.0 கடுகதிப்பாதைகள் அபிவிருத்தி 46**

3.1 கடுகதிப்பாதைகளின் தொழிற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமை.......................... 46

3.2 வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைச் செயற்திட்டம்............................................ 51

3.3 மத்திய கடுகதிப்பாதைச் செயற்திட்டம்........................................................ 54

3.4 தென்பிராந்திய கடுகதிப்பாதை நீடிப்புச் செயற்திட்டம்....................................... 58

**4.0 நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி 62**

4.1 தேசிய வீதி வலையமைப்பு................................................................... 62

4.2 வீதிகளினதும் பாலங்களினதும் பராமரிப்பு (RMTF)........................................... 65

4.3 வலையமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு.......................................... 67

4.4 போக்குவரத்து முகாமைத்துவம்.......................................................................... 70

4.5 பேராதனை-பதுளை-செங்கலடி (A5) வீதிப் புனரமைப்புக் கருத்திட்டம்.................. 72

4.6 தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் – துணைக் கடன்.......................... 76

4.7 வீதிகள் வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் – (அபிவிருத்திக்கான சவுதி நிதியம்)...................................................................................................... 77

4.8 வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (NRCP) மேலதிக நிதியீட்டம்.................. 80

4.9 கடுகதிப்பாதை இணைப்பு மேம்படுத்தல் கரும்திட்டம்......................................... 81

4.10 வீதிகள் வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் – (சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் – I)...................................................................................................... 84

4.11 கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்திச் செயற்திட்டம்........................................... 86

4.12 முன்னுரிமை வீதிகள் செயற்திட்ட விரிவாக்கம் (PRP III)– கட்டம் 1........................ 90

4.13 தென்பிராந்திய வீதி இணைப்புக் கருத்திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி)............. 92

4.14 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (iRoad) – கட்டம் I...................... 95

4.15 இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (iRoad 2).............. 99

4.16 அரசாங்கத்தின் உத்தரவாதத்தின் கீழ் உள்நாட்டு வங்கிகளால் நிதியிடப்பட்ட வீதிப் புனரமைப்புக் கருத்திட்டம்.......................................................................... 101

4.17 போக்குவரத்து இணைப்பு மற்றும் ஆதன முகாமைக் கருத்திட்டம்.......................... 103

4.18 முன்னுரிமை வீதி மேம்படுத்தல் மற்றும் புனரமைத்தல் கருத்திட்டங்கள் – 3, கட்டம் II (PRP 3 – கட்டம் II)...................................................................................... 106

4.19 பேஸ்லைன் வீதி விரிவாக்கக் கருத்திட்டம் – கட்டம் III......................................... 108

4.20 மேல் மாகாண தேசிய நெடுஞ்சாலைக் கருத்திட்டம்............................................. 109

4.21 மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள், பாலங்களை அகலப்படுத்தலும் மேம்படுத்லும்...................................................................................................... 111

4.22 போக்குவரத்துக் கருத்திட்ட தயார்படுத்தல் வசதிக் கருத்திட்டம்............................ 112

4.23 கடலோர வீதியை பாணற்துறை வரை நீடித்தல்.................................................. 114

**5.0 வீதிகளை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல்** 116

5.1 வீதிகளை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல்..................................................... 127

**6.0 பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்** 126

6.1 தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள சேதமடைந்த/பலவீனமான பாலங்களை மீள நிர்மாணித்தல்........................................................................................ 127

6.2 பழைய பாலங்களின் பாகங்களைப் பயன்படுத்தி கிராமியப் பாலங்களை நிர்மாணித்தல் 128

6.3 பிராந்தியப் பாலங்கள் கருத்திட்டம் – கட்டம் II..................................................... 129

6.4 தேசிய நெடுஞ்சாலைகளில் 25 பாலங்களை மீள்நிர்மாணித்தல்............................. 131

6.5 46 பாலங்களின் மீள்நிர்மாணம்............................................................................ 134

6.6 தேசிய வீதி வலையமைப்பின் முக்கியமான பாலங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டம்...................................................................................................... 135

6.7 இரண்டாவது புதிய களனிப் பாலத்தின் நிர்மாணம்............................................... 138

6.8 பால முகாமை முறை (BMS) மற்றும் பால மதிப்பீட்டு அலகு (BAU) என்பவற்றின் உருவாக்கம்........................................................................................................ 140

6.9 சமவச்சத்தீவு – முனைச்சேனை வீதியில் குழாய்ப் பாலம் நிர்மாணம் (தட்டுத்துறைப் பாலம்)................................................................................................................ 143

6.10 பேலியகொடை புத்தளம் வீதியில் கொச்சிக்கடை பாலம் நிர்மாணம்...................... 144

6.11 ராஜகிரிய, பொல்கஹவலை மற்றும் கணேமுல்லை ஆகிய இடங்களில் 3 மேம்பாலங்கள் நிர்மாணித்தல்................................................................... 146

**7.0 இயங்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வீதிகளைப் புனரமைத்தல்** 150

7.1 தேசிய வீதி வலையமைப்பிற்கான மண்சரிவு அனர்த்தப் பாதுகாப்புக் கருத்திட்டம்...................................................................................................... 150

**8.0 கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 154**

8.1 கிராமிய வீதி மீள்எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்.................... 155

8.2 கிராமிய வீதி மீள்எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்........................... 157

**9.0 முன்னேற்ற மீளாய்வு 159**

9.1 நிதி முன்னேற்றம்........................................................................................... 159

9.2 பௌதீக முன்னேற்றம்....................................................................................... 179

## அட்டவணைகளின் உள்ளடக்கம்


அட்டவணை 1.3.1 31.12.2018 இல் உள்ளவாறான ஊழியர்கள் பற்றிய தகவல்கள் (நெடுஞ்சாலைகள் துறை)......................................................................

அட்டவணை 1.3.2 31.12.2018 இல் உள்ளவாறான பதவியணி மாற்றங்கள்..................................

அட்டவணை 1.5.1 உத்தியோக பூர்வ வெளிநாட்டுப் பயிற்சிகள்....................................................

அட்டவணை 1.6.1 மொத்தச் செலவினம்..........................................................................................

அட்டவணை 1.6.2 மீண்டெழும் செலவினம்......................................................................

அட்டவணை 1.6.3 மூலதனச் செலவினம்...........................................................................

அட்டவணை 1.6.4 முற்பணக்கணக்கு.................................................................................

அட்டவணை 2.1.4.1 மேம்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள வீதிகள் - கண்டி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மத்திய கடுகதிப்பாதை இணைப்பு வீதிகளை மேம்படுத்தல்....

அட்டவணை 2.1.5.1 முன்மொழியப்பட்டுள்ள மூன்று மேம்பாலங்கள் - கொஹுவலை, கெட்டம்பே மற்றும் ஹீரஸ்ஸகல ஆகிய இடங்களில் மூன்று மேம்பாலங்களை நிர்மாணித்தல்...........................................................................................

அட்டவணை 3.1.1 கடுகதிப்பாதைகளின் நாளாந்த சராசரி போக்குவரத்து அளவு...........................

அட்டவணை 3.1.2 2018 ஆண்டில் வாகனப் போக்குவரத்து அளவு மாதாந்தச் செயலாற்றுகை...................................................................................

அட்டவணை 3.1.3 தென்பிராந்திய கடுதிப்பாதை மற்றும் கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை, கொழும்பு - கட்டுநாயக்க கடுகதிப்பாதையின் கட்டண வருமான ஒப்பீடு....................................................................................................

அட்டவணை 3.1.4 2017 ஆம் ஆண்டில் தொழிற்படும் கடுகதிப்பாதைகளினால் பெற்றுக்கொண்ட மாதாந்த கட்டண வருமானங்கள் ....................................................................

அட்டவணை 4.1.1 இலங்கையின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பு.........................................

அட்டவணை 4.1.2 2018 ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய வீதி வலையமைப்பு ‘A’ தர மற்றும் ‘B’ தர நெடுஞ்சாலைகளின் மாகாண ரீதியான பகிர்வு.................................................

அட்டவணை 4.1.3 மேற்பரப்பு வகை பகிர்வின் விகிதம்..................................................................

அட்டவணை4.1.4 2018 ஆம் ஆண்டில் 'B' தர வீதி வலையமைப்பிற்குப் பதிலாக சேர்க்கப்பட்ட வீதிகளின் விபரங்கள்........................................................................................

அட்டவணை 4.2.1 31/12/2018 இல் உள்ளவாறான வீதிகள் பராமரிப்பின் பௌதீக முன்னேற்றம்..........................................................................................................

அட்டவணை 4.3.1 வலைமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு நிகழச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்..............................................................

அட்டவணை 4.3.2 வலையமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள்........................................................................................

அட்டவணை 4.4.1 போக்குவரத்து முகாமை நிகழ்ச்சித்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்..............................................................

அட்டவணை 4.5.1 பேராதனை – பதுளை - செங்கலடி செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட ஒப்பந்தப் பொதிகள்..........................................................................................

அட்டவணை 4.6.1 தேசிய நெடுஞ்சாலைத் துறைச் செயற்திட்டம் – துணைக்கடன் (கடன் இல 2767) இன் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிப் பொதிகள்.........................................

அட்டவணை 4.7.1 வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிகள்..........................................................................................................

அட்டவணை 4.8.1 வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் மேலதிக நிதியீட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிப் பகுதிகள் மற்றும் முன்னேற்றம்.................................

அட்டவணை 4.10.1 வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதி மற்றும் பாலப் பொதிகள்.........................................................................

அட்டவணை 4.11.1 கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் புனரமைப்புக்குத் தெரிவுசெய்யப்பட்ட வீதிப் பகுதிகள்..............................................................

அட்டவணை 4.12.1 PRP3 – கட்டம் I இன் அசல் ஒப்பந்தப் பொதிகளின் சேமிப்புகளைப் பயன்படுத்தி புனரமைக்கப்பட்ட வீதிகள்.........................................................

அட்டவணை 4.13.1 தென்பிராந்திய வீதி இணைப்புக் கருத்திட்டத்தின் கீழ் புனரமைப்புக்காக தெரிவுசெய்யப்பட்ட வீதிப் பொதிகள்..............................................................

அட்டவணை 4.14.1 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்ட கிராமிய வீதிப் பொதிகள் – 2018 ....................................

அட்டவணை 4.14.2 மாகாண ரீதியாக ஒவ்வொரு வீதிப் பொதிகளும் அடைந்த முன்னேற்றம்..........

அட்டவணை 4.14.3 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்கான உத்தேச தேசிய வீதிப் பொதிகள்.........................................................................

அட்டவணை 4.15.1 இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழுள்ள உத்தேச வீதிகள்.......................................................................................

அட்டவணை 4.16.1 நடைபெற்றுக்கொண்டிருக்கும் வீதிப் பிரிவுகளின் முன்னேற்றம்........................

அட்டவணை 4.20.1 மேல் மாகாண தேசிய நெடுஞ்சாலைக் கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்ட வீதிப் பொதிகள்............................

அட்டவணை 4.21.1 மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இக்கருத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்கள்.................................................

அட்டவணை 4.22.1 31.12.2018 ஆம் திகதியில் உள்ளவாறான TPPF கருத்திட்டத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றம்.........................................................................

அட்டவணை 5.1.1 2018 ஆம் ஆண்டில் வீதி அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல்களின் முன்னேற்றம்.......................................................................................

அட்டவணை 5.1.2 2017 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் அடையப் பெற்றுள்ள பௌதீக முன்னேற்றம்.......................................................................................

அட்டவணை 5.1.3 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அடையப்பெற்றுள்ள மொத்த நிதி முன்னேற்றம்.......................................................................................

அட்டவணை 5.1.4 2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் அடையப்பெற்றுள்ள நிதி முன்னேற்றம்.......................................................................................

அட்டவணை 5.1.5 2017 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் அடையப்பெற்றுள்ள நிதி முன்னேற்றம்.......................................................................................

அட்டவணை 5.1.6 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அடையப்பெற்றுள்ள மாகாண ரீதியான நிதி முன்னேற்றத்தின் ஒப்பீடு.....................................................................

அட்டவணை 6.1.1 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பௌதீகச் செயலாற்றுகை.......................................................................................

அட்டவணை 6.3.1 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 2016 ஆம் ஆண்டிற்கான பௌதீக முன்னேற்றம்........................................................

அட்டவணை 6.4.1 பொதி 1 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம்.......................................................................................

அட்டவணை 6.4.2 பொதி 1 இற்கான செயற்பாட்டுத் திட்டங்களுக்கிணங்க 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான திருத்தப்பட்டவாறான ஒட்டுமொத்த இலக்குகள் மற்றும் அசல் முன்னேற்றம்..............................................................................

அட்டவணை 6.11.1 மேம்பாலங்களின் விபரச் சுருக்கம்........................................................

அட்டவணை 6.11.2 31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்............................

அட்டவணை 7.1.1 மண்சரிவு அனர்த்த பாதுகாப்புக் கருத்திட்டத்தின் கீழ் ஆலோசனை சேவைகளின் பௌதீக முன்னேற்றம்........................................................

அட்டவணை 8.1.1 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்புகளின் ஒப்பீடு..................................................................

அட்டவணை 8.1.2 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க அடையப்பெற்ற இலக்கு.......................................................................................

அட்டவணை 9.1.1 31/12/2018 இல் உள்ளவாறான ஒப்பிய பொறுப்பு மிகுதி மற்றும் செலுத்தப்படாமலுள்ள விலைப்பட்டியல்கள்..............................................

அட்டவணை 9.1.2 தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் நிதி முன்னேற்றம்....................................

அட்டவணை 9.1.3 கடுகதிப்பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த நிதி முன்னேற்றம்.....

அட்டவணை 9.1.4 கடுகதிப்பாதை அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டத்தின் நிதி முன்னேற்றம்...................

அட்டவணை 9.1.5 நெடுஞ்சாலைகள் அபிவிருத்தியின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்.................

அட்டவணை 9.1.6 நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிதி முன்னேற்ற கருத்திட்டங்கள்.......................................................................................

அட்டவணை 9.1.7 அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் நிகழச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்.......................................................................................

அட்டவணை 9.1.8 அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் மாகாண மட்டத்திலான நிதி முன்னேற்றம்..............................................................

அட்டவணை 9.1.9 பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் நிர்மாணங்களின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்.........................................................................................

அட்டவணை 9.1.10 பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்.........................................................................................

அட்டவணை 9.1.11 அவசர உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்..................

அட்டவணை 9.1.12 அவசர உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்......................................

அட்டவணை 9.1.13 நிறுவனம் சார் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்................

அட்டவணை 9.1.14 கிராமிய வீதி மீள்எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்.....................

அட்டவணை 9.1.3.1 உள்ளூர் வங்கிகளின் பங்களிப்புகள்...............................................................

அட்டவணை 9.2.1 கடுகதிப்பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்...........

அட்டவணை 9.2.2 நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்.......

அட்டவணை 9.2.3 பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணங்களின் பௌதீக முன்னேற்றம்.......

## உருக்களின் பட்டியல்


உரு 4.1.1 வீதி மேற்பரப்பு வகைகளின் விகிதப் பகிர்வின் விபரங்கள்...........................................

உரு 4.2.1 2018 ஆம் ஆண்டில் மணல் முத்திரையிடப்பட்ட, செப்பனிடப்பட்ட மற்றும் மேற்பரப்பு புதுப்பிக்கப்பட்ட வீதி நீளங்களின் மாகாணரீதியான சுருக்கம்.....................................

உரு 4.5.1 சிவில் வேலைகளின் இலக்கு அடைவு...........................................................................

உரு 4.5.2 பயன்பாட்டுசேவைகளை இடமாற்றம் செய்தல் மற்றும் காணி சுவீகரித்தல் செயன்முறை ஆகியவற்றின் இலக்கு அடைவு.............................................................

உரு 4.9.1 திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக இலக்கு அடைவு.................................

உரு 4.11.1 திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 06, 07 ஆம் இலக்க மற்றும் கட்டம் II இன் 11 ஆம் இலக்கச் செயற்பாடுகளின் பௌதீக இலக்கு அடைவு...........................................................................................................

உரு 6.0 தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள பாலங்களின் சுருக்கம்.................................................

உரு 6.7.1 திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க பொதிகள் I மற்றும் II இனால் அடையப்பட்ட சிவில் வேலைகளினது இலக்கு................

உரு 6.8.1 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட பாலம் சோதனையிடல் நடவடிக்கைகளின் இலக்கு அடைவு.......................................................................................................

உரு 8.1 2018 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டத்தின் புனரமைத்தல் வேலைக்காக அடையப்பட்ட இலக்கு...........................................................................................................

உரு 9.1.1 ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்–நெடுஞ்சாலைகள் துறை.............................................

உரு 9.1.2 2018 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் உள்ளடக்கம் - நெடுஞ்சாலைகள் துறை.................................................................................

உரு 9.1.3.1 கருத்திட்டங்கள் தொடர்பில் பகிர்தளிக்கப்பட்ட உள்ளூர் வங்கிக் கடன்கள் – 2018........

உரு 9.1.3.2 வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான கடன்களில் உள்ளூர் வங்கிகளின் பங்களிப்புகள்...........................................................................................................

## பின்னிணைப்புகள்


01 ருவன்புர கடுகதிப்பாதையின் வரைபடம்........ 188

02 கொக்கிளாய் பாலத்தின் இடவமைவு வரைபடம்........ 189

03 இலங்கையின் கடுகதிப்பாதைகள் வலையமைப்பு........ 190

04 கடுகதிப்பாதைகளின் போக்குவரத்து அளவு மற்றும் கட்டண வருமானம்........ 191

05 வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் இடவமைவு வரைபடம் - கட்டம் III........ 193

06 மத்திய கடுகதிப்பாதையின் வரைபடம்........ 194

07 தென்பிராந்திய கடுகதிப்பாதை நீடிப்பின் வரைபடம்........ 198

08 பூர்த்தியடைந்துள்ள, நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மற்றும் நடைபெறவுள்ள வீதிக் கருத்திட்டங்கள்........ 199

09 பதுளை – செங்கலடி வீதியை மேம்படுத்தல் கருத்திட்டத்தின் இடவமைவு வரைபடம்... 200

10 முன்னுரிமை வீதிகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் கருத்திட்டங்கள் (PRP III) – கட்டம் I........ 201

11 அரசாங்க உத்தரவாதம் பெற்ற உள்ளூர் வங்கிகளால் நிதியளிக்கப்படும் வீதி புனரமைத்தல் கருத்திட்டம்........ 203

12 முன்னுரிமை வீதிகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் கருத்திட்டங்கள் 3 (PRP III) – கட்டம் II........ 207

13 மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகளை அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் கருத்திட்டம் – வீதிகளினதும் பாலங்களினதும் பட்டியல்........ 208

14 பழைய பால உதிரிப்பாகங்களை பயன்படுத்தி கிராமியப் பாலங்களை நிர்மாணித்தல்........ 209

15 பிராந்திய பாலம் கருத்திட்டம் (கட்டம் II)........ 214

16 25 பாலங்களை புனர்நிர்மாணித்தல்........ 222

17 தேசிய வீதி வலையமைப்பின் பாரிய பாலங்கள் நிர்மாணித்தல் கருத்திட்டம்........ 224

18 மண்சரிவு அனர்த்த பாதுகாப்புக் கருத்திட்ட திட்டவரைவு........ 226

19 (அ) நெடுஞ்சாலைகள் துறை முதலீடு (2007-2018), (ஆ) நெடுஞ்சாலைகள் துறை முதலீட்டின் விரிவான விபரம் (2007-2018)........ 227

20 2011 – 31/12/2018 ஆம் திகதி வரையில் கருத்திட்ட ரீதியாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள உள்ளூர் வங்கிக் கடன்கள்........ 228

## நோக்கு

"வினைத்திறனானதும் பாதுகாப்பானதும் உலக தரத்திலானதுமான வீதி உட்கட்டமைப்பை உருவாக்குவதிலும் அவற்றைப் பேணுவதிலும் சிறந்த சேவை வழங்குநராக இருத்தல்''

## எமது பணி

"பிரஜைகளின் தேவைப்பாடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி இலக்குகளுக்கிணங்க துறைசார் நிபுணத்துவ அறிவு, நவீன தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை பயன்படுத்துவதுடன் வளங்களையும் உகந்த முறையில் பயன்படுத்தி நெடுஞ்சாலை வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல், முகாமை செய்தல் மற்றும் பராமரித்தல்"

# குறிக்கோள்கள்

- தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் நெடுஞ்சாலைகள் துறைக்கான தேசியக் கொள்கைகளை உருவாக்குதல்.
- நகரங்களுக்கிடையில் கூடிய நகர்வுகளை வழங்குதல், பொருளாதார நிலையங்களுக்கிடையில் வினைத்திறனான தொடர்பினை ஏற்படுத்தல், கிராமிய பிரதேசங்களுக்கான அணுகுகையை மேம்படுத்தல்
- நிலைத்தகு அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் பொருட்டு மிகச்சிறந்த தரங்களில் வீதி வலையமைப்பினை பேணுதல்.
- வினைத்திறனான போக்குவரத்து முகாமைத்துவத்திற்காக சிறந்த போக்குவரத்து முறைமையை *(ITS)* வழங்குதல்.
- உயர் மட்ட சேவைகளையும் வீதிப் பாவனையாளர்களுக்கு சுமூகமான வீதிகளையும் உறுதிப்படுத்தும் பொருட்டு வீதித் துறையின் திறன் மேம்பாட்டிற்கு முதலீடு செய்தல்.
- வீதித் துறையை மேம்படுத்துவதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்தல்.
- வீதிப் பாவனையாளர்களுக்கான வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

# 1.0 நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கண்ணோட்டம்

## 1.1 நெடுஞ்சாலைகள் துறை பற்றிய அறிமுகம்

கடந்த ஐந்து வருடங்களில் நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் வீதித் துறை மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தித் துறைகள் முக்கியமான வகிகாகத்தைக் கொண்டிருந்தன. நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இந்த இரண்டு துறைகளும் உள்ளடங்குகின்றன. 2018 ஆம் ஆண்டில், தேசிய ரீதியாக முக்கியத்துவமிக்க பல அபிவிருத்திக் கருத்திட்டங்களை இந்த அமைச்சு வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது. அத்துடன், நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பயனுள்ள முன்னெடுப்புகளாக இந்த இரண்டு துறைகளின் கீழ் பல புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒரு நாட்டினது வீதி வலையமைப்பு மிகவும் பெறுமதி வாய்ந்ததும் மிகப் பெரிய சமூகச் சொத்துக்களில் ஒன்றாகவும் காணப்படுவதுடன் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் சமூகத்தின் சுற்றுச் சூழலுக்கும் அடிப்படையானது. 65,510 கி.மீ$^2$ மொத்த பிரதேசத்தையும் 21 மில்லியன் சனத்தொகையையும் (மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2018) கொண்ட இலங்கையில் வீதி அடர்த்தி ஒன்றே காணப்படுகின்றது. 1.76கி.மீ/கி.மீ$^2$ வீதி அடர்த்தியின் காரணமாக பயணிகளின் 94% மற்றும் சரக்குப் பொதிகளின் 98% இவ்வீதிகள் மூலமே நடைபெறுவதுடன் தெற்காசிய நாடுகள் அதிகமானவற்றில் காணப்படும் வீதி அடர்த்தியை விடவும் இது அதிகமானதாகும். மேலும், இலங்கை போக்குவரத்தின் மேலோங்கிய முறையாக வீதி மூலமான போக்குவரத்து காணப்படுவதுடன் தற்போதைய காலத்தில் ரயில் போக்குவரத்திற்கு மேலாகஇது பல தொழில்நுட்ப மற்றும் பொருளாதார நன்மைகளையும் கொண்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA), வீதிப் பராமரிப்பு நம்பிக்கை நிதியம் (RMTF), மகநெகும கென்ஸ்ரெக்சன் கம்பனி, மகநெகும கென்சல்டன்சி கம்பனி மற்றும் மகநெகும இமல்ஷன் கம்பனி மற்றும் கடுகதிப்பாதை டிரான்ஸ்போர்ட் கம்பனி (பிறைவட்) லிமிற்டெட் ஆகியன இவ்வமைச்சின் நெடுஞ்சாலைகள் துறையின் கீழ் வரும் பிரதான நிறுவனங்களாகும்.1981 ஆம் ஆண்டின் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சட்ட இல.73 இன் கீழ் நெடுஞ்சாலைகள் அமைச்சின்

நெடுஞ்சாலைகள் துறையின் கீழ் நியதிச்சட்ட தொகுதியாக கூட்டிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) 1986 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைகள் திணைக்களத்தின் பின்னுரிமையாளராகியது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை நாட்டிலுள்ள முதன்மையான நெடுஞ்சாலைகள் அதிகாரசபையாவதுடன் சுமார் 12,390 கி.மீ வீதிகளையுடைய தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்புக்கும் அபிவிருத்திக்கும் பொறுப்பு வாய்ந்தது. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வீதிகளை 'A' தர (பெருந்தெரு) வீதிகள் (4,215 கி.மீ), 'B' தர (பிரதான) வீதிகள் (8,005 கி.மீ), கடுகதிப்பாதைகள் (170 கி.மீ) மற்றும் 4,662 பாலங்கள் (3 மீ இற்கும் அதிகமான வீச்செல்லை) என வகைப்படுத்த முடியும்.

இவ்வறிக்கையில், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தித் துறையினது விரிவான செயலாற்றுகையையும் மற்றும் அமைச்சினாலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினாலும் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவினாலும் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளையும் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## 1.2 தொழிற்பாட்டுப் பிரிவுகள்

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் தலைமையில் இயங்கும் இந்த அமைச்சின் நெடுஞ்சாலைகள் துறை பின்வரும் தொழிற்பாட்டுப் பிரிவுத் தலைவர்களின் கீழ் இயங்கி வருகின்றது. நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நெடுஞ்சாலைகள் துறை தொழிற்பாட்டுப் பிரிவுகள் பின்வருமாறு 5 பிரிவுத் தலைவர்கள் தலைமையில் 8 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| நிர்வாகப் பிரிவு | •மேலதிக செயலாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) |
| காணிப் பிரிவு, கிராமிய வீதி அபிவிருத்திப் பிரிவு | •மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) |
| பொறியியல் பிரிவு, பெறுகைப் பிரிவு | •மேலதிக செயலாளர் (பொறியியல்) |
| திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு | •சிரேஸ்ட நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் |
| கணக்குப் பிரிவு | •சிரேஸ்ட நிதி உத்தியோகத்தர் |
| உள்ளக கணக்காய்வுப் பிரிவு | •சிரேஸ்ட உள்ளக கணக்காய்வாளர் |

## 1.3 ஊழியர்கள் பற்றிய தகவல்கள்

**அட்டவணை 1.3.1 31.12.2018 இல் உள்ளவாறான ஊழியர்கள் பற்றிய தகவல்கள் (நெடுஞ்சாலைகள் துறை)**

| தொடர் இல. | பதவி | சேவை வகை | தரம்/வகுப்பு | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | | | 1 | 1 | 0 |
| 2 | ராஜாங்கச் செயலாளர் | | விசேட | 1 | 1 | 0 |
| 3 | மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) | இ.நி.சே. | விசேட | 1 | 1 | 0 |
| 4 | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே. | விசேட | 1 | 1 | 0 |
| 5 | மேலதிகச் செயலாளர் (பொறியியல்) | இ.பொ.சே. | விசேட | 1 | 1 | 0 |
| 6 | சிரேஸ்ட நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் | இ.தி.சே. | விசேட | 1 | 1 | 0 |
| 7 | பிரதம நிதி உத்தியோகத்தர் | இ.க.சே. | விசேட | 1 | 1 | 0 |
| 8 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே. | I | 1 | 1 | 0 |
| 9 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே. | 1 | 1 | 1 | 0 |
| 10 | பிரதம கணக்காளர் | இ.க.சே. | I | 1 | 0 | 1 |
| 11 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே. | I | 1 | 1 | 0 |
| 12 | பணிப்பாளர் (கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் பெறுகை) | இ.நி.சே. | I | 1 | 1 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | பணிப்பாளர் (பொறியியல்) | இ.பொ.சே. | I | 1 | 1 | 0 |
| 14 | பணிப்பாளர் (மகநெகும) | இ.தி.சே. | I | 1 | 1 | 0 |
| 15 | பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் மேற்பார்வை) | இ.தி.சே. | I | 1 | 1 | 0 |
| 16 | கணக்காளர் (கருத்திட்டங்கள்) | இ.க.சே. | I | 1 | 0 | 1 |
| 17 | உதவிச் செயலாளர் | இ.நி.சே.. | III | 3 | 2 | 1 |
| 18 | கணக்காளர் | இ.க.சே. | III | 3 | 2 | 1 |
| 19 | உதவிப் பணிப்பாளர் (மகநெகும) | இ.தி.சே. | III | 1 | 1 | 0 |
| 20 | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் மேற்பார்வை) | இ.தி.சே. | III | 2 | 2 | 0 |
| 21 | உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) | இ.பொ.சே. | III | 3 | 2 | 1 |
| 22 | பொறியியலாளர் (மகநெகும) | இ.பொ.சே. | III | 1 | 1 | 0 |
| 23 | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | | | 1 | 1 | 0 |
| 24 | நிர்வாக உத்தியோகத்தர் | பொ.நி.உ.சே. | Supra | 1 | 0 | 1 |
| 25 | மொழிபெயர்ப்பாளர் | மொ.சே. | II/I | 2 | 1 | 1 |
| 26 | அபிவிருத்தி உதவியாளர் | | III/II/I | 14 | 7 | 7 |
| 27 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சே. | III/II/I | 180 | 179 | 1 |
| 28 | தொழில்நுட்பஉத்தியோகத்தர் | இ.தொ.சே. | III/II/I | 2 | 0 | 2 |
| 29 | போக்குவரத்து உத்தியோகத்தர் | இ.போ.சே. | III/II/I | 1 | 0 | 1 |
| 30 | அரச முகாமைத்துவ உதவியாளர் | பொ.நி.உ.சே. | III/II/I | 43 | 40 | 3 |
| 33 | சாரதி | சா.சே. | III/II/I/SPL | 20 | 18 | 2 |
| 34 | அலுவலக உதவியாளர் சேவை | OES | III/II/SPL | 18 | 11 | 7 |
| 37 | நிழற்படப்படப்பிடிப்பாளர் | தற்காலிக | III/II/I/SPL | 1 | 0 | 1 |
| 38 | கெமரா இயக்குநர் | தற்காலிக | III/II/I/SPL | 1 | 0 | 1 |
| 39 | கெமரா இயக்குநர் உதவியாளர் | தற்காலிக | III/II/I/SPL | 1 | 0 | 1 |
| | **மொத்தம்** | | | **314** | **281** | **33** |

ட்டவணை 1.3.2. 31.12.2018 இல் உள்ளவாறான பதவியணி மாற்றங்கள்

| இல. | பதவி | சேவை/ தரம்/ வகுப்பு | சம்பள த்திட்டம் | அனுமதிக்கப்பட்டபதவியணி | உள்ளே | | | வெளியே | | | பதவியணிமாற்றங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | புதிய நியமனம் | இடமாற்றம் | பதவி உயர்வு | இடமாற்றம் | ஓய்வு பெறுதல் | முடிவுறுத்தல் | |
| 1 | நிர்வாக உத்தியோகத்தர் | Supra | MN-7-2016 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| 2 | பிரதம நிதி உத்தியோகத்தர் | SPL | SL-3-2016 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 3 | பணிப்பாளர் (பொறியியலாளர்) | I | SL-1-2016 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 4 | கணக்காளர் (கருத்திட்டம்) | I | SL-1-2016 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| 5 | உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) | III | SL-1-2016 | 3 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 6 | அபிவிருத்தி உதவியாளர் | III | MN-4 2016 | 14 | 0 | 0 | 0 | 6 | 0 | 0 | 6 |
| 7 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | II/III | MN-4 2016 | 180 | 0 | 0 | 0 | 26 | 0 | 0 | 26 |
| 8 | அரச முகாமைத்துவ உதவிய்யாளர் | I/II /III | MN-2 2016 | 43 | 0 | 8 | 0 | 11 | 0 | 0 | 19 |
| 9 | சாரதிகள் | I/II/ III | PL-3 2016 | 20 | 0 | 6 | 0 | 2 | 0 | 0 | 8 |
| 10 | மு.உ.சே. | I/II/ III | PL-3 2016 | 18 | 0 | 2 | 0 | 0 | 3 | 0 | 5 |
| **மொத்தம்** | | | | | | | | | | | **49** |

## 1.4 பிரிவுகளின் செயலாற்றுகை

### 1.4.1 நிர்வாகப் பிரிவு

நெடுஞ்சாலைகள் வலையமைப்பின் அபிவிருத்தி, முகாமை மற்றும் பராமரிப்பு என்பவற்றுடன் தொடர்புடையதாக நெடுஞ்சாலைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான பௌதீக சூழலை உருவாக்குதல், தொடர்ச்சியானதும் பயனுறுதி வாய்ந்ததுமான சேவைகளை வழங்குதல், ஏனைய நிறுவனங்களுடன் பொருத்தாமான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதலும் அதனைப் பேணிவருதலும், நெடுஞ்சாலைகள் துறையின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் மேற்பார்வை போன்றன நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிர்வாகப் பிரிவின் வகிபாகம்**

- கட்டடங்களுக்காகவும் இயந்திரங்களுக்காகவும் அவற்றின் பராமரிப்புக்காகவும் உரிய நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெற்று அமைச்சின் உட்கட்டமைப்பை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி வாய்ந்ததாகவும் பயன்படுத்துதல்.
- அமைச்சின் நாளாந்த தபால்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் அவற்றின் வினைத்திறனை உறுதிப்படுத்துதலும்.
- அமைச்சின் பாதுகாப்பு மற்றும் துப்புரவு வேலைகளை உரிய முறையில் பராமரித்தல்.
- அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ தொலைபேசிப் பட்டியல்களைச் செலுத்துதல்.
- அமைச்சினதும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து அமைச்சில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளைப் பராமரித்தல்.
- அமைச்சின் செயற்பாடுகளுக்குத் தேவைப்படும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
- அமைச்சின் அனைத்து வாகனங்களையும் பதிவுசெய்தல், பராமரித்தல், காப்புறுதி செய்தல், அவற்றுக்கான வருமான அனுமதிப்பத்திரங்களைப் பெறுதல் மற்றும் தொகுதியிலுள்ள அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருள் வழங்குதல்..
- வாகன விபத்துக்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுத்தலும் குறித்த விபத்துக்களுக்கான காப்புறுதி நட்டஈடுகளைப் பெறுதலும்.

- அமைச்சினதும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினதும் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பயணங்களுடன் தொடர்புடைய கடவுச்சீட்டு, வீசா, போக்குவரத்துச் செலவினங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான விடயங்களைக் கையாளுதலும் நாட்டுக்கு வெளியே செல்வதற்கான அனுமதிகளைப் பெறுதலும்
- அமைச்சின் பதவியணியினரின் லீவு, மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவுகள் என்பவற்றுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாளுதல்.
- அனர்த்தக் கடன்கள், ஆதனக் கடன்கள், மோட்டார் சைக்கிள் கடன்கள், பண்டிகைக்கால முற்பணங்கள் மற்றும் அக்ரஹார காப்புறுதித்திட்டம் என்பன தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அமைச்சின் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தலும் தீர்மானங்களை தொடர்புடைய தரப்பினருக்கு அறிவித்தலும்.
- பாராளுமன்ற வினாக்கள், ஆலோசனைக் குழுவின் முன்மொழிவுகள், பொதுமக்களின் முறைப்பாடுகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் முறைப்பாடுகள், சனாதிபதி செயலகத்திடமிருந்தும் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கிடைக்கின்ற கோரிக்கைகள் என்பன தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கௌரவ அமைச்சர் அமைச்சர், கௌரவ இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உத்தியோக பூர்வப்பயணங்களுடன் தொடர்புடைய தங்குமிடவசதிகளை ஒதுக்குதல் மற்றும் விலைப்பட்டியல்களைச் செலுத்தல்.
- பருவச்சீட்டுக்கள் மற்றும் புகையிரத ஆணைப்பத்திரங்கள் வழங்குதல்.
- பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கொடுப்பனவுகளைச் செய்தலும் அவற்றை தீர்த்தலும், சிறிய பராமரிப்பு வேலைளை பதிவேட்டில் பதிவுசெய்தலும் இற்றைப்படுத்துதலும், சில்லறைச் செலவுப்பணக் கட்டுநிதியைக் கையாளுதலும்.
- சிற்றூழியர்களுக்கான சீருடைக் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்குதல், மொழிபெயர்ப்புக்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல், வீட்டு வாடகைக் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்குதல், மீளளிப்புச் செய்தல், அமைச்சின் உத்தியோகத்தர்களின் பொழுதுபோக்குச் செலவுகளையும் நானாவித செலவுகளையும் செலுத்துதல்.

- சனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பவற்றுடன் தொடர்புடைய சுற்றறிக்கைளை தொடர்புடைய தரப்பினருக்கு அனுப்புதல், தபால் மூல வாக்கெடுப்பை ஒருங்கிணைப்புச் செய்தல், தேர்தல் கடமைகளுக்கு உத்தியோகத்தர்களை நியமித்தல், தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுக் கோரிக்கைகளை தீர்த்தல்.
- நிர்வாகப் பிரிவின் இருப்புப் பதிவேட்டைப் பராமரித்தல், எழுதுபொருட்களைக் கோருதல் பெறுதல் மற்றும் விநியோகத்தல்.
- அரசாங்க நிர்வாக அமைச்சு, நிதித் திட்டமிடல் அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் சுற்றறிக்கைகளையும் கட்டளைகளையும் தனித்தனியாகக் கோவைப்படுத்துதல்.
- சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் மறுதிசையிலும் மொழிபெயர்ப்புக்களைச் செய்தல்.
- அமைச்சின் இணையதளத்தை இற்றைப்படுத்துதல்.
- அமைச்சின் கீழ் இயங்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய புதிய நியமனங்கள், சேவை நீடிப்புக்கள், லீவு அனுமதி என்பன போன்ற தாபனச்செயற்பாடுகள்

## 2018 ஆம் ஆண்டில் அடையப்பட்ட இலக்குகள் தொடர்பான மதிப்பீடு

- வினைத்திறன் மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான அரசாங்க சேவையினை உருவாக்குவதற்கு அவசியமான பௌதீகச் சூழலை உருவாக்குதல்.
- பொதுமக்களுக்கு எல்லா நேரங்களிலும் வினைத்திறன் மிக்க, தரமான சேவையினை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுதல்.
- தேசிய அபிவிருத்தி மிகவும் சரியான, வினைத்திறன்மிக்க முறையில் இலக்குகளை அடைவது தொடர்பில் இவ்அமைச்சினால் செய்யப்படவேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பைப் பேணிவருதல்.
- புதிய அலுவலக முகாமைக் கோட்பாடுகள் தொடர்பில் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தப்படுத்துதலும் பயன்படுத்துதலும்.

- அரசாங்க சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதலும் வெளிப்படைத்தன்மையுடன் சேவைகளை வழங்குதலும்.

**உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைளும் அவற்றின் முன்னேற்றமும்.**

- பதவியணிலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமை.
- வினைத்திறன்மிக்க, பயனுறுதிவாய்ந்த பதவியணியொன்றை உருவாக்கும் நோக்கில் நிறுவனம் சார்ந்த உற்பத்தித்திறன் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது. அது ஒரு சிறந்த அரசாங்க சேவையை வழங்குவதில் உதவியாக அமையும்.
- அலுவலகமுறைகள் மற்றும் தாபன விதிக்கோவை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- உள்ளக நிர்வாகத்தை ஒழுங்கு படுத்துதல்.
- அமைச்சில் புதி எழுதுகூடத்தை தாபித்தலும் ஆவணங்களை ஒழுங்காகப் பராமரித்தலும்
- அமைச்சில் வழிகாட்டிப் பலகைகளை காட்சிப்படுத்தல்

## நிறுவன வரைபடம்


மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)
சிரேஸ்ட உதவிச் செயலாளர்
பணிப்பாளர் (கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் பெறுகை)
உதவிச் செயலாளர்
உதவிச் செயலாளர்(கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் பெறுகை)
நிர்வாக உத்தியோகத்தர்
மொழி பெயர்ப்பாளர்
பிரதம முகாமைத்துவ உதவியாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர் (வீ.அ.அ.உத்தியோகத்தர்கள்) - 160
அபிவிருத்தி உத்தியோகத்தர் (தகவல் நிலையம் (6)
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
மனிதவள முகாமைத்துவ உதவியாளர்(4)
அபிவிருத்தி உத்தியோகத்தர் (13)
பெறுகை உதவியாளர் (2)
அபிவிருத்தி உத்தியோகத்தர் (2)
முகாமைத்துவ உதவியாளர்
நிழற்படப்படப்பிடிப்பாளர் (1)
வீடியோ ஒளிப்பதிவாளர்(1)
முகாமைத்துவ உதவியாளர் (2)
சாரதிகள்
சாரதிகள்
அலுவலக உதவியாளர்கள்- 4
வரவேற்பாளர்/தொ.இயக்குபவர் (1)
நிழற்படப்படப்பிடிப்பாளர் (1)
அலுவலக உதவியாளர்கள்- 1

### 1.4.2 கணக்குப் பிரிவு

வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சின் நெடுஞ்சாலைப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டை கையாளுதல், கட்டுப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்கு நிதிப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. அரசாங்கத்திற்கு உச்ச அளவிலான பொருளாதாரப் பயன்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒதுக்கீடு, கட்டுநிதி மற்றும் செலவினங்களை வினைத்திறன் மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான முறையில் முகாமை செய்தல் இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாகும். நெடுஞ்சாலைகள் துறையின் கீழ் உள்ள அனைத்துச் செயற்திட்டங்களுக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் திறைசேரிக்கும் இடையில் ஒருங்கிணைப்புச் செய்தலும் இச்செயற்திட்டங்களுக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கட்டுநிதி உரிய முறையிலும் தொடர்ச்சியாகவும் கிடைப்பதற்கான வசதி ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல்.

மேலும், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய அரச விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை கடைப்பிடித்து ஒவ்வொரு பிரிவினதும் நிதி செயலாற்றுகை கண்காணிக்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அமைச்சு மட்டத்திலான செயற்பாடுகளை வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் செய்யப்பட்டுள்ள வரையறைகளுக்குள் நின்று அடிப்படையான ஆனால் முக்கியமான இலக்குகளை அடைவதில் இப்பிரிவு வெற்றிகண்டது. 2018 ஆம் ஆண்டில் இப்பிரிவு செயற்திட்டங்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் நிதிக் கூற்றுக்களையும், 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கையும் உரிய திகதிகளுக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தது. முற்பண கணக்கிற்கான இறுதி அறிக்கையொன்று அதற்கான உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டது. முற்பண B கணக்கின் இறுதி அறிக்கையும் முன்தேவைப்படுகின்ற காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும், ஆய்விற்காக வருடாந்த சபை குறித்த வருடத்தினுள் நிறைவேறியது. ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பாகவும் தேவைப்படும் செயற்திறனையும் இறுதிக்கெடுவிற்கு முன்னர்

செயற்பாட்டை நிறைவேற்றவும் பிரிவுகள் தத்தமது சிறந்த முயற்சியை வழங்கியுள்ளது. சமரசம் எதுவுமின்றி அதிகமான விடயங்களில் வெற்றிபெற முடிந்துள்ளது.

கணக்குப் பிரிவானது அவர்களது வழமையான நாளாந்த வேலையின் தன்மையைக் குறைப்பதற்கு ஊழியர்களின் தனிப்பட்ட கடமைகளில் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. வேலை தொடர்பான ஊழியர்களின் போட்டித்தன்மைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் திருப்பதிகரமான ஊழியர்களின் நலன்களை விருத்தி செய்வதற்கும் 2018 ஆம் ஆண்டிற்குள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்றன.

## நிறுவன வரைபடம்–கணக்குப் பிரிவு



### 1.4.3 பெறுகைப் பிரிவு

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் பெறுகைப் பிரிவானது அப்போதைய தேசிய பெறுகை முகவரின் (NPA) அறிவுறுத்தலின்படி தாபிக்கப்பட்டது.அமைச்சின் நிதி மட்டத்தின் கீழ்வரும் பெறுகை மற்றும் அமைச்சரவை மட்ட பெறுகைகள் தொடர்பான எல்லா செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பது இப்பிரிவின் பணிகளாகும். இவ்வமைச்சின் நிறைவேற்று முகவரான (EA) வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA), ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பாகவும் பல்வேறு செயற்திட்ட முகாமைத்துப பிரிவுகளை (PMUs) உருவாக்கியுள்ளது. இந்த செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகள் ஒவ்வொரு வருடத்திற்கான வருடாந்த பெறுகை திட்டத்தை (APP) தயார் செய்து அமைச்சின் பெறுகைப் பிரிவிற்கு அனுப்பும். இதுபோன்ற, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக பிரிவுகள் உள்ளடங்கலாக எல்லா பெறுகைத் திட்டங்களையும் உள்ளடக்கி அமைச்சின் மூலோபாய பெறுகைத் திட்டத்தை தயாரிக்கின்றது.

மேலும், இப்பிரிவு, மேற்குறித்த மூலோபாய பெறுகைத் திட்டத்தின் அமுலாக்கத்தை பொதுத்திறைசேரி, ஏனைய நிரல் அமைச்சுக்கள், தேசிய பெறுகை ஆணைக்குழு, பெறுகை மேன்முறையீட்டுச் சபை போன்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்யும். இப்பிரிவின் மனித வளங்களில், பெறுகை நிபுணர் ஒருவர், பெறுகை உதவியாளர் ஒருவர், இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள், ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோர் அடங்குவர்.

**இப்பிரிவின் பிரதான பணிகள்**

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் (நெடுஞ்சாலைகள் பிரிவு) பெறுகைப் பிரிவின் பிரதான பணிகள் பின்வருமாறு.

- வருடாந்த பெறுகைத் திட்டத்துடன் தொடர்புடைய அமைச்சின் எல்லா பிரிவுகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகள்

ஆகியவற்றிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதலும் அமைச்சிற்கான மூலோபாய பெறுகைத் திட்டத்தை தயாரித்தலும்.

- அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (SCAPC) அல்லது அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு (CANC) அல்லது அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் பெறுகைக் குழுக்கள் (CACPCs) என்பவற்றுக்கு உதவுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை (TECs) அல்லது செயற்திட்டக் குழுக்களை (PCs) நியமிப்பதில் பொதுத் திறைசேரியுடன் இணைந்துசெயற்படுதல்.
- மேலும் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளருடன் ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் அமைச்சு மட்டத்திலான பெறுகைக் குழுக்களையும் (MPCs), திணைக்கள மட்டத்திலான பெறுகைக் குழுக்களையும் (DPCs), செயற்திட்ட மட்டத்திலான பெறுகைக் குழுக்களையும் (PPCs) மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களையும் பெறுகை பிரிவு நியமித்தது. ஆலோசகனைப் பெறுகைகளுக்கான உரிய ஆலோசகர் பெறுகைக் குழுக்களும் இப்பிரிவினால் நியமிக்கப்பட்டன.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் செயற்திட்டக் குழுக்களுக்கான விடய நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றைய தொடர்புடைய அமைச்சுகள் மற்றும் முகவர் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்.
- அமைச்சு மற்றும் அமைச்சரவை மட்டத்திலான பெறுகைகளுடன் தொடர்புடைய கூட்டங்களை ஒழுங்குபடுத்தலும் ஆவண அனுமதிகளுக்குரிய அந்த தீர்மானங்களை பதிவு செய்தல், பிற்சேர்க்கைகள் வழங்குதல், ஒப்பந்தங்கள் வழங்குதல் மற்றும் வேறுபாடுகளுக்கு அனுமதி வழங்குதல்.
- எல்லா பெறுகை செயற்பாடுகளுடனும் தொடர்புடைய அமைச்சரவை விஞ்ஞானங்களை தயாரிப்பதற்கு உதவுதல்.

- வெற்றி பெறாத விலை மனுதாரர்கள் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் பெறுகை மேன்முறையீட்டுச் சபையுடன் (PAB) இணைந்து செயற்படல்.
- மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தலும் அவற்றை திறைசேரியில் அமைக்கப்பட்டுள்ள பெறுகைக் கண்காணிப்பு அலகுக்கு (PMU) சமர்ப்பித்தலும்.
- தேசிய பெறுகை ஆணைக்குழுவுடன் இணைந்து தேவைப்படும் தகவல்களை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வழங்குதல்.
- அமைச்சின் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக மற்றைய பங்குதாரர் நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்படும் வழக்கமான கூட்டங்களில் பங்குபற்றல்.
- அமைச்சு அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்காக வழக்கமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல்.

2018 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அமைச்சரவை மட்டத்திலான 26 பெறுகைகளையும் அமைச்சு மட்டத்திலான 2 பெறுகைகளையும் 2018 ஆம் ஆண்டில் பெறுகைகள் பிரிவினால் வழங்க முடிந்தது.

**பிரச்சினைகளும் சவால்களும்**

அமைச்சின் வருடாந்த பெறுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பின்வரும் பிரச்சினைகளும் சவால்களும் அடையாளங்காணப்பட்டன.

அ) ஆரம்ப வடிவமைப்புகளின் அடிப்படையில் கணியங்களின் சட்டகத்தைத் (BOQs) தயாரித்தல், மதிப்பீடுகளின் துல்லியத்தன்மை உத்தரவாதமற்றது. இதன் விளைவாக, செயற்திட்டம் நிறைவடையும் போது செயற்திட்டச் செலவு எதிர்பாரா விதமாக அதிகரித்துள்ளது.

ஆ) மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்பட முன்னர் வடிவமைப்புகள் தயாரித்தல், கணியங்களின் சட்டகத்தை தயாரித்தல், காணி சுவீகரிப்பு வேலைகள், சூழல்சார்

ஆய்வுகள் என்பன போன்ற பெறுகை தயார்படுத்தல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன.

இ) செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நோக்கெல்லையை மாற்றுதல் மற்றும் பெறுகைத் திட்டத்தில் முற்றிலும் புதிய விடயங்களை உள்ளடக்குதல்.

ஈ) பெறுகை தொடர்பாக ஊழியர்களுக்கு குறைவான அறிவு காணப்படுதல் (இதனை திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் சரிப்படுத்தலாம்).

உ) விலை மனு ஆவணங்களில் /விவரக் குறிப்புக்களில் காணப்படும் குறைபாடுகள் செயன்முறையில் தாமதங்களை ஏற்படுத்துவதன் விளைவாக பெறுகைக்கால அட்டவணையைப் (PTS) பின்பற்ற முடியாத நிலையை உருவாக்குகின்றது.

### 1.4.4 அபிவிருத்திப் பிரிவு

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நெடுஞ்சாலைகள் துறையின் அபிவிருத்திப் பிரிவானது காணிப் பிரிவு மற்றும் கிராமிய வீதி அபிவிருத்திப் பிரிவு என்ற 2 பிரிவுகளைக் கொண்டுள்ளது

**நிறுவன வரைபடம்**


மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி)
பணிப்பாளர் (மகநெகும)
சிரேஸ்ட உதவிச் செயலாளர்
பிரதி/உதவிப் பணிப்பாளர்
பொறியியலாளர்
உதவிச் செயலாளர் (அபிவிருத்தி)
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (11)
திட்டமிடல்உதவியாளர்கள் (2)
அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (8)
அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (5)
கொமி.உக்கியோகக்கர்
முகாமைத்துவ உதவியாளர்கள் (5)
சாரதிகள் (2)
அலுவலக உதவியாளர்கள் (3)

### 1.4.5 காணிப் பிரிவு

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நெடுஞ்சாலைகள் துறையின் காணிப் பிரிவானது புதிதாக நிர்மாணிக்கப்படும்/புனரமைக்கப்படும் நெடுஞ்சாலைகளுக்கான காணி சுவீகரிப்புச் செயன்முறையுடன் தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகளுக்குமான வசதி ஏற்பாடுகளைச் செய்வதற்கும் சம்மந்தப்பட்ட பங்குதாரர்களுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் உரிய மட்டத்திலான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கும் பொறுப்பாகவுள்ளது.

#### 2018 ஆம் ஆண்டில் இப்பிரிவின் தொழிற்பாடுகள்

- காணி சுவீகரித்தல் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் காணி சுவீகரித்தல் முன்மொழிவுகளுடன் தொடர்புடைய கௌரவ.அமைச்சர்களின் பரிந்துரைகளை காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்புகள் அமைச்சிற்கு சமர்ப்பித்தல். புதிய வீதிச் செயற்திட்டங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்தும் பொருட்டு காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இடைக்கால கட்டளை 38 (a) இன் கீழ்காலியாகவுள்ள இடங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
- காணி சுவீகரித்தல் சட்டத்திற்கிணங்க காணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் சம்பந்தப்பட்ட மேலதிக செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பான நடவடிக்கைகளை எடுத்தல்.
- காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்புகள் அமைச்சு, வீதிச் செயற்திட்டங்கள், மதிப்பீட்டுத் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், தொடர்புடைய பிரதேச செயலகங்கள் மற்றும் அரசாங்க அச்சகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளல்.
- காணி சுவீகரித்தல் மற்றும் விசேட மீள்குடியேற்ற குழுவின் (Super LARC) கூட்டங்களை நடாத்துதல், குழுவின் தீர்மானங்களை தயாரித்தல் மற்றும் அவற்றை அறிவித்தல்.

- ஜனாதிபதிச் செயலகம், பிரதமர் அலுவலகம், பாராளுமன்ற குழுக்கள் ஆகியவற்றினால் வேண்டப்படும் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
- மக்களின் குறைபாடுகளை தீர்ப்பதற்கு உதவுதல்.
- புதிய வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் வீதி அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்தல் ஆகியவற்றுக்கு காணிகளை சுவீகரிக்கும் போது பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றுவதற்கான காணிகளை கொள்வனவு செய்வதற்கு காணிக் கொள்வனவு குழுவின் ஊடாக தேவையான ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளல்.
- காணி சுவீகரித்தல் சட்டத்தின் பிரிவு 39 (I) ன் கீழ் தள்ளுபடி செய்தல். ஆனால் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவைப்படாது என அடையாளங்காணப்பட்டவைகளுக்கு 39 (அ) (i) பிரிவின் கீழ் விலக்களிக்கப்படுவதற்கான கௌரவ. அமைச்சரின் பரிந்துரைகளை காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்கு சமர்ப்பிக்க தேவையில்லை.
- குறித்த சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் கட்டளையை வழங்கியதன் பின்னர், வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவைப்படாது என அடையாளங்காணப்பட்ட காணிகள் தொடர்பாக காணி சுவீகரித்தல் சட்டத்தின் பிரிவு 50 இன் கீழ் தள்ளுபடி செய்வதற்கான பரிந்துரைகளை சமர்ப்பித்தல்

### 1.4.6 (மகநெகும) கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

கிராமிய அபிவிருத்திப் பிரிவானது நாட்டில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக சிறந்த கிராமிய வீதிவலையமைப்பை மேம்படுத்தும் நோக்கில் கடந்த 15 வருடங்களாக இயங்கி வருகின்றது. பின்வருவன இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாகும்:

- வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டங்களையும் சுற்றறிக்கைகளையும் தயாரித்தல்.
- வருடாந்த திட்டம் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க கிராமிய வீதிக் கருத்திட்ட முன்மொழிவுகளைச் சேகரித்தல்.

மதிப்பீடுகளுக்கு தேவைப்படும் பரிந்துரைகளைப் பெறுதலும் அவற்றை தயாரித்தலும்

அமுலாக்க முகவர்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்.

கருத்திட்டங்களுடன் தொடர்புபடும் அமுலாக்க முகவர் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதலும் சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு தேவையான அறிவூட்டல்களை வழங்குதல்

களச்சோதனைகளையும் அவதானிப்புக்களையும் நடாத்துதல்.

அமைச்சுக்கான விலைப்பட்டிகளைச் சேகரித்து கொடுப்பனவுகளைத் தயார் செய்தல்.

முன்னேற்றத்தை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்

**2018 ஆம் ஆண்டில் முகங்கொடுத்த பிரச்சினைகளும் தடைகளும்**

i. உரிய தரப்பினர்களிடமிருந்து வீதிக் கருத்திட்ட முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தாமதம் காரணமாக இலக்குகளை அடைவதில் சிக்கல்கள்

ii. தேவைப்படும் ஒப்புதல்கள்/அனுமதிகள் உள்ளூராட்சிகளால் வழங்க்கப்படாத சில பிரதேசங்களில் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் அல்லது வேலையை ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதம்

iii. கருத்திட்டங்களுக்கு திறைசேரியிலிருந்து தேவைப்படும் கட்டுநிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் எதிர்கொண்ட சில நிதிச் சிக்கல்கள்

iv. ஆய்வுகூட வசதிகள் போதாமையினால் சில ஆய்வுகூடங்களிலிருந்து பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டன

### 1.4.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் செயற்படும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுநிதிப் பிரமாணம் 133 இற்கு இணங்க

நிறுவப்பட்டது. நிதிப் பிரமாணம் 128 இல் தரப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகளை செயற்படுத்தும் பொருட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினால் இது தாபிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் ;

i. அமைச்சில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்தல்.
ii. அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திட்டங்களை அமுல்படுத்துவதில் அடையப்பட்ட முன்னேற்றத்தை ஆராய்ந்தறிவதற்கும் திட்டங்கள் மற்றும்நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உதவுதல்
iii. அபிவிருத்திக் கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கிடையிலும் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்குமிடையில் ஒருங்கிணைப்பாளராக செயற்படல்.

**இப்பிரிவின் வகிபங்கும் அடையப்பட்ட முன்னேற்றமும்**

i. உள்ளக ஆய்வு மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் நோக்கங்களைஅடைவதில் வெற்றிகரமாகவுள்ளதா என ஆராய்ந்தறிதல்
i. கணக்குகளினதும் மற்றைய அறிக்கைகளினதும் உண்மைத்தன்மையை ஆராய்ந்தறிதலும் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளை மதிப்பீடு செய்தலும்
ii. பின்பற்றப்பட்ட கணக்கீட்டு முறைகளுக்கூடாக தேவைப்படும் தகவல்கள் சரியாக பெறப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்தறிதல்
iii. ஊழியர்களின் செயலாற்றுகைத் தரத்தை மதிப்பிடுதல்
iv. அனைத்து சேதங்களிலிருந்தும் நிறுவனத்தின் சொத்துகளைப் எவ்வாறு பாதுகாப்பது என்பதை ஆராய்ந்தறிதல்
v. தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்குவிதிகள், பொது நிர்வாகம் மற்றும் திறைசேரிச் சுற்றறிக்கைகள் போன்றவற்றில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் முறையாக பின்பற்றப்படுகின்றதா என்பதை ஆராய்ந்தறிதல்

vi. வளங்களின் வீண்விரயத்தை தவிர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினதும் வழிவகையினதும் வெற்றியை ஆராய்ந்தறிதல்

vii. நிறுவனத்தில் கணக்கீட்டு நடைமுறைகளையும் தொழிற்பாடுகளையும் ஆய்வு செய்தல் மற்றும் உடைமைகளும் சொத்துக்களும் பாதுகாப்பாக, முறையாக மற்றும் சிக்கனமாக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என ஆராய்ந்தறிதல்.

viii. விசேட விசாரணைகளை மேற்கொள்ளுதல்

நிதி ஒழுங்குவிதிகளுக்கிணங்க இந்நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக வினைத்திறனான அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் வழங்குவதற்கு உள்ளக கணக்காய்வுப் பிரிவு 2018 ஆம் ஆண்டில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் விசேட விசாரணைகள்

இவ்வாண்டில் அடையாளங்காணப்பட்ட இடர் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அமைச்சு மற்றும் கருத்திட்டங்களுக்கான கணக்காய்வுகள் பின்வரும் கணக்காய்வுத் துறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- செயலாற்றுகைக் கணக்காய்வு
- நிதிக் கணக்காய்வு
- நிறுவனசார் கணக்காய்வு
- பௌதீக களப் பரிசோதனை

உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் தயாரிக்கப்பட்ட உள்ளக கணகாய்வுத் திட்டத்திற்கிணங்க மேற்கூறிய துறைகளின் கீழ் கணக்காய்வுகள் மற்றும் மேற்பார்வைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டதுடன் அமைச்சினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் திட்டங்களின் ஊடாக எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைவதற்காக வழிகாட்டல் தரப்பட்டுள்ளது.

**<u>இலக்குகளை அடைதலும் மீளாய்வும்</u>**

2018 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் திட்டத்திற்கிணங்க கணக்காய்வு நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கணக்காய்வு ஆய்வுகளினதும் விசேட விசாரணைகளினும் ஊடாக வினைத்திறனான கணக்காய்வு தெளிவுபடுத்தல்களையும் அவதானிப்புகளையும் மற்றும் பரிந்துரைகளையும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு வழங்கியுள்ளது.இதனால் ஆளணி முகாமைத்துவம், நிர்வாக மற்றும் கணக்கீட்டு குறைபாடுகள், வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளில் குறைபாடுகளை அகற்றுவதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையைப் பலப்படுத்துவதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளது.

**நிறுவன வரைபடம்**



### 1.4.8 பொறியியல் பிரிவு

இலங்கையில் நெடுஞ்சாலைகள் நிர்மாணம் தொடர்பான அனைத்துப் பொறுப்புக்களையும் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் சார்பில் பொறியியல் பிரிவு கொண்டுள்ளது. அமுலாக்கப்படும் செயற்திட்டங்களின் மேற்பார்வை, முன்னேற்ற மீளாய்வு, செயற்திட்டங்கள் தொடர்பான தொழில்நுட்பக் கணக்காய்வு என்பன முழுமையாக பொறியியல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**இப்பிரிவின் தொழிற்பாடுகள் மற்றும் கடமைகள்**

- நெடுஞ்சாலை நிர்மாணங்களின் பொறியியல் பணிகள் அனைத்தையும் மேற்பார்வை செய்தலும் தொழில்நுட்பக் கணக்காய்வுகளை நடாத்துதலும்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களின் முன்னேற்றத்தையும் தரத்தையும் மேற்பார்வை செய்தல்.
- வருடாந்த நெடுஞ்சாலை வீத அட்டவணையைத் (HSR) தயாரித்தல்.
- வீதிகளைப் பொறுப்பேற்றல்.
- தார் கொள்வனவாளர்களின் வெளிப்படைத்தன்மையையும் அடையாளத்தையும் உறுதிப்படுத்தல்.
- “செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக்” (PSC) கூட்டங்களை நடாத்துதலும் அவற்றில் பங்கேற்றலும்
- ஒவ்வொரு செயற்திட்டத்தினும் செயலாற்றுகை அறிக்கைகளை மதிப்பீடு செய்தல்.
- அமைச்சின் பெறுகைக் குழுவுக்குத் (PPC) தலைமை தாங்குதல்.
- சனாதிபதி செயலகம், பிரதம மந்திரியின் அலுவலகம், திறைசேரி ஆகிய இடங்களில் நடைபெறும் முக்கியமான கூட்டங்களில் செயலாளரின் பணிப்புரைக்கு ஏற்ப பங்கேற்றல்.
- ஒப்பந்தக்காரர் உரிமைகள் மற்றும் முரண்பாட்டுத் தீர்வுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல்.
- அமைச்சின் கணனி வலையமைப்பை இற்றைப்படுத்திப் பேணிவருதல்.

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் ஒப்படைக்கப்படும் கடமைகளை மேற்கொள்ளுதல்.

**நிறுவன வரைபடம்**



**இலக்குகளும் மீளாய்வும் -2018**

- நிர்மாணிக்கப்பட்ட நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களின் முன்னேற்றமும் தரமும் மற்றும் அவற்றின் செயல்நிறைவேற்ற அறிக்கைகளும் மேலதிகச் செயலாளரினால் (பொறியியல்) மேற்பார்வை செய்யப்பட்டதுடன் செயற்திட்ட வழிப்படுத்தும் குழுவில் (PSC) செயற்திட்டக் கண்காணிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் வழமையான முறையில் இப்பிரிவினால் கலந்துரையாடப்பட்டது.
- வருடாந்த நெடுஞ்சாலை வீத அட்டவணை (HSR)– 2018 பெப்ரவரியில் வழங்கப்பட்டது.
- நெடுஞ்சாலைகள் நிர்மாண வேலை தொடர்பான பொது மக்களின் முறைப்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் அமைச்சின் செயலாளரினால் பெறப்பட்டதுடன் தொடர்புடைய கள மீளாய்வுகளுடன் அவை மேற்பார்வை செய்யப்பட்டன.
- 2018 ஆம் ஆண்டில் 17 தார் கொள்வனவாளர்களை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**சவால்களும் பிரச்சினைகளும்**

- ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்திற்குள் நெடுஞ்சாலை வீத அட்டவணையை (HSR) வழங்குவதில் சிக்கல் தன்மை.
  - ➢ விநியோகத்தர்களிடமிருந்து சம்பந்தப்பட்ட விலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பல நினைவூட்டல்களை அனுப்ப வேண்டியுள்ளமை.
  - ➢ அரசாங்கத்தின் முன்னெடுக்கப்பட்ட கொள்கை மாற்றங்கள் காரணமாக விலை வேறுபாடுகள்.
- வீதிகளை பொறுப்பேற்றல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கு மாகாண சபைகளிடமிருந்து உடனடி பதில்கள் கிடைக்கப்பெறாமையால் தாமதமானமை.

### 1.4.9 திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவானது நெடுஞ்சாலைகள் துறையின் கீழ் உள்ள அனைத்து அபிவிருத்திச் செயற்திட்டங்களினதும் திட்டமிடல், அமுலாக்கம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பவற்றுடன் தொடர்புடைய கொள்கைகளை உருவாக்கின்ற, மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புச் செய்கின்ற பணிக்குப் பொறுப்பாகவுள்ள பிரதான பிரிவாக விளங்குகின்றது. பின்வருவன இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

- தொடர்புடைய ஆர்வலர்களின் ஆலோசனையுடன் நெடுஞ்சாலைகள் துறைக்கான கொள்கைகளை உருவாக்குதல்.
- நெடுஞ்சாலைகள் துறை அபிவிருத்திச் கருத்திட்டங்களின் திட்டமிடல், அமுலாக்கம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு.
- அரசாங்கத்தின் முன்னுரிமைகளுக்கும் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளுக்கும் இணைந்த வகையில் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல்.
- வருடாந்த வரவுசெலவுத்திட்ட விவாதத்திற்கான வருடாந்த செயல்நிறைவேற்ற அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கைகளைத் தயார்செய்தல்.
- பல்வேறு அதிகாரசபைகளினால் கோரப்படும் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்.
- வீதித் துறையுடன் தொடர்புடைய தரவுகளைத் தொகுத்தலும் அத்தரவுகளை மாற்றங்களுக்கு ஏற்ப இற்றைப்படுத்துதலும்.
- அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் பாரிய கருத்திட்டங்கள் அனைத்துக்குமான கருத்திட்ட வழிநடத்தல் குழுக் (PSC) கூட்டங்களை நடாத்துதலும் ஒருங்கிணைப்புச் செய்தலும்.
- கருத்திட்டப் பிரேரணைகளையும் கோட்பாட்டுப் பத்திரங்களையும் மதிப்பீடு செய்து தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும் அங்கீகாரத்திற்காகவும் அரசாங்கத்திடமிருந்து நிதி பெறுவதற்காகவும் சமர்ப்பித்தல்.

- சர்வதேச உதவி வழங்கும் முகவர் நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட உதவிக் குறிப்பு, புரிந்துணர்வு ஒப்பந்தம், கலந்துரையாடல் அறிக்கைகள் என்பன போன்ற பல்வேறு உத்தியோகபூர்வ ஆவணங்களை செயலாளரின் சார்பில் மதிப்பீடு செய்து செய்து கருத்துக்களை முன்வைத்தல்.
- பல்வேறுபட்ட நிறுவனங்களால் நடாத்தப்பட்ட கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் பிரதிநிதியாகப் பங்கேற்றதுடன் இவ்அமைச்சின் நோக்கு, பணி, தொழிற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி முன்னுரிமைகள் என்பவற்றுக்கு இணங்கிய முறையில் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பங்கேற்றல்.
- “போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்” தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிலும் “ வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகனப் போக்குவரத்து முகாமை” தொடர்பான உபகுழுவிலும் செயலாளரின் சார்பில் பிரதிநிதித்துவம் செய்து ஒருங்கிணைத்தல்.
- தேவைப்பாடுகளுக்கு இணங்க நிறுவனங்களுக்கு முன்னேற்ற அறிக்கைகளை நேரடியாக நிறைவு செய்து சமர்ப்பித்தல்.

2018 ஆம் ஆண்டில், 23 கருத்திட்ட முகாமை அலகுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் 113 கருத்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. செயலாற்றுகை அறிக்கை – 2017 ஐ முழுமையாக நிறைவு செய்து சமர்ப்பித்தல்; முன்னேற்ற அறிக்கை – 2018, 2018 ஆம் ஆண்டின் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள், மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் செயற்திட்டங்களின் இற்றைப்படுத்தப்பட்ட நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்களுடன் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் என்பவற்றை உரிய முறையில் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல். மேலும் செயற்திட்டப் பணிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் இப்பிரிவின் தொழிற்பாடுகளின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## நிறுவன வரைபடம்


சிரேஸ்டநிகழ்ச்சித்திட்டப்ப
ணிப்பாளர்
பணிப்பாளர்
(திட்டமிடல்மற்றும்மேற்பார்வை)
உதவிப்பணிப்பாளர்
(திட்டமிடல்மற்றும்மேற்பார்வை)
உதவிப்பணிப்பாளர்
(திட்டமிடல்மற்றும்மேற்பார்வை)
திட்டமிடல் உதவியாளர் (2)
அபிவிருத்திஉத்தியோகத்தர் (4)
முகாமைத்துவஉதவியாளர் - (3)
சாரதிகள்(2)
அலுவலகஉதவியா
ளர் ( 1)

## 1.5 பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் (நெடுஞ்சாலைகள் துறை)

2018 ஆம் ஆண்டில் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வகை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|
| **உள்நாட்டுப் பயிற்சிகள்** | |
| நிறைவேற்றுத் தரத்தினர் | 08 |
| நிறைவேற்றுத் தரம் அல்லாதவர்களும் ஏனையவர்களும் | 104 |
| **வெளிநாட்டுப் பயிற்சிகள்** | |
| நிறைவேற்றுத் தரத்தினர் | 08 |
| நிறைவேற்றுத் தரம் அல்லாதவர்களும் ஏனையவர்களும் | - |
| **உள்நாட்டுக் கருத்தரங்கு** | |
| நிறைவேற்றுத் தரத்தினர் | - |
| நிறைவேற்றுத் தரம் அல்லாதவர்களும் ஏனையவர்களும் | |
| **வெளிநாட்டுக் கருத்தரங்கு** | |
| நிறைவேற்றுத் தரத்தினர் | - |
| நிறைவேற்றுத் தரம் அல்லாதவர்களும் ஏனையவர்களும் | |

### 1.5.1 உத்தியோக பூர்வ வெளிநாட்டுப் பயிற்சிகள்

| இல | பெயர் | பதவி | நாடு | காலப்பகுதி | குறிக்கோள் |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.பி.ரணவீர | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) | சீனா | 2018.05.04 2018.05.14 | கல்விச் சுற்றுலா – சீனா |
| 02 | திரு.எச்.சி.எஸ்.குணதிலக்க | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) | கொரியா | 2018.09.18- 2018.09.20 | 6வது பூகோள உட்கட்டமைப்பு ஒத்துழைப்பு மாநாடு |
| 03 | திரு.டி.டி.மாத்தரஆராச்சி | சிரேஸ்ட நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) | தாய்லாந்து | 2018.02.05- 2018.02.16 | நிலைத்தகு பாவனை மற்றும் உற்பத்தி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 | திருமதி.எச்.ஐ.பள்ளலாவல | பணிப்பாளர் (செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் பெறுகை) | இந்தியா | 2018.01.11-2018.01.12 | இலங்கை அரச அதிகாரிகளுக்கான கடன் வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பட்டறை |
| 05 | திரு.டி.டி.மாத்தரஆராச்சி | சிரேஸ்ட நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) | தாய்லாந்து | 2018.09.17-2018.09.18 | போக்குவரத்து இணைப்பு தொடர்பான BMISTEC பெருந்திட்ட பட்டறை |
| 06 | செல்வி.டபிள்யூ.பி.கல்யாணி | உதவிப் பணிப்பாளர் (மகநெகும) | தாய்லாந்து | 2018.01.22-2018.01.26 | உட்கட்டமைப்புக் கருத்திட்ட முகாமைத்துவம் |
| 07 | திரு.டபிள்யூ.எச்.கே.டீ.பீ. ரத்நாயக்க | பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) | | | |
| 08 | திருமதி.பி.அமரதுங்க | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) | சீனா | 2018.07.11-2018.07.30 | Seminar on Highway Building for Foreign Officials Under Belt and Road Initiative கீழ் வெளிநாட்டு உத்தியோகத்தர்களுக்கான நெடுஞ்சாலை கட்டிடம் தொடர்பான கருத்தரங்கு |
| 09 | திரு.ஈ.என்.தயாரத்ன | உதவிச் செயலாளர் (கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் பெறுகை)) | சீனா | 2018.06.07-2018.06.21 | 2018 Seminar on Cross Border RMB Settlement & RMB International for Countries under Belt &Road Initiative |
| 10 | திரு.ஜே.கே.என்.பெரேரா | பிரதம நிதி உத்தியோகத்தர் | இந்தியா | 2018.09.09-2018.09.15 | இரண்டாம் நாடு கல்விச் சுற்றுலா |
| 11 | திரு.டி.சி.திசாநாயக்க | செயலாளர் | வோஷிங்டன் | 2018.09.30-2018.10.05 | பிரதமர் அலுவலகத்தின் கூட்டிணைவுடன் Millennium Challenge (Pvt) Ltd. இனால் நடத்தப்பட்ட கருத்தரங்கு |

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

*குறிக்கோள்*

*சமூகத்தினரின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏதுவாக அதி சிறந்த உயர் வீதி வலைப்பின்னல்களை வழங்குவதன் மூலம் உயர் வீதி பொறியியலில் பல்வகையான முன்னோடி தேசிய நிறுவனமாகத் தொழிற்படல்*



*பணிநோக்கு*

*நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வழியமைக்கும் முகமாக மக்களினதும் பொருட்களினதும் நகர்விற்காக சுற்றாடலுக்கு தீங்கற்ற விதத்தில் நகர்வினையும் அணுகுகையையும் பாதுகாப்பானதும் சௌகரியமானதுமான ஏற்றுக் கொள்ளக்கூடிய மட்டத்தில் உறுதிப்படுத்தி வீதித் துறையின் தேசிய முன்னோடி நிறுவனமாக போதியளவான வினைத்திறனான தேசிய வீதி வலைப்பின்னலை வழங்குதல்*

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களில்ஒன்றான வீதி அபிவிருத்தி அதிகாரசபை நெடுஞ்சாலைகள் துறைக்கான இலங்கையிலுள்ள பிரதான நிறுவனமாகும். 1981 ஆம் ஆண்டின் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சட்ட இல.73 இன் கீழ் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் நியதிச்சட்ட தொகுதியாக கூட்டிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) 1986 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைகள் திணைக்களத்தின் பின்னுரிமையாளராகியது. அப்போதிலிருந்து, தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை பராமரிப்பதும் தரமுயர்த்துவதும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்பாகும்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நாட்டின் முதன்மையான நெடுஞ்சாலை அதிகாரசபையாவதுடன் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை பேணுதல் மற்றும்

அபிவிருத்தி செய்தல், பெருந்தெருக்கள் (A தரம்), பிரதான வீதிகள் (B தரம்) மற்றும் கடுகதிப்பாதைகளை ஒன்றிணைத்தல், தற்போதுள்ள வீதி வலையமைப்பின் வளர்ச்சியின் பொருட்டு புதிய நெடுஞ்சாலைகள், பாலங்கள் மற்றும் கடுகதிப்பாதைகளை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் போன்றவற்றுக்கு பொறுப்பு வாய்ந்ததாகும்.

## 1.6 நிதிச் செயலாற்றுகை

2018 டிசம்பர் இறுதி வரையான நிதி ஒதுக்கீடுகளும் செலவுகளும் கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.6.1 மொத்தச் செலவினம்**

திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு மற்றும் மொத்தச் செலவினம்

| விபரம் | தேறிய ஒதுக்கீடு 2018 (இ.ரூ.) | செலவினம் 2018 ( இ.ரூ.) | நிதிமுன்னேற்றம்(%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 263,280,000.00 | 227,825,022.91 | 87% |
| மூலதனச் செலவினம் | 196,055,130,000.00 | 166,449,293,419.16 | 85% |
| **மொத்தம்** | **196,318,410,000.00** | **166,677,118,442.07** | **85%** |

**அட்டவணை 1.6.2 மீண்டெழும் செலவினம்**

| விபரம் | தேறிய ஒதுக்கீடு 2018 (இ.ரூ.) | செலவினம் 2018 ( இ.ரூ.) | நிதிமுன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| தனியாள் ஊதியங்கள் | 207,800,000.00 | 172,926,114.02 | 83% |
| ஏனைய செலவினம் | 55,480,000.00 | 54,898,908.89 | 99% |
| **மொத்தம்** | **263,280,000.00** | **227,825,022.91** | **87%** |

## அட்டவணை 1.6.3 மூலதனச் செலவினம்

| தலைப்பு | நிகழ்ச்சித்திட்ட | கருத்திட்டம் | வகை/பொருள்/விடயம்பற்றியவிபரம் | திருத்தம் செய்யப்பட்ட ஒதுக்கீடு 2018(இ.ரூ) | லெவினம் 31-12-2018 இல் (இ.ரூ) |
|---|---|---|---|---|---|
| 117 | 1 | 1 | அமைச்சர் அலுவலகத்தின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் | 3,208,000.00 | 3,013,886.12 |
| 117 | 1 | 2 | பொது நிர்வாகப் பிரிவின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் | 4,792,000.00 | 3,984,101.71 |
| 117 | 1 | 11 | இராஜாங்க அமைச்சர் அலுவலகத்தின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் | 2,950,000.00 | 2,118,727.90 |
| 117 | 2 | 3 | கடுகதிப்பாதைகள் அபிவிருத்தி | 78,627,250,000.00 | 61,454,939,844.28 |
| 117 | 2 | 4 | நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி | 79,201,600,000.00 | 71,948,619,712.86 |
| 117 | 2 | 5 | வீதிகளை அகலப்படுத்தலும் மேம்படுத்தலும் | 10,865,000,000.00 | 7,559,000,000.00 |
| 117 | 2 | 6 | பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் நிர்மாணம் | 14,333,000,000.00 | 13,311,019,373.29 |
| 117 | 2 | 7 | இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வீதிகளின் புனரமைப்பு | 3,805,000,000.00 | 3,780,745,910.92 |
| 117 | 2 | 8 | நிறுவனம்சார் ஒத்துழைப்பு | 6,112,000,000.00 | 6,112,000,000.00 |
| 117 | 2 | 9 | “மகநெகும” கிராமிய வீதி அபிவிருத்தி | 3,100,330,000.00 | 2,003,807,172.71 |
| மொத்தம் | | | | **196,055,130,000.00** | **166,179,248,729.79** |

## அட்டவணை 1.6.4 முற்பணக் கணக்கு

| விபரம் | அதிகபட்ச செலவு வரையறைகள் (இ.ரூ.) | ஆகக்குறைந்த வரவு வரையறைகள் (இ.ரூ.) | கடன் மீதிக்கான அதிகபட்ச வரையறைகள் (இ.ரூ.) |
|---|---|---|---|
| **2018 ஆம் ஆண்டுக்கான அசல் வரையறை** | 27,000,000.00 | 10,000,000.00 | 58,000,000.00 |
| **2018 ஆம் ஆண்டுக்கான அசல் தொகை** | 25,131,491.90 | 13,361,924.86 | 51,612,328.06 |

## 2.0 மேம்பட்ட முதலீடுகளும் புதிய முன்னெடுப்புக்களும்

உயர் மட்டத்திலான பொருளாதார வளர்ச்சியைப் பேணி வருவதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இவ் அபிவிருத்தி இலக்கினை அடைவதற்கு வீதித் துறை சிறந்த நிலையில் காணப்படுவது அத்தியவசியமாகும். நாடு முழுவதிலும் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் பாரியளவில் முதலீடு செய்து வருகின்ற நிலையில் இ.ரூ.136,263 மில்லியன் என்ற கணிசமான அளவு தொகையை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இது 2018 ஆம் ஆண்டில் 117 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட தலைப்பின் கீழ் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி துறைக்குமேலதிக ஒதுக்கீடு மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் இ.ரூ.196,318 மில்லியன் ரூபா வரையில் திருத்தப்பட்டது.

### 2.1 புதிய முன்னெடுப்புக்கள்

#### 2.1.1 புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துறுகிரிய வரையான நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை

புதிய களனிப் பாலத்திலிருந்து ராஜகிரிய ஊடாக அத்துறுகிரிய வரையிலான நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலையானது அடிப்படையில், தற்போது காணப்படும் கடுகதிப்பாதை வலையமைப்புக்கு ஏற்ற விதத்தில் கொழும்பு நகரத்திற்கும், சூழவுள்ள நகரப் பிரதேசங்களுக்கும் இடையிலான இணைப்பை மேம்படுத்துவதை பிரதான நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகரப் பிராந்தியத்தில் நிலவும் வாகனப் போக்குவரத்து நெரிசலைத் குறைப்பதும் இக்கருத்திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும். இப்பாதையைப் பயன்படுத்துபவர்கள் தெமட்டகொடை, ராஜகிரிய, பத்தரமுல்லையில் பாராளுமன்றத் தொகுதி நுழைவாயில், கொஸ்வத்தை ஆகிய இடங்களில் அமைக்கப்படும் இடைமாறல்களின் ஊடாக இந்த நிலமட்டத்திற்கு மேலான வீதியில் பிரவேசிக்க முடியும்.
இக்கருத்திட்டம் அரச தனியார் பங்குடைமைக் (Public Private Partnership) கருத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும்.

இக்கருத்திட்டம் இரண்டு பிரிவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் முதலாவது பகுதியானது 6.9 கிமீ நீளமான 4 ஒழுங்கைகளைக் கொண்ட வீதிப் பகுதியாகும். இது புதிய களனிப் பாலத்திலிருந்து ஆரம்பித்து ராஜகிரியவில் முடிவடைகின்றது. 2 ஆவது பகுதியானது ராஜகிரியவிலிருந்து ஆரம்பித்து அத்துறுகிரிய (10.4 கிமீ) வரை செல்கின்றது. இது வெளிச்சுற்றுவட்ட கடுகதிப்பாதை இணைக்கும். இக்கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2021 ஆம் ஆண்டில் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கடுகதிப்பாதை மணிக்கு 80 கி.மீ- 100 கி.மீ வேகத்தில் பயணம் செய்யக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதனால் வீதிப் பாவனையாளர்களால் புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துறுகிரியவுக்கு 18 நிமிடங்களில் பயணம் செய்ய முடியும்.

கட்டம் I இற்கான சாத்தியக்கூற்று ஆய்வு நிறைவடைந்துள்ளதுடன் காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெற்று வருகின்றது. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் காணி அளவைச் செயற்பாடுகள் 20% உம் கட்டம் I இற்கான முதலீட்டாளரின் பெறுகை முன்னேற்றம் 17% ஆகவும் காணப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க, காணி சுவீகரித்தல் செயற்பாடு நிறைவடைவதற்கான இலக்கு 90% ஆகக் காணப்பட்டதுடன் அடையப்பெற்ற முன்னேற்றம் இலக்கினை விடவும் குறைவாகும். எனவே, அடையப்பெற்ற இலக்கு 22% மட்டுமேயாகும்.

2018 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டம் II இன்சாத்தியக்கூற்று ஆய்விற்காக ஆலோசனையாளர்களின் பெறுகை மற்றும் கட்டம் II இன் சாத்தியக்கூற்று ஆய்வு முறையே 20% மற்றும் 90% முன்னேற்றத்தை அடைந்துள்ளன. நிர்மாண வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத்திட்ட தலைப்பு | விடயம் / விடய விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் (ரூபா. மில்லியன்) | 31/12/2018 இல் திருத்தப்பட்ட ஏற்பாடு (ரூபா. மில்லியன்) | செலவினம் (ரூபா.மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-03-15** | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 250.0 | - | - |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 80.0 | 111.75 | 53.03 |
| | **மொத்தம்** | **400.0** | **111.75** | **53.03** |

2018 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டம் அடைந்த நிதி முன்னேற்றம் 47% ஆகும். இது 2017 ஆம் ஆண்டில் 14% ஆக அறிக்கையிடப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க, செலவு இலக்கு இ.ரூ.400 மில்லியனாகக் காணப்பட்டது. திட்டத்திற்கிணங்க காணி சுவீகரித்தல் வேலைகளை மேற்கொள்ள இயலாமையால் கடந்த சில மாதங்களில் ஏற்பாடு குறைக்கப்பட்டது. ஆனால், இக்கருத்திட்டம் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் முன்னேற்றமானது கடந்த வருடத்தை விடவும் சிறப்பாக காணப்படுகின்றது.

## 2.1.2 துறைமுக அணுகைக்கான நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை

துறைமுக அணுகுகை நெடுஞ்சாலையை வீதிகளைப் பயன்படுத்துவோருக்கு வினைத்திறன்மிக்கதும் துரிதமானதுமான சேவைகளை வழங்கும் குறிக்கோளுடன் வடிவமைக்கப்பட்ட நெடுஞ்சாலை எனக் குறிப்பிட முடியும். இக்கருத்திட்டத்திற்கு 36,500 மில்லியன் ரூபாவை நிதி உதவியாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி உடன்பட்டுள்ளது. பின்வருவன இக்கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பெறுகளாகும்,

- புதிய களனிப் பாலத்தில் ஆரம்பித்து காலி முகத்திடலில் முடிவடையும் மேம்பால வீதி.
- கொழும்பு துறைமுகத்தினுள் அமைந்துள்ள கட்டடங்களை வேறு இடங்களுக்கு மாற்றுதல்.
- மேம்பால வீதிப் பகுதிக்குச் சமாந்தரமாக தரை மட்டத்தில் செல்லும் 6 ஒழுங்கைகளைக் கொண்ட வீதி.

இந்த உத்தேச நெடுஞ்சாலையின் மூலம் சரக்குப் போக்குவரத்தும் பயணிகளுக்கான போக்குவரத்து வசதிகளும் வினைத்திறன்மிக்கதாக மாறுவதுடன் கொழும்பு மாநகரப் பிரதேசத்தில் நிலவும் வாகனப் போக்குவரத்து நெரிசல் குறைவடையும். மேலும் இந்த இணைப்பின் மேம்படுத்தலின் விளைவாக கொழும்பு மற்றும் கொழும்பு துறைமுக உப பிராந்தியங்களுக்கும் கொழும்பு துறைமுகத்திலுள்ள கடற்படைத் தளத்திற்கும் கடல்சார் சேவைகளையும் பொருட்களையும் இலகுவாகக் கொண்டு செல்வது சாத்தியப்படும்.

துறைமுக அணுகுகைக்கான நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை, கடல்சார் வசதி நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் கடல்சார் வசதி நிலையத்தின் Piling வேலைகள் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்று வந்தன. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் விரிவான வடிவமைப்பை தயாரித்தல், ஒப்பந்தக்காரர் பெறுகை மற்றும் ஆலோசனையாளர் பெறுகை ஆகியவற்றின் முன்னேற்றம் முறையே 30%, 40% மற்றும் 35% ஆகக் காணப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 95% ஆகும். நிதிகளைப் பயன்படுத்துதல் காரணமாக 2018 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிகள் மற்றைய கருத்திட்டங்களுக்கு மாற்றப்பட்டன. நிர்மாண வேலைகள் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படாமையினால் ஏற்பாடுகளும் ஆகக்கூடிய மட்டம் வரையில் பயன்படுத்தப்படவில்லை.

திருத்தப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க, 2018 ஆம் ஆண்டின் இறுதியில் இக்கருத்திட்டம் 85% ஏற்பாடுகளை பயன்படுத்தியிருக்கின்றது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்ட தலைப்பு | விடயம் / விடய விபரம் | வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகள் (ரூபா. மில்லியன்) | 31/12/2018 இல் திருத்தப்பட்ட ஏற்பாடு (ரூபா. மில்லியன்) | செலவினம் (ரூபா.மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-03-16** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 3040.0 | 32.00 | 30.45 |
| | **மொத்தம்** | **3040.0** | **32.00** | **30.45** |

## 2.1.3 ருவன்புர கடுகதிப்பாதைக் கருத்திட்டம்

கஹதுடுவை முதல் பல்மடுல்லை வரையிலானகொண்ட உத்தேச கடுகதிப்பாதையின் நீளம் சுமார் 74 கி.மீ ஆகும். இக்கடுகதிப்பாதை நிர்மாணத்தின் நோக்கம் மேல் மற்றும் தென் மாகாணங்களுடனான சப்ரகமுவ மாகாணத்தின் இணைப்பை மேம்படுத்துவதாகும். இதன் மூலம் மேற்குறித்த மாகாணங்களினுள் போக்குவரத்து வசதிகளும் அணுகுகை வசதிகளும் இணைப்பும் மேம்படும். இக்கருத்திட்டம் 3 பகுதிகளைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### பகுதி 1 - கஹதுடுவை முதல் இங்கிரிய வரை (0.00 கி.மீ - 26.30கி.மீ)

இக்கடுகதிப்பாதைப் பகுதியின் மொத்த நீளம் 26.3 கி. மீற்றர்களாகும். உத்தேச பகுதி கஹதுடுவை, ஹொரணை மற்றும் இங்கிரிய ஆகிய இடங்களில் 3 மூன்று இடைமாறல்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பகுதி - 2 இங்கிரிய முதல் இரத்தினபுரி வரை (26.30 கி.மீ - 52.50 கி.மீ)**

இக்கடுகதிப்பாதையின் பகுதி 2 இங்கிரியவிலிருந்து இரத்தினபுரி வரை 26.2 கி.மீ நீளத்தை கொண்டுள்ளது. இக்கடுகதிப்பாதையின் வீதிப் பிரிவில் 3 இடைமாறல்களும் (கிரியல்லை, குருவிட, இரத்தினபுரி) 6 சுரங்கப் பாதைகளும் உள்ளடங்கியிருக்கும்.

**பகுதி 3 - இரத்தினபுரி முதல் பல்மடுல்லை வரை (52.50 கி.மீ - 73.9 கி.மீ)**

ருவன்புர கடுகதிப்பாதையின் மூன்றாம் பகுதி இரத்தினபுரியிலிருந்து பல்மடுல்லை வரை 21.4 கி.மீ நீளம் கொண்டதாக அமைவதுடன் இதுவே இக்கடுகதிப்பாதையின் இறுதிப் பகுதியாகவும் அமையும்.

ருவன்புர உத்தேச கடுகதிப்பாதையைக் காட்டும் வரைபடம் ***பின்னிணைப்பு - 01*** இல் காட்டப்பட்டுள்ளது. இக்கடுகதிப்பாதையின் நிர்மாணமானது இரத்தினக்கல் கைத்தொழில் அபிவிருத்தி, தேயிலை போன்ற ஏற்றுமதி உற்பத்திகள், புதிய கைத்தொழில்களின் கண்டுபிடிப்பு என்பவற்றை மேம்படுத்தும். இப்பிரதேசங்களிலுள்ள காணிகளின் பெறுமதி அதிகரிப்பதனால் இப்பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரமும் மேம்படும். 2018 டிசம்பர் இறுதியில் சாத்திய வள ஆய்வு அறிக்கை நிறைவடைந்து இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை அனுமதிக்கப்பட வேண்டியிருப்பதினால் இதன் செயற்பாடுகள் 99% முன்னேற்றத்தை கொண்டுள்ளதுடன் பிரிவு 1 இற்கான பெறுகை வேலைகள் 70% பூர்த்தியடைந்திருந்தன. கருத்திட்டத்தின் காணி சுவீகரிப்பு வேலைகள் 2016 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் 20% முன்னேற்றத்தை அடைந்திருந்தன. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க காணி சுவீகரிப்பு செயன்முறையின் இலக்கு 5 % முன்னேற்றத்தை அடையப்பெற்றுள்ளது. எல்லா 3 பிரிவுகளுக்குமான காணி சுவீகரித்தல் செயன்முறையை முன்னெடுப்பதற்கு PMU அனுமதியளித்திருந்த போதும் கருத்திட்டத்திற்கான நிதிகள் இறுதிப்படுத்தப்படாமையினால் 2018 ஆம் ஆண்டில் பிரிவு 1 இற்கான காணி சுவீகரித்தல் செயன்முறை மட்டுமே முன்னெடுக்கப்பட்டது. சிவில் வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-03-13** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 110 | 90 | 75.3 |
| | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 500 | - | - |
| | மொத்தம் | **610** | **90** | **75.3** |

2018 ஆம் ஆண்டிற்காக இக்கருத்திட்டத்திற்கு ஆரம்பத்தில் இ.ரூ.610 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பினும், வருடத்தின் இறுதியில் ஏற்பாடுகள் மறைறைய கருத்திட்டங்களுக்கு மாற்றப்பட்டன. காணி சுவீகரித்தல் செயன்முறையின் குறைவான முன்னேற்றம் காரணமாக 2018 ஆம் ஆண்டில் எந்தவித இழப்பீட்டுக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் நிதி முன்னேற்றம் 15% ஆகும். ஆனால், வருடத்தின் இறுதியில் திருத்தம் செய்யப்பட்ட ஏற்பாட்டிற்கிணங்க, நிதி முன்னேற்றம் 84% ஆகும். 2018 ஆம் ஆண்டிற்காக அடையப்பெற்ற நிதி முன்னேற்றம் 84% ஆவதுடன் 2017 ஆம் ஆண்டில் 77% மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.1.4. கண்டி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மத்திய கடுகதிப்பாதை இணைப்பு வீதிகளை மேம்படுத்தல்

கண்டி மாவட்டம் மலைப்பாங்கான நிலப்பரப்பில் அமைந்துள்ளதாலும் பல மலைகளினால் சூழப்பட்டுள்ளதன் காரணமாகவும் நிர்மாணித்தலும் தேவைப்படும் தரங்களில் கடுகதிப்பாதையை பராமரித்தலும் மிகவும் செலவு கூடியதாவதுடன் நிதி ரீதியாக சாத்தியமற்றதாகும். எனவே, விரிவான ஆய்வுகளுக்கூடாக கட்டுகஸ்தோட்டை – குருநாகல் – புத்தளம் வீதியின் (A10 வீதி) கலகெதர வரையில் கடுகதிப்பாதை நிர்மாணிப்பதற்கு வீதி

அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது. அத்துடன் கண்டி நகரத்துடன் இணைப்பினை ஏற்படுத்தும் பொருட்டு தற்போது காணப்படுகின்ற சில பாரிய வீதிகளை தேவைப்படும் தரத்தில் மேம்படுத்துவதற்கும் கடுகதிப்பாதை வலையமைப்புடன் கண்டி நகரத்தை இணைக்கும் பாரிய இணைப்பு வீதிகளையும் மேம்படுத்துவதற்கும்தீரமானித்துள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் 6 வீதிகள் மேம்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1.4.1 மேம்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள வீதிகள் - கண்டி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மத்திய கடுகதிப்பாதை இணைப்பு வீதிகளை மேம்படுத்தல்**

| பொதி | விடய இல.. | வீதியின் பெயர் | நீளம் (கி.மீ) | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| **பொதி 01** | 01 | கட்டுகஸ்தோட்டை – குருநாகல் – புத்தளம் வீதியில் (A10) கட்டுகஸ்தோட்டையிலிருந்து கலகெதர வரையில் அகலப்படுத்தலும் மேம்படுத்தலும் (Ch.0+000 இலிருந்து Ch.13+000 வரையில்) ( நான்கு ஒழுங்கை) | 13 | இடவமைவு ஆய்வு மற்றும் வடிவியல் வடிவமைப்பு பூர்த்தியடைந்துள்ளது |
| **பொதி 02** | 02 | A009 வீதி A010 வீதியை இணைக்கின்ற கட்டுஸ்தோட்டை நகரத்தில் புறவழிப் பாதையை நிர்மாணித்தல் (நான்கு ஒழுங்கை புதிய வீதி) | 0.53 | |
| | 03 | அலதெனிய – இரியகம வீதியை (B005) அகலப்படுத்தலும் மேம்படுத்தலும் | 10 | |
| **பொதி 03** | 04 | பரிகம – ஹலொலுவ வீதியை (B537) அகலப்படுத்தலும் மேம்படுத்தலும் (Ch. 0+000 இலிருந்து Ch.5+750 வரையில்) | 5.75 | |
| | 05 | அரம்பகடே – பொக்காவல – அம்பத்தன்ன வீதியின் (B015) அரம்பகடே – பொக்காவல – பூஜாபிற்றிய பிரிவினை அகலப்படுத்தலும் மேம்படுத்தலும் | 2.5 | இடவமைவு ஆய்வு நடைபெற்று வருகின்றது |
| | 06 | அலவத்துகொட – பூஜாபிற்றிய (B377)வீதியை அகலப்படுத்தலும் மேம்படுத்தலும் | 8.1 | |
| | | மொத்தம் | 39.88 | |

2018 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்திற்கு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் தரப்படாமையினால், ஆரம்ப நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டன. மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, சாத்தியக்கூற்று ஆய்வினை முன்னெடுக்கும் பொருட்டு ஆலோசனையாளரை தெரிவு செய்வதற்கான ஆவணங்களை தயார்படுத்தல் செயற்பாடு நடைபெற்று வருகின்றன.

### 2.1.5. கொஹுவலை, கெட்டம்பே மற்றும் ஹீரஸ்ஸகல ஆகிய இடங்களில் மூன்று மேம்பாலங்களை நிர்மாணித்தல்

ஒட்டுமொத்த வீதி வலையமைப்பின் கொள்ளளவை அதிகரிக்கும் நோக்குடன் பல தந்திரோபாய முக்கியத்துவமிக்க இடைச்சந்திப்புக்களினதும் இருப்புக் கடவைகளினதும் கொள்ளளவை மேம்படுத்தும் தேவைப்பாடுகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை அடையாளங்கண்டுள்ளது. இதற்கிணங்க, நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சும் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களமும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் இத்தகைய இடைச்சந்திப்புக்களை மேம்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன. எனவே, கொஹுவலை, கெட்டம்பே மற்றும் ஹீரஸ்ஸகல ஆகிய மேம்பாலங்கள் ஹங்கேரியன் நிதியுதவியின் கீழ் எதிர்வரும் காலங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மேம்பாலங்களாகும்.

கொழும்பு நகரத்திற்கு செல்லும் மிகப் பிரதான வீதிகளில் ஒன்றானதும் சனத்தொகை அடர்த்தியுடைய புறநகர்ப் பிரதேசங்களை இணைக்கின்றதுமான கொழும்பு – ஹொரணை வீதியிலுள்ள (B84) கொஹுவலைச் சந்தியில் கொஹுவலை மேம்பாலம் அமையவுள்ளது. இச்சந்தியை நோக்குகையில், அதிகமான போக்குவரத்து கொழும்பு – ஹொரணை வீதியின்(B84) நேரானவழி மூலமாகவே இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இப்போக்குவரத்துக்கு பிரதானமாக B120 மற்றும் B229 வீதிகள் வழியே வருகின்ற வாகனங்களினாலும் B229 வீதியிலிருந்து B84 வீதிக்குள் வரும் வாகனங்களினாலும் தடையேற்படுத்தப்படுகின்றது. எனவே, இச்சந்தியின் வழியே எல்லா நேரான வாகனப் போக்குவரத்தினையும் எடுத்துச் செல்கின்ற இம்மேம்பாலத்தை நிர்மாணித்தலானது B84 வீதியின் வழியே நேரான வாகனப் போக்குவரத்தை இலகுபடுத்தும் அதேவேளையில் சந்தியில் ஏற்படும் அதிகளவான வாகன நெரிசல்களை தீர்ப்பதற்கும் வழிவகுக்கும்.

வில்லியம் கொப்பல்லாவ மாவத்தை (AB42) மற்றும் கெட்டம்பே சந்தியில் A1குறுக்குச்சந்திகள் கண்டி நகரத்திற்கு செல்கின்ற இரண்டு மிகப் பிரதான வீதிகள் ஆகும். தற்போது காணப்படும் இருப்புக் கடவை கெட்டம்பே குறுக்குச்சந்தியிலிருந்து ஏறத்தாழ 120மீ தூரத்தில்

கெட்டம்பேயின் வில்லியம் கொப்பல்லாவ மாவத்தையில் (AB42) அமைந்துள்ளது. முன்மொழியப்பட்டுள்ள மேம்பால வீச்செல்லைகள் கண்டி நகரத்திற்குச் செல்கின்றA1 வீதிக்கும் AB42 வீதிக்கு குறுக்கே இருப்புக் கடவைக்கும் காணப்படுகின்றன.இதனை விடவும் முன்மொழியப்பட்டுள்ள மேம்பாலமானது புகையிரதக் கடவை வாயில் மூடுவதற்கு தடையேற்படுத்தாது கண்டி நகரத்திலிருந்து AB42 வீதிக்கு வருகின்ற வாகனங்கள் இருப்புக் கடவைகளை கடப்பதற்கான போக்குவரத்தை இலகுபடுத்தி இருப்புக் கடவைகள் மீது விரிந்து பரவிச் செல்கின்றது.

கெட்டம்பே சந்தியிலிருந்து சுமார் 1.6 கி.மீ தூரத்தில் வில்லியம் கொப்பல்லாவ மாவத்தை (AB42) வழியே ஹீரஸ்ஸகலவில் முன்மொழியப்பட்டுள்ள ஹீரஸ்ஸகல மேம்பாலம் அமைந்துள்ளது. கண்டி நகரத்திற்கு செல்கின்ற மிகப் பிரதான வீதிகளில் ஒன்றான AB42 வீதியின் சிக்கலான குறுகிய பாதைகளில் ஒன்றாக இச்சந்தி அமைந்துள்ளது. AB42 வீதிக்குச் சமாந்தரமாக புகையிரத தடங்களும் காணப்படுகின்றன. சிறு வீதிகளிலும் இருப்புக் கடவையிலும் போக்குவரத்திற்குடையில் நெரிசலை ஏற்படுத்துகின்ற புகையிரதக் இருப்புக் கடவையும் இக்குறுக்குச் சந்தியில் காணப்படுகின்றது. அத்துடன் கெட்டம்பேயிலிருந்து கண்டி நகரத்திற்கான வழியை சிக்கலற்றதாக்கி அதிக செயற்றிறனுடன் இயங்குவதற்கு கெட்டம்பே மேம்பாலத்திற்கு இம்மேம்பாலமானது அவசியமானதாகும்.

**அட்டவணை 2.2.5.1 முன்மொழியப்பட்டுள்ள மூன்று மேம்பாலங்கள் - கொஹூவெலை, கெட்டம்பே மற்றும் ஹீரஸ்ஸகல ஆகிய இடங்களில் மூன்று மேம்பாலங்களை நிர்மாணித்தல்**

| மேம்பாலத்தின் பெயர் | மேம்பாலத்தின் நீளம் | சாய்பிடை நீளம் | வீச்செல்லை அமைவடிவம் | மேம்பால அகலம் |
|---|---|---|---|---|
| **கொஹூவெலை** | 229 மீ | 97.6மீ | 3 வீச்செல்லைகள்– 132மீ | 9.4மீ |
| **கெட்டம்பே** | பிரதான மேம்பாலம் - 396.7மீ<br>A1 இற்கு பரவுதல்- 432.4மீ | பிரதான மேம்பாலம் 116.7மீ<br>பரவுதல் 147.4மீ | பிரதான மேம்பாலம் 8 வீச்செல்லைகள் 8 வீச்செல்லைகள் பரவுதல் | 3 ஒழுங்கைப் பிரிவு 13.4மீ<br>2 ஒழுங்கைப் பிரிவு- 9.4 ஒரு ஒழுங்கை 5.4மீ பரவுதல் |
| **ஹீரஸ்ஸகல** | 316.4மீ | 132.4மீ | 5 வீச்செல்லைகள்– 184மீ | 9.4மீ |

### 2.1.6. கொக்கிளாய் பாலத்தை நிர்மாணித்தல்

முல்லைத்தீவு – கொக்கிளாய் – புல்மோட்டை வீதியில் கொக்கிளாய் களப்புக்கு குறுக்கே 1050மீ நீளமுடைய புதிய கலப்பு பாலமொன்றை நிர்மாணிப்பதற்கான தேவைப்பாட்டை வீதி அபிவிருத்தி அதிகாரசபை இணங்கண்டுள்ளது. இதன் மூலம் கிழக்கு மாகாணத்திற்கும் வட மாகாணத்திற்குமிடையில் கடலோரப் பகுதிகளின் தொடர்ச்சியான நிலத் தொடர்பினை வழங்க முடியும். தேசிய வீதி வலையமைப்பில், கடலோரப் பகுதிகள் வழியே புல்மோட்டைக்கு அப்பால் தொடர்ச்சியான நிலத் தொடர்பு இல்லை. இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு, புல்மோட்டை வரையில் முல்லைத்தீவு – கொக்கிளாய் வீதியை (B297) நீடித்து 42.4 கி.மீ நீளத்திற்கு முல்லைத்தீவு – கொக்கிளாய் – புல்மோட்டை வீதியானது சீன எக்ஸிம் வங்கி நிதியளிக்கும் வடபிராந்திய வீதி புனரமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளது. இவ்வீதி வட மாகாணத்துடன் திருகோணமலை மாவட்டத்தை இணைக்கின்ற ஒரு பெரும் வீதியாக காணப்படுகின்றது. முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களை திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுடன் இணைத்து கிழக்கு மாகாணத்திலிருந்து வட மாகாணத்திற்கான போக்குவரத்திற்கு மிகக் குறுகிய வீதியாக காணப்படும். இவ்வீதி நாயாறு களப்பு மற்றும் கொக்கிளாய் களப்பு ஆகிய இரு பிரதான கடல் கடவைகளைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட வீதிக் கருத்திட்டத்தின் கீழ் நாயாறு களப்பிற்கு குறுக்கே பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் நிதி மட்டுப்பாடு காரணமாக குறித்த ஒப்பந்தத்திற்குள் கொக்கிளாய் களப்பிற்கு குறுக்கே பாலத்தினை நிர்மாணித்தல் உள்ளடக்கப்படவில்லை.

பருவமழைக் காலத்தில் கொக்கிளாய் களப்பில் நீர் செல்லும் இடைவெளி சுமார் 1,025மீ ஆகக் காணப்படுவதுடன் இது வரட்சிக் காலத்தில் 800மீ ஆகக் குறைவடைகின்றது. இவ்வீதியின் போக்குவரத்து அதிகரித்துள்ளதுடன் தற்போது இந்தப் போக்குவரத்து உள்ளூராட்சி மற்றும் பிரதேச சபை வீதிகள் வழியே 25 கி.மீ இற்கும் அதிகமான தூரத்திற்கு சுற்று வழிகளில் செல்ல வேண்டியுள்ளது. இச்சுற்று வழிகள் கிரவல் வீதிகளாகக் காணப்படுவதுடன் இவை மிகவும் பழுதடைந்த நிலைகளில் காணப்படுகின்றன. இவைகளில் பெரும்பாலானவை மழைக் காலங்களில் பயணம் செய்ய முடியாதவையாகும்.

மேலும், புல்மோட்டையிலிருந்து கொக்கிளாய் வரையில் கடற்கரையோர நெடுவெளி மதிப்பிடப்பிட்ட 4 மில்லியன் தொன் பாரிய கனிம மணல் செறிவுகளைக் கொண்டுள்ளது.

இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் இவ்வளங்களை வினைத்திறனாகவும் அதிக பொருளாதார ரீதியாகவும் புத்தாய்வு செய்ய இயலும். கொக்கிளாய் பறகைள் சரணாலயமும் கொக்கிளாய் களப்பினைச் சுற்றியுள்ள பிரதேசத்திலேயே காணப்படுகின்றது. எனவே, கொக்கிளாய் பாலத்தை நிர்மாணித்தலானது சுற்றுலாத் துறையையும் இப்பிரதேசத்தில் பாரிய கைத்தொழில்கள் அபிவிருத்தியையும் இலகுபடுத்தும்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் முல்லைத்தீவு– கொக்கிளாய் – புல்மோட்டை வீதி மேம்படுத்தல் கருத்திட்டத்தில் அதிக நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கு கொக்கிளாய் களப்பிற்கு குறுக்கே பாலத்தை நிர்மாணித்தல் மிக அவசியமானதாகும்.

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான எல்லா ஆரம்ப நடவடிக்கைகளையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டதுடன், முன்னுரிமைகள் மாற்றத்தின் காரணமாக 2014 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டது. இது 2018 ஆம் ஆண்டில் மீண்டும் நடவடிக்கைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கருத்திட்ட முன்மொழிவாளரான Bilfinger MCE Slanys.r.o. of CZECH Republic இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக Turnkey அடிப்படையில் கோரப்படாத கருத்திட்ட முன்மொழிவொன்றினை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பித்துள்ளது. Ceskoslovenska obchodni banka,a.s (CSOB) ஒப்பந்தப் பெறுமதி யூரோ 48.8 மில்லியன் வரையில் நிதியுதவி அளிக்கின்றது. இவ்வொப்பந்த பெறுமதியில் யூரோ 41.5 மில்லியனை CSOB உம் மிகுதி தொகையான யூரோ 7.3 மில்லியனை ஹட்டன் நஷனல் வங்கியும் (HNB) வழங்கவுள்ளன. கொக்கிளாய் பாலத்தின் இடவமைவு வரைபடம் ***பின்னிணைப்பு – 02*** இல் காட்டப்பட்டுள்ளது.

## 3.0 கடுகதிப்பாதைகள் அபிவிருத்தி

எந்தவொரு நாட்டினதும் துரித பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமான ஒரு முற்தேவைப்பாடாக வினைத்திறன்மிக்க போக்குவரத்து விளங்குகின்றது. வீதி வலையமைப்பானது பரவலாகக் காணப்பட்ட போதிலும், இலங்கையிலுள்ள பெரும்பாலான தேசிய மற்றும் மாகாண வீதிகள் 50 வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட வாகனப் போக்குவரத்தின் அளவுக்கும், வாகனங்களின் தன்மைக்கும், வாகனங்களின் வேகத்திற்கும் ஏற்ப அமைக்கப்பட்டவையாகும். அதனால், நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கக்கூடிய உயர் இயங்குதிறன் கொண்ட வலையமைப்பொன்று காணப்படுவது அத்தியாவசியமானது என அடையாளம் காணப்பட்டது. அதனால், தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை ஊக்குவிக்கும் பெரும்பாலும் அனைத்து பொருளாதாரமத்திய நிலையங்களையும் உள்ளடக்கும் விதத்திலான 800 கி.மீ நீளமான கடுகதிப்பாதை வலையமைப்பொன்று இத்தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

தற்போது, உத்தேச உயர் வேகத்திலான கடுகதிப்பாதை வலையமைப்பின் ஆக்கக்கூறுகளாக பின்வரும் கடுகதிப்பாதைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. உத்தேச கடுகதிப்பாதையைக் காட்டும் வரைபடம் ***பின்னிணைப்பு- 03*** இல் காட்டப்பட்டுள்ளது.

- தென்பிராந்திய கடுதிப்பாதை (E01)
- கொழும்பு - கட்டுநாயக்கா கடுகதிப்பாதை (E03)
- வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை (E02)
- தென்பிராந்திய கடுதிப்பாதையை அம்பாந்தோட்டை வரை நீடித்தல்
- மத்திய கடுகதிப்பாதை
- கொழும்பு - இரத்தினபுரி - பல்மடுல்லை கடுகதிப்பாதை (ருவன்புர கடுகதிப் பாதை)
- புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துறுகிரிய வரையான நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை
- துறைமுக அணுகுகைக்கான நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை

தற்போது காணப்படும் .கி 169.13மீ நீளமான கடுகதிப்பாதை வலையமைப்பில் அடங்கும் கொழும்பு கட்டுநாய –க்க கடுகதிப்பாதைதென் ,பிராந்திய கடுகதிப்பாதை மற்றும் கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை என்பன வினைத்திறன்மிக்க போக்குவரத்து வலையமைப்பாக இயங்கி வருகின்றன .

வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை – கட்டம் III, தென் பிராந்திய கடுகதிப்பாதை விரிவாக்கல் மற்றும் மத்திய கடுகதிப்பாதை பிரிவு II ஆகியன இலங்கையில் கடுகதிப்பாதை வலையமைப்பின் புது அங்கங்களாக 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும்.

## 3.1. கடுகதிப்பாதைகளின் தொழிற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமை

நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் உள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கடுகதிப்பாதை தொழிற்பாட்டுப் பராமரிப்பு முகாமைப் பிரிவு கடுகதிப்பாதைகளின் சுமூகமான தொழிற்பாட்டுக்குப் பொறுப்பாக உள்ளது. கடுகதிப்பாதைகளின் வரவுசெலவுத்திட்டம் தயாரித்தல் மற்றும் கணக்காய்வுச் செயற்பாடுகளுடன் இணைந்த வகையில் வாகனப் போக்குவரத்துச் செயற்பாடுகளின் அடிப்படைத் திட்டமிடல், முகாமை மற்றும் தொழிற்பாடு, கட்டண அறவீட்டுச் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. தென்பிராந்திய கடுதிப்பாதை, கொழும்பு - கட்டுநாயக்க கடுகதிப்பாதை, கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை என்பவற்றின் வாகனப் போக்குவரத்து அளவு விபரங்கள் அட்டவணை 3.1 இல் காட்டப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்ட கடுகதிப்பாதைகளின் நாளாந்த சராசரி போக்குவரத்து அளவின் வரைபடத் தோற்றம் ***பின்னிணைப்பு 4 (அ)*** இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1.1 – கடுகதிப்பாதைகளின் நாளாந்த சராசரி போக்குவரத்து அளவு**

| வருடம் | தென்பிராந்திய கடுகதிப்பாதை மற்றும் கொட்டாவவிலிருந்து கடவத்தை வரையிலான வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் நாளாந்த சராசரி போக்குவரத்து அளவு | கொழும்பு கட்டுநாயக்க கடுகதிப்பாதையின் நாளாந்த சராசரி போக்குவரத்து அளவு |
|---|---|---|
| 2011 | 8,531 | - |
| 2012 | 9,458 | - |
| 2013 | 11,737 | 15,194 |
| 2014 | 19,095 | 18,401 |
| 2015 | 27,736 | 20,782 |
| 2016 | 44,384 | 23,974 |
| 2017 | 52,977 | 25,844 |
| 2018 | 60,524 | 27,971 |

அட்டவணை 3.1.1 இல் உள்ள தரவுகளின் அடிப்படையில் நோக்குகையில் தென்பிராந்திய கடுகதிப்பாதையினதும் கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச் சுற்றுவட்டக் கடுகதிப்பாதையினதும் நாளாந்த சராசரி வாகனப் போக்குவரத்து அளவு என்பன 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டில் 14% அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் அக்கடுகதிப்பாதைகள் பயணிகள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டமையாகும். கொழும்பு கட்டுநாயக்க கடுகதிப்பாதையின் நாளாந்த சராசரி வாகனப் போக்குவரத்து அளவு 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் 8% அதிகரித்துள்ளது. அறிக்கையிடும் திகதியான 31 டிசம்பர் 2018 வரையில் குறிப்பிடப்பட்ட கடுகதிப்பாதையின் நாளாந்த சராசரி வாகனப் போக்குவரத்தின் அதிகூடிய அளவானது 2018 ஆம் ஆண்டில் பதியப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட கடுகதிப்பாதைகளின் மாதாந்த வாகனப் போக்குவரத்து அளவினை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

**அட்டவணை 3.1.2 – 2018 ஆம் ஆண்டில் வாகனப் போக்குவரத்து அளவு மாதாந்தச் செயலாற்றுகை**

| மாதம் | போக்குவரத்து அளவு | |
|---|---|---|
| | தென்பிராந்திய கடுகதிப்பாதை மற்றும் கொட்டாவவிலிருந்து கடவத்தை வரையிலான வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை | கொழும்பு கட்டுநாயக்க கடுகதிப்பாதை |
| ஜனவரி | 1,824,645 | 889783 |
| பெப்ரவரி | 1,607,721 | 769693 |
| மார்ச் | 1,867,735 | 848883 |
| ஏப்ரல் | 1,870,813 | 794963 |
| மே | 1,814,713 | 820112 |
| ஜூன் | 1,742,304 | 817965 |
| ஜூலை | 1,824,481 | 877078 |
| ஆகஸ்ட் | 2,064,149 | 934067 |
| செப்டம்பர் | 1,856,199 | 848896 |
| ஒக்டோபர் | 1806040 | 842979 |
| நவம்பர் | 1758602 | 807515 |
| டிசம்பர் | 2102059 | 957780 |
| மொத்தம் | **22091461** | **10209714** |

எல்லா கடுகதிப்பாதைகளில் அதிகூடிய வாகனப் போக்குவரத்து அளவு 2018 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்திலும் ஆகக் குறைந்த வாகனப் போக்குவரத்து பெப்ரவரி மாதத்திலும் பதிவாகியிருந்தன. 2017 ஆம் ஆண்டிலும் அதிகூடிய மற்றும் ஆகக்குறைந்த வாகனப் போக்குவரத்து அளவானது மாறாமல் குறித்த மாதங்களிலேயே பதிவாகியுள்ளன. 2018 ஆம் ஆண்டில் தென்பிராந்திய கடுதிப்பாதை, கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை மற்றும் கொழும்பு கட்டுநாயக்கா கடுகதிப்பாதை ஆகியவற்றின் மாதாந்த வாகனப் போக்குவரத்து அளவின் ஒப்பீடு ***பின்னிணைப்பு 4 (ஆ)*** இல் தரப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையில் மேற்கூறிய கடுகதிப்பாதைகளின் கட்டண வருமானம் தொடர்பான ஒப்பீடு அட்டவணை 3.1.3 இல் பின்வருமாறு காட்டலாம். தென்பிராந்திய கடுதிப்பாதை மற்றும் கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை ஆகியவற்றின் கட்டண வருமானம் 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டில் 13% அதிகரித்துள்ளது. 2011 ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில் தென்பிராந்திய கடுகதிப்பாதையின் பிரிவு 1 பொதுமக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டிருப்பினும் மேற்குறித்த கடுகதிப்பாதைகளின் கட்டண வருமானம் 2011 ஆம் ஆண்டை விட 2012 ஆம் ஆண்டில் துரிதமாக அதிகரித்துள்ளது.கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை 1 பொதுமக்களின் பாவனைக்காக டிசம்பர் 2012 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டமையால் 2012 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டண வருமானம் டிசம்பர் வரையில் தென்பிராந்திய கடுகதிப்பாதையிலிருந்து மட்டுமே பெறப்பட்டது. 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் கொழும்பு கட்டுநாயக்க கடுகதிப்பாதையின் கட்டண வருமானம் 8% அதிகரித்துள்ளது. கொழும்பு கட்டுநாயக்க கடுகதிப்பாதை பொதுமக்களின் பாவனைக்காக 2013 ஆம் ஆண்டு ஒக்டோபரில் திறக்கப்பட்டமையால் இக்கடுகதிப்பாதையின் கட்டண வருமானம் 2014 ஆம் ஆண்டில் துரிதமாக அதிகரித்திருந்தது. மேற்கூறிய வருமான விபரங்கள் தொடர்பான மேலதிக விளக்கம் ***பின்னிணைப்பு 4 (இ)*** இல் விளக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1.3 – தென்பிராந்திய கடுதிப்பாதை மற்றும் கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை, கொழும்பு - கட்டுநாயக்க கடுகதிப்பாதையின் கட்டண வருமான ஒப்பீடு**

| வருடம் | தென்பிராந்திய கடுதிப்பாதை மற்றும் கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் கட்டண வருமானம் (இ.ரூ.மில்லியன்) | கொழும்பு - கட்டுநாயக்க கடுகதிப்பாதையின் கட்டண வருமானம் (இ.ரூ.மில்லியன்) |
|---|---|---|
| 2011 | 83.19 | - |
| 2012 | 1,017.02 | - |
| 2013 | 1,256.65 | 282.16 |
| 2014 | 2,141.35 | 1,887.73 |
| 2015 | 3,128.89 | 2,163.27 |
| 2016 | 4,550.89 | 2,496.81 |
| 2017 | 5,214.20 | 2,606.75 |
| 2018 | 5,893.92 | 2,821.78 |

மேற்கூறிய எல்லா கடுகதிப்பாதைகளும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளைப் போலவே 2018 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் அதிகூடிய கட்டண வருமானமும் பெப்ரவரி மாதத்தில் மிகக்குறைந்த கட்டண வருமானமும் பதிவாகியுள்ளன.

**அட்டவணை 3.1.4 - 2018 ஆம் ஆண்டில் தொழிற்படும் கடுகதிப்பாதைகளினால் பெற்றுக்கொண்ட மாதாந்த கட்டண வருமானங்கள்**

| மாதம் | தென்பிராந்திய கடுதிப்பாதை மற்றும் கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் கட்டண வருமானம் (இ.ரூ.மில்லியன்) | கொழும்பு - கட்டுநாயக்க கடுகதிப்பாதையின்கட்டண வருமானம் (இ.ரூ.மில்லியன்) |
|---|---|---|
| ஜனவரி | 492.80 | 245.25 |
| பெப்ரவரி | 441.87 | 213.83 |
| மார்ச் | 510.49 | 234.98 |
| ஏப்ரல் | 513.55 | 220.48 |
| மே | 470.50 | 225.78 |
| ஜூன் | 450.97 | 225.06 |
| ஜூலை | 470.50 | 242.44 |
| ஆகஸ்ட் | 542.13 | 258.88 |
| செப்டம்பர் | 494.80 | 234.58 |
| ஒக்டோபர் | 471.06 | 232.86 |
| நவம்பர் | 465.88 | 223.41 |
| டிசம்பர் | 569.37 | 264.22 |
| மொத்தம் | 5,893.92 | 2,821.77 |

அட்டவணை 3.1.4 இல் காட்டப்பட்டுள்ள தரவுகளிலிருந்து தென்பிராந்திய கடுதிப்பாதை மற்றும் கொட்டாவை முதல் கடவத்தை வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் கிலோ மீற்றருக்கான கட்டண வருமானத்தை விடவும் கொழும்பு - கட்டுநாயக்க கடுகதிப்பாதையின் கிலோ மீற்றருக்கான மொத்த கட்டண வருமானம் அதிகமானதாகும். மேலும் 2018 ஆம் ஆண்டில் மேற்கூறிய கடுகதிப்பாதைகளின் மாதாந்த கட்டண வருமானங்களின் விளக்கம் ***பின்னிணைப்பு 4(ஈ)*** இல் காட்டப்பட்டுள்ளது.

## 3.2 வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைக் கருத்திட்டம்

கொழும்பு நகரத்திற்கான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையானது (OCH)கொழும்பிலிருந்து பரவிச் செல்லும் தென்பிராந்திய கடுகதிப்பாதையையும் கொழும்பு கட்டுநாயக்கா – கடுகதிப்பாதையையும் ஏனைய தேசிய நெடுஞ்சாலைகளையும்(A1, A3, A4) இணைக்கும் புதியதொரு கடுகதிப் பாதையாகும். இக்கடுகதிப்பாதையின் மொத்த நீளம் 29.1 கி.மீ ஆகும். இப்பாதை மணித்தியாலத்திற்கு 80கி.மீ – 100கி.மீ வரை வேகத்தில் செல்லக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் நிர்மாண வேலைகள் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன அவை பின்வருமாறு

- கட்டம் 1 – கொட்டாவை முதல் கடுவலை வரையான பகுதி (11 கி.மீ)
- கட்டம் 2 – கடுவலை முதல் கடவத்தை வரையான பகுதி (8.9 கி.மீ)
- கட்டம் 3 – கடவத்தை முதல் கெரவலப்பிட்டிய வரையான பகுதி (9.3 கி.மீ)



**கொட்டாவவிலிருந்து கடுவலை வரையான வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை**

இக்கடுகதிப்பாதையின் 1 ஆம், 2 ஆம் கட்டங்கள் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டு பொது மக்களின் பாவனைக்காகத் திறக்கப்பட்டுள்ளது. அவை 2 இனதும் விபரங்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| கட்டம் | நீளம் (கி.மீ) | ஆரம்பித்த வருடம் | முடிவடையும் வருடம் | நிதி முகவர் | இடைமாறல்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 11 | 2009 | 2014 | ஜெய்கா | கொட்டாவை, அத்துறுகிரிய, கொத்தலாவலை |
| 2 | 8.9 | 2011 | 2015 | | கடுவலை, கடவத்தை |

வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் பகுதி 2 இன் பௌதீக வேலைகள் 2015 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட போதிலும் விலைப்பட்டியல்களைச் செலுத்தும் பணி 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிருந்தது.

எனவே இக்கருத்திட்டத்தின் 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மொத்தப் பௌதீக முன்னேற்றம் 96% ஆகக் காணப்பட்டதுடன் அது 2017 ஆண்டின் இறுதியில் 96% ஆகக் காணப்பட்டது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-03-05** | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 10.0 | 13.0 | 12.5 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 710.0 | 379.0 | 364.1 |
| | **மொத்தம்** | **720.0** | **392.0** | **376.6** |

கடுகதிப்பாதையின் கட்டம் III இன் விபரங்களைப் பின்வருமாறு குறிப்பிட முடியும்.

### கட்டம் III - கடவத்தை முதல் கெரவலப்பிட்டி வரையான பகுதி (9.63 கி.மீ)

வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் கடவத்தை முதல் கெரவலப்பிட்டி வரையான கட்டம் III இன் நிர்மாண வேலைகள் 2016 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அது 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் நிர்மாணக் காலம் 42 மாதங்களாகும். இக்கடுகதிப்பாதைப் பிரிவின் மொத்த நீளம் 9.63 கி.மீற்றர்களாகும்.

இக்கருத்திட்டத்திற்கு சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி நிதி உதவி வழங்குகின்றது. இச்சக்கருத்திட்டத்திற்கான மொத்தக் கடன் தொகை 494.03 மில் அமெரிக்க டொலர்களாகும். இப்பிரிவின் சிவில் வேலை ஒப்பந்தத்திற்கான முன்னேற்றம் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 84% முன்னேற்றத்தையும் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 34% முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது. இதற்கிணங்க கூடிய செயலாற்றுகை காரணமாக இப்பிரிவானது நிர்மாண வேலைகளில் அதன் 50% ஐ 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்துள்ளது. எனவே 2018 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான கருத்திட்டத்தின் இலக்கு அடைவு 100% ஆக காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் இலக்கு 50% ஆகக் காணப்பட்டது. மில்லகஹவத்த மீள்குடியேற்ற இடத்தில் உள்ளக வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் ஜயசுமான மாவத்தை-கட்டம் 1 இல் உள்ளக வீதிகளை நிர்மாணித்தல் ஆகியவை 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்யப்பட்டன. ஜயசுமான மாவத்தை-கட்டம் 2 இல் உள்ளக வீதிகளை நிர்மாணித்தல் நான்காம் காலாண்டில் தொடங்கப்பட்டிருப்பினும் 31/12/2017 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் 2% அடையப்பட்டுள்ளது. ஆனால் இது ஒக்டோபர் 2018 இல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

2018 டிசம்பர் இறுதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-03-10 | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 400.0 | 72 | 56.0 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 3030.0 | 17,313.0 | 13167.6 |
| | **மொத்தம்** | **3,430.0** | **17,385.0** | **13,223.6** |

திருத்தம் செய்யப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பான நிதி முன்னேற்றம் 2018 ஆம் ஆண்டில் 76% ஆகக் காணப்படுகின்றது. கருத்திட்டத்திற்கு தரப்பட்ட அசல் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு வருடத்தின் முதல் பாதியில் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இக்கருத்திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் மேலும் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சதவீத ரீதியில் நிதி முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டின் முன்னேற்றத்தை விடவும் குறைவானதாகும்.2017 ஆம் ஆண்டின் இறுதியில் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டின் 88% மட்டுமே இக்கருத்திட்டம் பயன்படுத்தியுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக சிவில் வேலை/நிர்மாண வேலையின் பௌதீக முன்னேற்றம் 50% முன்னேற்றத்தையும் கடுகதிப்பாதை நிர்மாணம் 100% முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலைக் கருத்திட்டத்தின் - கட்டம் III இற்கான அமைவிட வரைபடம் ***பின்னிணைப்பு- 5*** இல் தரப்பட்டுள்ளது.



**தூண்களின் மீது நிறுவப்படும் மேம்பாலம் 1 – கி.மீ 0+915 முதல்**



**கரையோரங்களை நிர்மாணித்தல் 6 வது கி.மீ**

## 3.3 மத்திய கடுகதிப்பாதைக் கருத்திட்டம்

மத்திய கடுகதிப்பாதைக் கருத்திட்டமானது, ஏற்கனவே முன்மொழியப்பட்டிருந்த கொழும்பு - கண்டி மாற்று நெடுஞ்சாலை (CKAH), வடபிராந்திய கடுகதிப்பாதைக் கருத்திட்டம் (NEP) ஆகிய இரண்டு கடுகதிப்பாதைகளையும் ஒருங்கிணைத்து திட்டமிடப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்திற்கு மத்திய கடுகதிப்பாதை எனப் பெயரிடப்பட்டுள்ளது. மத்திய கடுகதிப்பாதையின் நிர்மாணப் பணிகள் பின்வருமாறு 4 பகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன. முழு வீதிக்கான பொருளாதார சாத்தியக்கூற்று ஆய்வு நிறைவு பெற்றுள்ளதுடன் இது மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் முழு வீதி வழிக்கான சூழல் தாக்க மதிப்பீடுகளுக்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

- **பகுதி 1: கடவத்தை - மீரிகமை**

நான்கு ஒழுங்கைகளைக் கொண்ட இக்கடுகதிப்பாதை மொத்த நீளம் 37.09 கி.மீ ஆகும். இக்கடுகதிப்பாதையானது கடவத்தை, கம்பஹா, வெயாங்கொட மற்றும் மீரிகம ஆகிய இடங்களில் நான்கு இடைமாறல்களைக் கொண்டுள்ளது. இப்பிரிவின் கீழ் இரண்டு ஒப்பந்தப் பொதிகள் காணப்படுகின்றன.

I. ஒப்பந்தப் பொதி 1 - கடவத்தை முதல் கொஸ்ஸின்னை வரையான பகுதியை நிர்மாணித்தல்

II. ஒப்பந்தப் பொதி 2 - கொஸ்ஸின்னை முதல் மீரிகமை வரையான பகுதியை நிர்மாணித்தல்

மெட்டல்லெர்ஜிக்கல் கோப்பரேஷன் ஒவ் சைனா (MCC) கம்பனியுடன் பொதி 1 இற்கான ஒப்பந்தம் 2016 ஜுலையிலும் பொதி 2 இற்கான ஒப்பந்தம் 2015 ஆகஸ்ட் மாதத்திலும் கைச்சாத்திடப்பட்டன. டிசம்பர் மாத இறுதியில் 86% காணி சுவீகரித்தல் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன. அதில் 6% 2018 ஆம் ஆண்டிற்குள் அடையப்பெற்றிருந்தன. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டு திட்டத்திற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் காணி சுவீகரித்தல் நடவடிக்கைக்காக 30% இலக்கு அடையப்பெற்றிருந்தது. 2018 ஆம் ஆண்டில்காணி சுவீகரித்தச் செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் இழப்பீட்டுக் கொடுப்பனவில் தாமதம் மற்றும் மக்கள் எதிர்ப்பு போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் இதனை பூர்த்தி செய்ய இயலவில்லை. அத்துடன், 110 km/h அடைவதற்கு தேவைப்படும் வளைவை அகலப்படுத்தும் பொருட்டு சில பிரிவுகளில் வடிவமைப்பு இறுதிப்படுத்தும் வரையில் காணி சுவீகரிப்புச் செயன்முறை தாமதமானது. இப்பிரிவிற்கான சிவில் வேலைகள் 2016 செப்டெம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 0.2% முன்னேற்றத்தை கொண்டிருந்தது. இப்பிரிவிற்காக அடையப்பெற்ற ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 1% ஆகக் காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த சிவில் வேலை முன்னேற்றம் 5% ஆகக் காணப்பட்டது. இப்பிரிவு 2018 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க அடையப்பெற்ற மொத்த இலக்கு 16% ஆகும். இந்தக் குறைவிற்கு காரணம் இப்பிரிவிற்கான கடன் உடன்படிக்கை வருடத்தின் இறுதி வரையில் கையெழுத்திடப்படவில்லை.



மென்மையான தரைச் செயற்பாட்டு முறை– கிரவல் தரை அடுக்கு



Viaduct 18 இன் ஆள்துளையிடும் நிர்மாண வேலை

## பகுதி 2: மீரிகமை - குருநாகல்

இப்பகுதியின் வேலைகள் 2019 ஒகஸ்ட் மாதத்தில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நான்கு ஒழுங்கைகளைக் கொண்ட இக்கடுகதிப்பாதைப் பகுதி 39.7 கி.மீ நீளமானதாகும். இது மீரிகமை வடக்கு, நகலகமுவை, பொத்துஹரை (முறைமை இடைமாறல்), தம்பொக்கை, குருநாகல் ஆகிய இடங்களில் 5 இடைமாறல்களைக் கொண்டதாக அமையும். இப்பகுதிக்கு இலங்கை அரசாங்கம் உள்ளூர் வங்கிகளின் ஊடாக கடன்களை வழங்குகின்றது.

திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் 2018 தொடர்பாக கடுகதிப்பாதையின் இப்பிரிவின் காணி சுவீகரித்தலின் சுமார் 60% இலக்கிளை அடைந்துள்ளது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இறுதியில் சிவில் வேலை நடவடிக்கைகள் முறையே 7.5% மற்றும் 52% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் பிரிவு 2 இல் விரைவான மற்றும் வினைத்திறனான செயல்முன்னேற்றம் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நிதி தடைகள் எவையும் காணப்படாவிடின் நிதி கிடைக்கப்பெறாத கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் மேலும் சிறந்த முன்னேற்றத்தை கொண்டிருக்கும்.



வீதி அகழ்தல் 58+530-58+770



ABC பரவுதல் மற்றும்பயன்பாட்டு செல்வழி 57+380-57+830

### பகுதி 3: பொத்துஹரை - கலகெதர

இந்த நான்கு ஒழுங்கைகளைக் கொண்ட இக்கடுகதிப்பாதைப் பகுதி 32.5 கிமீ நீளமானதாகும். இது பொத்துஹெர, பொல்காவல, ரம்புக்கனை, கலகெதரை ஆகிய இடங்களில் 4 இடைமாறல்களைக் கொண்டதாக அமையும். இப்பிரிவிற்கு நிதியுதவி அளிப்பதற்கு Bank of Tokyo - Mitsubishi UFJ, Ltd உடன்பட்டுள்ளதுடன் இன்னும் இறுதிப்படுத்தப்படவில்லை. இக்கருத்திட்டத்தின் நிர்மாணக்க காலப்பகுதி 3 வருடங்கள் ஆகும்.

இப்பிரிவிற்கான காணி சுவீகரித்தல் செயன்முறை தற்போது 84% முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பதியப்பட்ட காணி சுவீகரித்தல் செயன்முறையின் ஒட்டுமொத்த முன்னேற்றம் 71% ஆகும். காணி சுவீகரித்தலின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2018 ஆம் ஆண்டில் 43% ஆகக் காணப்பட்டது. காணி சுவீகரித்தல் செயன்முறைக்காக எதிர்பார்க்கப்பட்ட இலக்கை நிதி தடைகள் போன்ற பல்வேறு காரணங்களினால் அடையமுடியவில்லை.

இப்பிரிவிற்கான சிவில் வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஒப்பந்தங்கள் இன்னும் வழங்கப்படாமையால், மட்டுப்படுத்தப்பட்ட தேசிய விலைக்கேள்வியிடல் நடைமுறைக்கூடாக ஜப்பானிய ஒப்பந்தக்காரரும் ஆலோசனையாளரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் மற்றும் நீரியல் ஆய்வு நிறைவடைந்துள்ளன.

- **பகுதி 4: குருநாகல் - தம்புள்ளை**

இந்த நான்கு ஒழுங்கைகளைக் கொண்ட இக்கடுகதிப்பாதைப் பகுதி 60.3 கி.மீ நீளமானதாகும். இது ரிதீகமை, மெல்சிரிபுர, கலேவலை, தம்புள்ளை (A009) மற்றும் தம்புள்ளை (A006) ஆகிய 5 இடங்களில் இடைமாறல்களைக் கொண்டுள்ளது. இப்பகுதிக்கான சாத்திய வள ஆய்வு பூர்த்தியடைந்துள்ளதுடன், சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் இப்பகுதிக்கான காணி சுவீகரிப்புச் செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 2018 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தில் 40% காணி சுவீகரிப்பு இலக்காகக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் 16% பௌதீக முன்னேற்றம் மாத்திரமே அடையப் பெற்றது.எனவே, இக்கருத்திட்டத்தினால் அடையப்பெற்ற இலக்கு 40% ஆகும். 2018 டிசம்பர் இறுதியில் இப்பிரிவின் காணி சுவீகரித்தலின் மொத்த பௌதீக முன்னேற்றம் 52% ஆகும்.

மத்திய கடுகதிப்பாதைக் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 2018டிசம்பர் இறுதியில் 97% முன்னேற்றத்தையும் 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் 70% முன்னேற்றத்தையும்

அடைந்துள்ளது. இப்பிரிவின் காணி மற்றும் காணி மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் 2018 ஆம் ஆண்டில் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. எனவே, நிதி ஒழுங்குவிதிகள் (FR) மூலம் அந்த ஒதுக்கீடுகள் மற்றைய கருத்திட்டங்களுக்கு மாற்றப்பட்டன. மேலும், குறித்த வருடத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செலவுகளுக்காக மேலதிக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

சுவீகரித்தலின் மொத்த பௌதீக முன்னேற்றம் 52% ஆகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியில்மத்திய கடுகதிப்பாதைக் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 70% ஆகக் காணப்பட்டதுடன் 2016 டிசம்பர் 31 ஆந் திகதியில் 21% முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. எனவே, 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க அடைந்த நிதி இலக்கு 50% இற்கும் அதிகமானதாகும்.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-03-7 | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 5,000.00 | 2,243.00 | 2,236.67 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 3,700.00 | 5,664.00 | 5,439.00 |
| | மொத்தம் | **8,700.0** | **7,907.00** | **7,676.00** |

மத்திய கடுகதிப்பாதையின் வரைபடமொன்று ***பின்னிணைப்பு-06*** இல் தரப்பட்டுள்ளது

## 3.4 தென்பிராந்திய கடுதிப்பாதை நீடிப்புக் கருத்திட்டம்

தென்பிராந்திய கடுதிப்பாதையை மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை நீடிப்பது, தென் மாகாண வீதி வலையமைப்பு அபிவிருத்தியில் முக்கியமான ஒரு செயற்பாடாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் மத்தளை சர்வதேச விமான நிலையத்தையும் இலங்கையின் வர்த்தகத் தலைநரகத்துடன் இணைப்பதாகும். இக்கருத்திட்டம் 2015 ஜூலை 4

ஆந் திகதி சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் (EXIM) நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் இக்கருத்திட்டத்தின் மொத்தக் கடன் 171.52 பில்லியன் ரூபாவாகும். இக்கடுகதிப்பாதையின் மொத்த நீளம் 96 கிலோ மீற்றர்களாகும். இப்பாதை கொடகமை - நாகொடை, அபரக்க, பெலியத்தை, கசாகலை, அங்குணுகொலபெலஸ்ஸ, வெட்டிய, சூரியவெவ மற்றும் அந்தரவெவ ஆகிய இடங்களில் 8 இடைமாறல்களைக் கொண்டிருக்கும். தென்பிராந்திய கடுதிப்பாதையின் விரிவாக்கப் பகுதி கீழே காட்டப்பட்டுள்ளவாறு நான்கு பகுதிகளைப் பிரிக்கப்பட்டுள்ளது.

- **பகுதி 1: மாத்தறை - பெலியத்தை (0.0 கி.மீ - 30.0 கி.மீ)**

ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பகுதியின் நிர்மாண வேலைகள் 2019 ஜூலையில் 2016 2016 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பகுதியின் நிர்மாண வேலைகள் 2019 ஜூலையில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கருத்திட்டக் காலப்பகுதி 42 மாதங்களாகும். இவ்வீதிப் பகுதியின் மொத்த நீளம் 30 கிலோ மீற்றர்களாகும். இப்பகுதியின் 2018 டிசம்பர் இறுதியில் உள்ளவாறான மொத்தப் பௌதீக முன்னேற்றம் 82% ஆகக் காணப்பட்டது. இது 2017 ஆம் ஆண்டில் 52% ஆகக் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்கஇக்கருத்திட்டம் அடைந்த மொத்த பௌதீக இலக்குகள் 70% இற்கும் அதிகமானதாகும். இவ்வருடத்தில் பௌதீக செயற்பாடுகளில் 30% முன்னேற்றத்தை அடைந்துள்ளது. காணி சுவீகரித்தல் வேலைகள், அளவை மற்றும் ஆய்வு வேலைகள் நிறைவடைந்துள்ளதுடன் விரிவான வடிவமைப்புச் செயன்முறை 98% நிறைவடைந்துள்ளது. 2018 டிசம்பர் இறுதியில் கரையோரங்களை நிர்மாணித்தல் 95% நிறைவடைந்துள்ளன.

- **பகுதி 2: பெலியத்தை - வெற்றிய (30.0 கி.மீ - 56.0 கி.மீ)**

தென்பிராந்திய கடுதிப்பாதை விரிவாக்கத்தின் இரண்டாம் பகுதி பெலியத்தையிலிருந்து வெற்றிய வரை மொத்தமாக 26 கி.மீ நீளத்தைக் கொண்டுள்ளது. இப்பகுதியின் சிவில் வேலைகள் 2016 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் டிசம்பர் இறுதியில் உள்ளவாறான மொத்தப் பௌதீக முன்னேற்றம் 29% ஆகக் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்தப் பௌதீக முன்னேற்றம் 54% ஆகக் காணப்பட்டது இதில் 25% இவ்வருடத்திற்குள் அடையப்பட்டதாகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான காணி சுவீகரிப்பு செயன்முறைகளின் மொத்தப் பௌதீக

முன்னேற்றம் 99% ஆகும். 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க இப்பிரிவினால் அடையப்பெற்ற ஒட்டுமொத்த இலக்கு 54% ஆகும்.

- **பகுதி 3: வெற்றிய - அந்தரவெவ (56.0கி.மீ - 71.0 கி.மீ)**

2016 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பகுதியின் நிர்மாண வேலைகள் 2019 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வீதிப் பகுதியின் நீளம் 15 கிலோ மீற்றர்களாகும். 2017 டிசம்பர் இறுதியில் உள்ளவாறான மொத்தப் பௌதீக முன்னேற்றம் 45% ஆகக் காணப்பட்டது. 31/12/2018 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் 44% அடையப்பட்டுள்ளது. எனவே டிசம்பர் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான இப்பிரிவிற்காக அடையப்பெற்ற ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 89% ஆகும். 2018 ஆம் ஆண்டின் திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க சிவில் வேலை இலக்கு 51% ஆகும். எனவே 2018 ஆம் ஆண்டில் அடையப்பட்ட இலக்கு 86% ஆகும். 2017 ஆம் ஆண்டில் காணி சுவீகரிப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் மொத்த நீளம் 15 கி.மீ ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டது.



**வலவே பாலத்தில் நிர்மாண வேலைகள் நடைபெறுதல்**

- **பகுதி 4: மத்தளை - அம்பாந்தோட்டை அந்தரவெவ ஊடாக ( 71.0 கிமீ- 96.0 கிமீ)**

2016 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பகுதியின் நிர்மாண வேலைகள் 2019 ஜனவரியில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இது மேலும் 6 மாதங்கள் நீடிப்பினை எடுத்துக் கொண்டுள்ளது. எனவே, கருத்திட்டக் காலப்பகுதி 42 மாதங்களாகும். இவ்வீதிப் பிரிவின் மொத்த நீளம் 25 கிலோ மீற்றர்களாகும். 2017 டிசம்பர் இறுதியில் மொத்தப் பௌதீக முன்னேற்றம் 48% ஆகக் காணப்பட்டது. இது 2018 ஆம் ஆண்டில் 38% முன்னேற்றத்தை அடைந்துள்ளது. எனவே 2018 ஆம் ஆண்டில் இறுதியில் அடையப்பெற்ற ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 86% ஆகும். காணி சுவீகரித்தல் செயன்முறை 2017 ஆம்

ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. செயற்பாட்டுத் திட்டம்-2018 இற்கிணங்க இப்பிரிவின் பௌதீக முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் அதிக முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் இலக்கு அடைவானது 131% ஆகும்.

தென்பிராந்திய கடுதிப்பாதையை விரிவாக்கத்தின் வரைபடமொன்று ***பின்னிணைப்பு -07*** இல் தரப்பட்டுள்ளது.

**31/12/2018ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-2-3-9 | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 1,500.00 | 836.00 | 834.39 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 13,578.00 | 51873.5 | 39,185.55 |
| | **மொத்தம்** | **15,078.00** | **52,709.5** | **40,019.94** |

2018 ஆம் ஆண்டில் எல்லா நான்கு பிரிவுகளினாலும் அடையப்பெற்ற ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 76% ஆகும். இது 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 99% பதிவாகியுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட கட்டுநிதியைப் பெறுவதில் சிக்கல் தன்மை காரணமாக ஏற்பாடுகளை முழுமையாக பயன்படுத்த இயலவில்லை. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் கணிசமானளவு விலைப்பட்டியல்கள் கையில் பொறுப்புகளாக காணப்படுகின்றன.



**இடைமாறல்களை நிர்மாணித்தல்**

# 4.0 நெடுஞ்சலைகள் அபிவிருத்தி

## 4.1 தேசிய வீதி வலையமைப்பு

கடுகதிப் பாதைகள், 'A' மற்றும் 'B' தர நெடுஞ்சாலைகள் என்பவற்றை உள்ளடக்கியதாகவுள்ள இலங்கையின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பைப் பராமரித்து அபிவிருத்தி செய்யும் பணி நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வகையிலும் அடங்கும் வீதிகளின் நீளங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1.1 இலங்கையின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பு**

| வீதி வகை | மொத்த நீளம் (கி.மீ) |
|---|---|
| 'A'தர நெடுஞ்சாலைகள் | 4,215 |
| 'B'தர நெடுஞ்சாலைகள் | 8,005 |
| கடுகதிப் பாதைகள் | 170 |
| **மொத்தம்** | 12,390 |

**அட்டவணை 4.1.2 –2018 ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய வீதி வலையமைப்பு 'A'தர மற்றும் 'B'தர நெடுஞ்சாலைகளின் மாகாண ரீதியான பகிர்வு**

| மாகாணம் | தேசிய வீதிகள் (கி.மீ) | | |
|---|---|---|---|
| | 'A' தர நெடுஞ்சாலைகள் | 'B'தர நெடுஞ்சாலைகள் | மொத்தம் |
| மேல் மாகாணம் | 374.48 | 1,229.82 | 1,604.30 |
| மத்திய மாகாணம் | 408.57 | 1,338.41 | 1,746.98 |
| தென் மாகாணம் | 346.88 | 1,154.36 | 1,501.24 |
| வட மாகாணம் | 734.49 | 524.97 | 1,259.46 |
| கிழக்கு மாகாணம் | 619.55 | 551.13 | 1,170.68 |
| வடமேல் மாகாணம் | 352.43 | 1,002.75 | 1,355.18 |
| வடமத்திய மாகாணம் | 492.04 | 701.74 | 1,193.78 |
| ஊவா மாகாணம் | 471.04 | 693.19 | 1,164.23 |
| சப்ரகமுவ மாகாணம் | 415.57 | 808.58 | 1,224.15 |
| **மொத்தம்** | **4,215.05** | **8,004.95** | **12,220.00** |

ஆகக்கூடிய நீளத்தைக் கொண்ட ‘A’ தர நெடுஞ்சாலை வட மாகாணத்திலும் ஆகக்குறைந்த நீளத்தைக் கொண்டது தென் மாகாணத்திலும் அமைந்துள்ளன. அதேபோல் ஆகக்கூடிய நீளத்தைக் கொண்ட ‘B’ தர நெடுஞ்சாலைகள் மத்திய மாகாணத்திலும் ஆகக்குறைந்த நீளத்தைக் கொண்டது வட மாகாணத்திலும் அமைந்துள்ளன. நிர்மாணம்/மீள்நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட மேற்பரப்பின் வகைக்கிணங்க தேசிய வீதி வலையமைப்பை மேலும் வகைப்படுத்த இயலும்.

**அட்டவணை 4.1.3 –மேற்பரப்பு வகை பகிர்வின் விகிதம்**

| மேற்பரப்பு வகை | நீளம் (கி.மீ) | விகித நிர்மாணம் |
|---|---|---|
| அஸ்போல்ட் கொங்கிறீட் | 8272.3 | 72.1% |
| சேர்பேஸ் டிரசிங் | 141.7 | 1.2% |
| பெனிட்ரேசன் மகாடம் | 2896.5 | 25.3% |
| கொங்கிறீட் | 98.2 | 0.9% |
| கிரவல் | 60.2 | 0.5% |

மேலே விவரிக்கப்பட்டுள்ளதன்படி ஆகக்கூடியதாக பயன்படுத்தப்பட்டுள்ள மேற்பரப்பு வகை அஸ்போல்ட் கொங்கிறீட் ஆகவும் ஆகக்குறைவாக பயன்படுத்தப்பட்டுள்ள வகை கிரவல் எனவும் குறிப்பிட முடியும். மேற்பரப்பு வகையின் சதவிகித பங்களிப்பினை கீழ் குறிப்பிட்டுள்ளவாறு எடுத்துக்காட்ட முடியும்.




**உரு 4.1.1- வீதி மேற்பரப்பு வகைகளின் விகிதப் பகிர்வின் விபரங்கள்**

**தேசிய வீதி வலையமைப்பின் நிலைகள்**

2017 ஆம் ஆண்டில், மொத்த நீளம்174 கி.மீ தேசிய வீதி வலையமைப்பும் மற்றும் மற்றும் 33 கி.மீ வீதி அபிவிருத்தி அதிகாரசபை அல்லாத வீதிகளும் புனரமைக்கப்பட்டன. அத்துடன், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வங்கிகளினால் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்களின் கீழ் இவ்வருடத்தின் இறுதியில் ஏறத்தாழ 360 கி.மீ நீளமான வீதிகளின் புனரமைப்பு நடைபெற்றன. மேலும், குறித்த வருடத்தில் நலிவடைந்த பாலங்களை புனரமைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 30 பாலங்களை வெளிநாட்டு நிதியுதவியின் கீழும் 13 பாலங்களை உள்நாட்டு நிதியுதவியின் கீழும் புனரமைத்தல் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன.

2018 ஆம் ஆண்டில், 47.73 கி.மீ மேம்படுத்தல்/புனரமைத்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வங்கிகளினால் நிதியுதவியளிக்கப்படும் கருத்திட்டங்களின் கீழ் ஆண்டின் இறுதியில் சுமார் 1,050 கி.மீ நீளத்திற்குவீதி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதுமட்டுமன்றி வெளிநாட்டு நிதியுதவின் கீழ் குறித்த வருடத்தில் 12 பாலங்களின் மீள்நிர்மாணம் நிறைவடைந்துள்ளன. உள்நாட்டு நிதியுதவியுடன் வீல் பாலம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 பாலங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

'B' தர வீதிகளின் நீளம் 2018 ஆம் ஆண்டில் சுமார் 10 கி.மீ மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் சேர்க்கப்பட்ட வீதிகளை பின்வருமாறு குறிப்பிட முடியும் (அட்டவணை 4.1.2). அட்டவணையிலுள்ள விடய இல.01 புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதியாவதுடன் எஞ்சியுள்ள இரு விடயங்களும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை எடுத்துக் கொள்ளும் முன்னர் அவை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்துடையதற்றதாகும்.

**அட்டவணை 4.1.4 –2018 ஆம் ஆண்டில் 'B' தர வீதி வலையமைப்பிற்கு புதிதாக சேர்க்கப்பட்ட வீதிகளின் விபரங்கள்**

| விடய இல. | வீதியின் பெயர் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | பெலவத்தை பாதுகாப்பு தலைமையகத்திற்கான அணுகுகை வீதி (B642) | 1.255 |
| 2 | கேகாவை புறவழிப்பாதை (B643) | 4.400 |
| 3 | கெலனிமுல்ல-அங்கொட-கொஸ்வத்த வீதி (B644) | 4.567 |

இலங்கையில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் வேலைகள் நடைபெறுகின்ற வீதிகளைக் காட்டும் வரைபடம் ***பின்னிணைப்பு – 08*** இல் தரப்பட்டுள்ளன.

## 4.2 வீதிகளினதும் பாலங்களினதும் பராமரிப்பு (RMTF)

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) நாடு முழுவதிலும் உள்ள ஏறத்தாழ 12,210 கி.மீ நீளமான தேசிய நெடுஞ்சாலைகளையும், 4,660 பாலங்களையும், 12 மேம்பாலங்களையும் பராமரிக்கின்றது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர்கள், பிரதம பொறியியலாளர்கள், நிறைவேற்றுப் பொறியியலாளர்கள் ஆகியோர் வருடாந்த வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழமையான, பருவகால மற்றும் அவசர மேம்படுத்தல்களை மேற்கொள்கின்றனர். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மணல் முத்திரையிடல், சிறு துளை நிரப்பல், புயங்களின் நிர்மாணம், கட்டமைப்புக்கள், வீதி மேம்பாடு, சமிக்ஞை விளக்குகள் மற்றும் வீதி அடையாளங்கள் போன்ற பரந்தளவிலான பராமரிப்புச் செயற்பாடுகள் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்படுகின்றன. நேரடியான ஊழியர்களின் ஊடாகவும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் ஊடாகவும் 2018 ஜனவரி முதல் டிசம்பர் இறுதி வரையான காலப்பகுதியில் சுமார் 227.2 கி.மீ வீதிகளுக்கு மணல் முத்திரையிடப்பட்டுள்ள அதேவேளையில் 2017 ஜனவரி முதல் டிசம்பர் வரையில் சுமார் 110.62 கி.மீ வீதிகளுக்கு மணல் முத்திரையிடப்பட்டுள்ளது. வீதிப் பராமரிப்பு வேலைகளின் முன்னேற்றம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2.1 – 31/12/2018 இல் உள்ளவாறான வீதிகள் பராமரிப்பின் பௌதீக முன்னேற்றம்**

| மாகாணம் | 2017 டிசம்பர் 31 வரையில் மணல் முத்திரையிடல், செப்பனிடல் மற்றும் மேற்பரப்பு புதுப்பித்தல் ஆகிய வேலைகள் நடைபெற்றவீதிகளின் நீளம் (கி.மீ) | 2018 டிசம்பர் 31 வரையில் மணல் முத்திரையிடல், செப்பனிடல் மற்றும் மேற்பரப்பு புதுப்பித்தல் ஆகிய வேலைகள் நடைபெற்ற வீதிகளின் நீளம் (கி.மீ) |
|---|---|---|
| மேல் மாகாணம் | 1.7 | 3.7 |
| மத்திய மாகாணம் | 14 | 13.0 |
| தென் மாகாணம் | - | - |

<table>
<tr><td>வட மாகாணம்</td><td></td><td>26.0</td></tr>
<tr><td>கிழக்கு மாகாணம்</td><td rowspan="2">19.07</td><td>3.0</td></tr>
<tr><td>கிழக்கு மாகாணம் - (அக்கரைப்பற்று)</td><td>25.0</td></tr>
<tr><td>வடமேல் மாகாணம்</td><td>2.5</td><td>-</td></tr>
<tr><td>வடமத்திய மாகாணம்</td><td>5.3</td><td>6.5</td></tr>
<tr><td>ஊவா மாகாணம்</td><td>21.32</td><td>28</td></tr>
<tr><td>சப்ரகமுவ மாகாணம்</td><td>26.4</td><td>122.0</td></tr>
<tr><td>வெடிப்பு செப்பனிடல் - மேல்</td><td>20.33</td><td>-</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>110.62</td><td>227.2</td></tr>
</table>

தொடர்ச்சியாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே 26.4 கி.மீ மற்றும் 122.0 கி.மீ நீளத்திற்கு ஆகக் கூடுதலாக மணல் முத்திரையிடப்பட்ட, செப்பனிடப்பட்ட மற்றும் மேற்பரப்பு புதுப்பிக்கப்பட்ட வீதிகள் சப்பிரகமுவ மாகாணத்தில் பதிவாகியுள்ளமையை அட்டவணை 4.2.1 இல் உள்ள விபரங்கள் காட்டுகின்றது.




**உரு 4.2.1 – 2018 ஆம் ஆண்டில் மணல் முத்திரையிடப்பட்ட, செப்பனிடப்பட்ட மற்றும் மேற்பரப்பு புதுப்பிக்கப்பட்ட வீதி நீளங்களின் மாகாணரீதியான சுருக்கம்**

மணல் முத்திரையிடல்,செப்பனிடல் மற்றும் மேற்பரப்பை புதுப்பித்தல்ஆகியவற்றை விடவும் 2018 ஆம் ஆண்டில் அஸ்போல்ட் மேற்பரவுதலும் இடம் பெற்றுள்ளது. 2018 ஆம் ஆண்டில் வீதி நீளத்தின் 191.6 கி.மீ மொத்த இலக்கிலிருந்து அஸ்போல்ட் மேற்பரவுதல் செயன்முறை 68% அடையப்பெற்றுள்ளது.

**31/12/2018ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-01** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 5,000.0 | 5385.0 | 4360.0 |
| | **மொத்தம்** | **5,000.0** | 5385.0 | 4360.0 |

31.12.2018 ஆம் திகதியில் இந்நிகழ்ச்சித்திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி முன்னேற்றம் 81% ஆகவும் 2017 ஆம் ஆண்டில் இது 91% ஆகவும் காணப்பட்டது. எனவே ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டதை விடவும் அதிகமான நிதி முன்னேற்றத்தை இந்நிகழ்ச்சித்திட்டம் அடைந்துள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான 3 காலாண்டுகளை விடவும் கூடுதலான முன்னேற்றத்தை நிறைவேற்ற முடிந்துள்ளது.

## 4.3. வலையமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு

இந்நிகழ்ச்சித்திட்டம் வீதிப் பாதுகாப்பு மற்றும் சிறந்த வலையமைப்பு திட்டமிடலை மேம்படுத்தும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாகும் . நெடுஞ்சாலைகள் வலையமைப்பில் ஏற்படுகின்ற வீதி விபத்துகளின் காரணமாக வீதிப் பாதுகாப்பினை வழங்குவதற்கே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிடல் பிரிவின் கீழ் வலையமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவானது இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான பிரதான

செயற்பாட்டாளராக காணப்படுகின்றது. வீதி வலையமைப்பு பாதுகாப்பு அபாயங்களற்றதாக காணப்படுவதற்கு இப்பிரிவு அதன் சகல முயற்சிகளையும் மேற்கொள்வதுடன் பயணிகள் மற்றும் வாகன ஓட்டிகள் ஆகிய இரு வீதிப் பாவனையாளர்களினதும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பின்வருமாறு காண்பிக்க முடியும்.

**அட்டவணை 4.3.1 – வலைமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு நிகழச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**




இதன் கீழ் தேசிய வீதி வலையமைப்புடன் சம்பந்தமுடைய முன்னுரிமைகளின் அடிப்படையிலும் வீதிப் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக போக்குவரத்து பொலிஸாரினாலும் பொது மக்களினாலும் முன்வைக்கப்படுகின்றவேண்டுகோள்களின் அடிப்படையிலும் வருடந்தோறும் இவ்வகையான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தேசிய வரவுத்திட்டத்தினால் ஆண்டுதோறும் பெறப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டு தொகை காரணமாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வலையமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு பிரிவின் மனித வளப் பற்றாக்குறை காரணமாகவும் முன்னெடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை பின்வருமாறு காண்பிக்க முடியும்.

**அட்டவணை 4.3.2. வலையமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள்**

| விடய இல | நடவடிக்கை | அடைவு | % |
|---|---|---|---|
| 01 | கட்புலப்பாட்டை மேம்படுத்துவதற்கு தேசிய நெடுஞ்சாலைகளில் அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில்பாதுகாப்பு உபகரங்களின் முன்னேற்பாடு | 100 நெகிழ்வான bollards பொருத்துதல் | 100% |
| 02 | பாடசாலை மற்றும் கைத்தொழில் வலையங்களில் வீதிப் பாதுகாப்பினை மேம்படுத்தல் | ஐந்து பாடசாலை வலையங்கள் தெரிவுசெய்யப்பட்டு சமிஞ்சைப் பலகைகளை பொருத்தப்பட்டுள்ளன | 100% |

இக்கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டில் 34% ஆகக் காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் இது 86% ஆகக் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க ஒரு சில நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டமையினால் அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு மற்றைய கருத்திட்டத்திற்கு மாற்றப்பட்டது. எனவே திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக பெறப்பட்டுள்ள நிதி முன்னேற்றம் கணிசமானளவாகும்.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-2-4-21 | 2506- உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 25.0 | 19.0 | 16.36 |
| மொத்தம் | | 25.0 | 19.0 | 16.36 |

## 4.4 போக்குவரத்து முகாமைத்துவம்

தேசிய நெடுஞ்சாலைகளின் சந்திகளில் காணப்படும் வாகனப் போக்குவரத்தை குறைப்பதற்கும் விபத்துக்களை குறைப்பதற்கும் மற்றும் வைத்தியசாலைகள் ,பாடசாலைகள் , பொது இடங்களுக்கு அருகில் பாதசாரிகளின் பாதுகாப்பிற்காகவும் இக்கருத்திட்டம் வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நெடுஞ்சாலைகள் வடிவமைப்புப் பிரிவின் கீழ் போக்குவரத்துப் பிரிவினால் இது முன்னெடுக்கப்படுகின்றது.

இப்பிரிவினால் பின்வரும் இரு பாரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன;

- வடிவமைப்பு, போக்குவரத்து சமிஞ்சைகள் மற்றும் அடையாளங்களை ஆய்வு செய்தல்
- வடிவமைப்பு, சமிஞ்சைப்படுத்தப்பட்டுள்ள குறுக்குச் சந்திகளில் அவை பொருத்துதலும் பராமரித்தலும்

வில்லியம் சந்தியில் TLS முறைமையை மேம்படுத்தல் 2017 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டது. பெலன்வில கோவிலில் பெலிகன் கடவை, மவுன் மேரியில் பெலிகன் கடவை, மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் பெலிகன் கடவை, வேம்படி, கோப்பாய், நெல்லியடி, ஆரியகுளம், சுன்னாகம் மற்றும் திருநெல்வேலி சந்திகளில் வாகனப் போக்குவரத்து விளக்கு முறைமையை பொருத்துதல் போன்றன 2016 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டன. 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் பின்வரும் செயற்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் முன்னைய சமிஞ்சைகளை பொருத்துதல் தொடர்பாக பொறுப்புகளின் பகுதியை செலுத்துவதற்கு ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டமையால் இக்கருத்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை. (2016 ஆம் ஆண்டின் இறுதியில் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டாலும் விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு எந்தவித கட்டுநிதியும் காணப்படவில்லை)

- பெலிகன் கடவையுடன் கந்தானை சந்தியில் சமிஞ்சையிடல்
- கல்கிஸ்சை மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்னால் பெலிகன் கடவையிடல்
- தேபனாமவில் பெலிகன் கடவையிடல் (பத்தரமுல்லை – பன்னிப்பிற்றிய வீதி)
- நாவல திறந்த பல்கலைக்கழகம் உள்ள இடத்தில் பெலிகன் கடவையிடல்

2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட அசல் செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் நான்கு நடவடிக்கைகளை இவ்வருடத்திற்குள் நிறைவு செய்வதற்கு இலக்கிடப்பட்டதுடன் அவை வருடத்திற்குள் திருத்தம் செய்யப்படவில்லை. அந்நான்கு நடவடிக்கைகளில் மூன்று நடவடிக்கைகளை இவ்வருடத்திற்குள் அமுல்படுத்த முடிந்துள்ளன. முன்னெடுக்கப்பட்ட மூன்று நடவடிக்கைகளும் இவ்வருடத்திற்குள் 100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வேலை முன்னெடுக்கப்படாத திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் பன்னிப்பிற்றிய மேம்பால சந்தியில் போக்குவரத்து சமிஞ்சை விளக்குத் தொகுதியை மேம்படுத்தும் பொருட்டு மாற்றப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க கீழே தரப்பட்டுள்ள குறிப்பிடப்பட்டுள்ள (அட்டவணை 4.4.1) நடவடிக்கை தவிர இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கு அடைவு 100% அடையப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சுருக்கமா கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.4.1 – போக்குவரத்து முகாமை நிகழ்ச்சித்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

| விடய இல | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை | இடம் | பௌதீக முன்னேற்றம் 31.12.2018 இல் |
|---|---|---|---|
| 1 | AA5 மற்றும் B36 வீதிகளின் குறுக்குச் சந்திகளில் போக்குவரத்து சமிஞ்சை விளக்குத் தொகுதி | பதுளை | 100% |
| 2 | தேபனாம, பத்தரமுல்லையில் பெலிகன் கடவைகள் | கொழும்பு | 100% |
| 3 | பெலிகன் கடவையுடன் இணைத்து கந்தானைச் சந்தியில் சமிஞ்சைகள் பொருத்துதல் | கம்பஹா | திட்டமிட்டவாறு வடிவியல் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படவில்லை.. |
| 4 | பன்னிப்பிட்டிய மேம்பாலச் சந்தியில் போக்குவரத்து சமிஞ்சை விளக்குத் தொகுதியை பொருத்துதல் | கொழுப்பு | 100% |

இக்கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் 100% நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு 25.0 மில்லியன் ஆவதுடன் அண்மைய

வருடங்களில் முன்னைய விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் 66% அதிகரிக்கப்பட்டது.

**31/12/2018ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-2-4-22 | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 25.0 | 41.5 | 37.4 |
| | **மொத்தம்** | **25.0** | **41.5** | **37.4** |

## 4.5 பேராதனை - பதுளை - செங்கலடி (A5) வீதி புனரமைப்புக் கருத்திட்டம்

பேராதனை-பதுளை- செங்கலடி வீதியில் (A5) ஊவா மாகாணத்திலுள்ள பதுளையிலிருந்து கிழக்கு மாகாணத்திலுள்ள செங்கலடி வரையில் இரண்டு ஒழுங்கைகளைக் கொண்ட 147 கி.மீ நீளமான நெடுஞ்சாலையைப் புனரமைத்து மேம்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இக்கருத்திட்டத்திற்கான மொத்தக் கடன் தொகை 140 மில்லியன் யூரோக்களாகும். மேற்குறித்த கருத்திட்டத்திற்கு அபிவிருத்திக்கான சவுதி நிதியம், சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் என்பன 60 மில்லியன் ஐ.அ.டொலர் சம அளவிலான கடன் தொகையை வழங்கும். மீதித் தொகையான 20 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை இலங்கை அரசாங்கம் வழங்கும். பதுளை - செங்கலடி வீதிக் கருத்திட்டம் இரண்டுஆக்கக்கூறுகளின் கீழ் ஆறு ஒப்பந்தப் பொதிகளை உள்ளடக்கியுள்ளது:

**அட்டவணை 4.5.1 பேராதனை - பதுளை - செங்கலடி கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட ஒப்பந்தப் பொதிகள்**

| *அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட ஒப்பந்தப் பொதிகள் (ஆக்கக்கூறு "ஏ")* | | |
|---|---|---|
| பொதி 1 | பிபிலே - பதியத்தலாவை வீதி | 29 கி.மீ |
| பொதி 2 | பதியத்தலாவை - தம்பிட்டி வீதி | 30 கி.மீ |
| பொதி 3 | தம்பிட்டி - செங்கலடி வீதி | 27.8 கி.மீ |
| *சர்வதேசஅபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட ஒப்பந்தப் பொதிகள் (ஆக்கக்கூறு "பி")* | | |
| பொதி 1 | பதுளை - பஸ்ஸரை வீதி | 20 கி.மீ |
| பொதி 2 | பஸ்ஸரை - லுணுகலை வீதி | 21 கி.மீ |
| பொதி 3 | லுணுகலை - பிபிலே வீதி | 19 கி.மீ |

அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் கீழ் புனரமைக்கப்படும் பொதி 1 மற்றும் 2 இனது சிவில் வேலைகள் 2018 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018 ஆம் இறுதியில் சுமார் 3% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள போதிலும் ஒப்பந்தப் பொதி 3 இன் சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதேபோல் பயன்பாட்டு சேவைகளை இடமாற்றம் செய்தல் மற்றும் காணி சுவீகரிப்பு செயன்முறை 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் 90% மொத்த பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 70% முன்னேற்றத்தை அடைந்துள்ளது. சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட ஒப்பந்தப் பொதிகளுக்கான சிவில் வேலைகளின் காணி சுவீகரிப்பு ஜூன் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் எல்லா மூன்று பொதிகளுக்குமான திரட்டிய பௌதீக முன்னேற்றம் 6% ஆகக் காணப்படுகின்றது. ஆனால், இது செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கினை விட இது குறைவானதாகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியில் எல்லா மூன்று பொதிகளினதும் பௌதீக முன்னேற்றம் 37% ஐ அடைந்துள்ளது.




**உரு 4.5.1- சிவில் வேலையின் இலக்கு அடைவு**




**உரு 4.5.2 பயன்பாட்டுசேவைகளை இடமாற்றம் செய்தல் மற்றும் காணி சுவீகரித்தல் செயன்முறை ஆகியவற்றின் இலக்கு அடைவு**

அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் பிரிவிற்காக இக்கருத்திட்டம் 87% நிதி முன்னேற்றத்தை 2017 ஆம் ஆண்டில் அடைந்துள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் இது 57% முன்னேற்றமாக பதிவாகியுள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

(அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தினால் நிதியளிக்கப்படும் பிரிவிற்கானது)

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-04-23 (அபிவிருத்திக் கான சவுதி நிதியம்) | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 100.0 | 35.0 | 5.5 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1,200.0 | 1,180.0 | 689.0 |
| | உபதொகை (அபிவிருத்திக்கான சவுதி நிதியம்) | 1,300.0 | 1215.0 | 694.5 |

சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் பிரிவு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 97% மற்றும் 81% நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இதன்படி இக்கருத்திட்டத்தின்ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 97% ஆகவும் 31.12.2018 ஆம் திகதியில் 72% ஆகவும் காணப்படுகின்றது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

(சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தினால் நிதியளிக்கப்படும் பிரிவிற்கானது)

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-04- 41 (சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்) | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 100.0 | 120.0 | 120.0 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1,950.0 | 1,645.0 | 1,317.0 |
| | உபதொகை (சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்) | 2,050.0 | 1,765.0 | 1,437.0 |

2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் குறைவடைந்துள்ளதுடன் கருத்திட்டத்தினால் அடையப்பெற்ற குறைவான பௌதீக முன்னேற்றம் காரணமாக பெறப்பட்ட அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு இவ்வருடத்திற்குள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் வீதிப் பிரிவுகளின் புனரமைப்பு வேலைகள் கீழே உருக்கள் 4.5.4 மற்றும் 4.5.5 இல் காட்டப்படுகின்றன.



**152+240 இற்கு இரு புறங்களிலும் அஸ்போல்ட் பரவுதல் – பஸ்ஸரை**



**138+170 கி.மீ லிருந்து138+320 கி.மீ வரையில் ABC மற்றும் முதன்மை வேலைகள் –பதுளை**

இக்கருத்திட்டத்தின் இடவமைவு வரைபடம் ***பின்னிணைப்பு - 09*** இல் காட்டப்படுகின்றது

## 4.6 தேசிய நெடுஞ்சாலைகள் துறைக் கருத்திட்டம் – துணைக் கடன்

ஆசிய அபிவிருத்தி வங்கி, தென்பிராந்திய கடுகதிப்பாதை இணைப்பு வீதிகளுக்கு, 2767 ஆம் கடன் இலக்கத்தின் கீழ் மேலதிக கடன் நிதிகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் புனரமைத்து மேம்படுத்துவதற்கு 58.59 கி.மீ நீளமான வீதி அடையாளம் காணப்பட்டுள்ளது. 2012 பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இக்கருத்திட்டத்தின் ஆறு வீதி ஒப்பந்தப் பொதிகளில் ஐந்து வீதிப் பொதிகள் 2015 ஜனவரியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. பாமன்கடை – கெஸ்பேவை (B 084) வீதிப் பொதி 2016 பெப்ரவரியில் பூர்த்திசெய்யப்பட்டது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் விலைப்பட்டியல்களைச் செலுத்தும் செயன்முறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிப் பொதிகள் அட்டவணை 4.6.1 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.6.1 தேசிய நெடுஞ்சாலைத் துறைக் கருத்திட்டம் –துணைக் கடன் (கடன் இல 2767) இன் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிப் பொதிகள்**

| வீதி / கருத்திட்ட விபரம் | நீளம் (கி.மீ) | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|
| மாத்தறை - கொடகம (ஏ 024) வீதிப் பகுதி | 3.4 | பூர்த்தியடைந்துள்ளது |
| ஹிக்கடுவை முதல் தென்பிராந்திய கடுதிப்பாதை வரையான (பி 153) வீதிப் பகுதி | 14.34 | பூர்த்தியடைந்துள்ளது |

| | | |
|---|---|---|
| அலுத்கமை முதல் தென்பிராந்திய கடுதிப்பாதை வரையான (பி 157) வீதிப் பகுதி | 11.07 | பூர்த்தியடைந்துள்ளது |
| கட்டுகுருந்தை – நாகொடை (பி 207) வீதிப் பகுதி | 2.72 | பூர்த்தியடைந்துள்ளது |
| பாமன்கடை – கெஸ்பேவை (பி 084) வீதிப் பகுதி | 12.76 | பூர்த்தியடைந்துள்ளது |
| கிருளப்பனை முதல் கொடகம வரையான (ஏ 004) வீதிப் பகுதி | 14.36 | பூர்த்தியடைந்துள்ளது |

2017 ஆம் ஆண்டில் நிதி முன்னேற்றம் 98% ஆகக் காணப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டில் அது 100% இனை அடைந்துள்ளது.

**31.12.2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-04-28 | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 100.0 | 100.0 | 100.0 |
| | மொத்தம் | **100.0** | **100.0** | **100.0** |

## 4.7 வீதிகள் வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் - (அபிவிருத்திக்கான சவுதி நிதியம்)

சுமார் 79 கி.மீ நீளமான ஆறு வீதிப் பகுதிகளைப் புனரமைத்து மேம்படுத்துவதற்காக, அபிவிருத்திக்கான சவுதி நிதியத்திலிருந்து (SFD) 60 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இக்கருத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள் முன்னுரிமையொன்றின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட வீதிப் பகுதிகளைப் புனரமைத்து மேம்படுத்துவதன் மூலம் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை மேம்படுத்துவதாகும். நிர்மாணப் பணிகள் 2013 ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2015 டிசம்பர் இறுதியில் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டன. 2015 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்யப்பட்ட வீதிகளுக்கான விலைப்பட்டியல்களைச் செலுத்தும் செயன்முறை 2016ஆண்டு தொடங்கி இவ்வருடத்திலும் நடைபெற்று வருகின்றது.

**அட்டவணை 4.7.1 வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிகள்**

| கருத்திட்ட விபரம் | நீளம் (கி.மீ) |
|---|---|
| A09 நெடுஞ்சாலையின் கட்டுகஸ்தொட்டை - அலவதுகொடை வீதிப் பகுதி | 10.9 |
| A09 நெடுஞ்சாலையின் அலவதுகொடை - பலபத்வெல வீதிப் பகுதி | 16.9 |
| A09 நெடுஞ்சாலையின் பலபத்வெல - நாஉல வீதிப் பகுதி | 21.6 |
| B541 வீதியின் தம்பலகாமம் - கிண்ணியா வீதிப் பகுதி | 8.5 |
| B93 வீதியின் தெஹியோவிற்ற - தரணியகலை வீதிப் பகுதி | 14.0 |
| A01 நெடுஞ்சாலையின் பேலியகொடை - கிரிபத்கொடை வீதிப் ப | 7.2 |
| **மொத்தம்** | **79.1** |

பூர்த்தி செய்யப்பட்டுள்ள இந்த வீதிப் பிரிவுகளை விடவும், நாஉல நகரம் உள்ளடங்கலாக கண்டி – யாழ்ப்பாணம் வீதியின் 53+740 கி.மீ லிருந்து 58+ 000கி.மீ வரையிலான வீதிப் பிரிவினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைகள் 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 2018 டிசம்பரிலேயே ஆரம்பிக்கப்பட்டது. எனவே, 2018 ஆம் ஆண்டின் இறுதியில் திட்டமிட்டவாறு பௌதீக இலக்குகள் அடையப்பெற்றுள்ளன. ஆயினும், திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க அடையப்பட்ட இலக்கு கணிசமானளவு குறைவானதாகும்.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதி முன்னேற்றம் முறையே 95% மற்றும் 27% ஆகும். அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு 2.25 மில்லியனால் திருத்தம் செய்யப்பட்டுள்ள போதிலும் நிதி முன்னேற்றம் அதிகரிக்கப்படவில்லை. மேலே குறிப்பிட்டுள்ளவாறு, வருடத்தின் முதல் காலாண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த இவ்வீதிப் பிரிவின் புனரமைப்பு வேலைகள் அதற்கிணங்க அமுல்படுத்தப்படவில்லை. இதனால் நிதி முன்னேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது. நாஉல நகர அபிவிருத்திக்கான திருத்தம் செய்யப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு இ.ரூ.150 மில்லியன் ஆகும். மேற்கூறிய வீதிப் பிரிவின்

புனரமைப்பு வேலைகளுக்கான அனுமதிச் செயன்முறைக்கு ஏற்பட்ட தாமதம் காரணமாக அதிகமான ஒதுக்கீட்டை திட்டமிட்டவாறு பயன்படுத்த முடியவில்லை.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான வீதிப் பிரிவு**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-04-29 | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 10.00 | 10.00 | 9.6 |
| | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 151.0 | 153.25 | 38.1 |
| | **மொத்தம்** | **161.0** | **163.25** | **47.7** |

இக்கருத்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட வீதிப் பிரிவுகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.



தெஹியோவிட –தெரணியகல-நூரி வீதிப் பிரிவு



தம்பலகாமம்-கிண்ணியா வீதிப் பிரிவு

## 4.8 வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் (NRCP) மேலதிக நிதியீட்டம்

வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் பூர்த்தியடைந்ததன் பின்னர் இக்கருத்திட்டத்திற்கான மேலதிக நிதியுதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது. இந்த மேலதிக நிதியீட்டத்தின் மூலம், வட மாகாணத்திலும் வட மத்திய மாகாணத்திலுமுள்ள 61.2 கி.மீ ஏ தர வீதிகளும் 56.2 கி.மீ பி தர வீதிகளும் அடங்கலாக இக்கருத்திட்டத்தின் பெறுபேறுகள் 118 கி.மீற்றர்கள் அதிகரித்துள்ளன. இக்கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமாக உள்ளது. 9 பொதிகளுக்கான சிவில் வேலைகளுக்கான ஒப்பந்தங்கள் அனைத்தும் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டன. குறைகாண் அறிவிப்புக் காலத்திலுள்ள பின்வரும் எல்லா ஒப்பந்தங்களும் புனரமைக்கப்பட்ட எல்லா வீதிப் பிரிவுகளினதும் செயல்நிறைவேற்ற அடிப்படையிலான பராமரிப்புகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வருடத்தில் விலைப்பட்டியல்களைச் செலுத்தும் செயன்முறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடனின் சேமிப்பு காரணமாக A 09 கண்டி - யாழ்ப்பாண (14+100 கி.மீ-150+400 கி.மீ) வீதியின் புனரமைத்தல் / மேம்படுத்தல் 2017 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்டது.

***அட்டவணை 4.8.1*** **வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் மேலதிக நிதியீட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிப் பகுதிகள்** ***மற்றும் முன்னேற்றம்***

| வீதியின் பெயர் | நீளம் (கி.மீ) |
|---|---|
| வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதி (A029 ) (24+000 கி.மீ – 34+950 கி.மீ) | 10.95 |
| மதவாச்சி - கெப்பற்றிக்கொல்லாவை வீதி (B 283) (0+000 கி.மீ – 12+600 கி.மீ) | 12.60 |
| மதவாச்சி - கெப்பற்றிக்கொல்லாவை வீதி (B 283) (12+600 கி.மீ – 25+400 கி.மீ) | 12.80 |
| கெப்பற்றிக்கொல்லாவை - பதவிய வீதி ( B211) (0+000 கி.மீ – 15+500 கி.மீ) | 15.50 |
| கெப்பற்றிக்கொல்லாவை - பதவிய வீதி (B211) (15+500 கி.மீ – 31+35 கி.மீ) | 15.85 |
| மதவாச்சி - மன்னார் - தலைமன்னார் நெடுஞ்சாலை (A014) (47+100 கி.மீ – 62+100 கி.மீ) | 15.10 |
| மதவாச்சி - மன்னார் - தலைமன்னார் நெடுஞ்சாலை (A014)(62+100 கி.மீ – 76+500 கி.மீ) | 14.40 |
| யாழ்ப்பாணம் - பண்ணை - நெடுந்தீவு வீதி ( AB 019) (0+000 – 10+000 கி.மீ) | 10.00 |
| யாழ்ப்பாணம் - பண்ணை - நெடுந்தீவு வீதி ( AB 019) (10+000 கி.மீ – 20+27 கி.மீ) | 10.27 |
| கண்டி – யாழ்ப்பாணம் வீதி(A09) (நடைபெற்று வருகின்றது) | 9.3 |

A 09 கண்டி – யாழ்ப்பாணம் வீதி (141+100 கி.மீ -150+400 கி.மீ)புனரமைத்தல் / மேம்படுத்தல்

CP-22 இன் சிவில் வேலை 2018 ஆம் ஆண்டின் டிசம்பர் இறுதியில் 99% பூர்த்தியடைந்துள்ளது. 2017 ஆம் அண்டின் இறுதியில் புனரமைத்தல் வேலையின் முன்னேற்றம் 47% இனை அடைந்துள்ளது. திருத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க கருத்திட்டத்தின் இலக்கு அடைவு கூடிய பௌதீக முன்னேற்றத்துடன் சம்பந்தமாக 100% இனை விடவும் அதிகமாகும்.

நிதி முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டில் 83 % ஆவதுடன் 2018 ஆம் ஆண்டில் 86% ஆகவும் காணப்படுகின்றது. இவ்வருடத்தில் விலைப்பட்டியல்களைச் செலுத்தும் செயன்முறைக்காக கருத்திட்டத்தின் அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு இ.ரூ.828 மில்லியன் வரையில் திருத்தம் செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத்திட்டத்திற்கிணங்க இக்கருத்திட்டம் 100% நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் முன்னர் எதிர்பார்த்ததை விடவும் செலவுத் தொகை 50% இற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது. பெரும்பாலும் எல்லா வீதிப் பொதிகளும் 2015 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்துள்ள போதிலும், அவைகளின் விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்தல் 2018 ஆம் ஆண்டிலும் செலுத்த வேண்டியுள்ளன.

**31.12.2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-30** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 230.0 | 828.0 | 708.5 |
| | **மொத்தம்** | **230.0** | **828.0** | **708.5** |

## 4.9 கடுகதிப்பாதை இணைப்பு மேம்படுத்தல் கருத்திட்டம்

கடுகதிப்பாதை இணைப்பு மேம்பாட்டுத் திட்டமானது, தென்பிராந்திய வீதி இணைப்புக்கருத்திட்டத்தின் ஒரு பகுதியாகும் இது கடுகதிப்பாதை இணைப்பு மேம்பாட்டைத்

திட்டமிடுவதில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆற்றலை மேம்படுத்துவதுடன் அமுலாக்கல் தயார்நிலையையும் உறுதிப்படுத்துகின்றது. கருத்திட்டக் காலம் 2014 முதல் 2019 வரையாகும். ECIP இன் நோக்கெல்லை பிரதானமாகப் பின்வருவனவற்றை இலக்காகக் கொண்டுள்ளது;

- கடுகதிப்பாதை வலையமைப்புடன் தொடர்புபடுத்தப்படும் தேசிய நெடுஞ்சாலைகளின் மேம்படுத்த வேண்டிய தேவைகளைக் கண்டறிதல்.
- சாத்திய வள ஆய்வுக்கான எதிர்காலத் திட்டங்களை நிகழ்ச்சிப்படுத்துதல், விரிவான பொறியியல், காணி சுவீகரிப்பு மற்றும் மீள் குடியேற்றம், சிவில் வேலைகளின் பெறுகை.
- சுமார் 250 கி.மீ நீளமான தேசிய நெடுஞ்சாலைகள் தொடர்பான சாத்திய வள ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
- சுமார் 200 கி.மீ நீளமான தேசிய நெடுஞ்சாலைகளுக்கான விரிவான பொறியியல் திட்டம் தயாரித்தல்.
- வடிவமைப்பு நியமங்கள் மற்றும் நிர்மாணத் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்குதல்.
- திட்டமிடல் தொழில்நுட்பம், வடிவமைப்பு நியமங்கள், நிர்மாணத் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகள்.

மேற்குறித்த பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு 5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்தது. இக்கருத்திட்டம் தென் பிராந்தியத்தில் வினைத்திறன்மிக்க வீதிப் போக்குவரத்து வலையமைப்பினை உருவாக்கும். இத்திட்டத்தின் விளைவாக தென் பிராந்தியத்திலுள்ள கடுகதிப்பாதை வலையமைப்பிற்கும் உள்ளூர் வீதிகளுக்கும் இடையிலான இணைப்பு மேம்படுத்தப்படும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. கடுகதிப்பாதை வலையமைப்பை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலைகளின் சாத்திய வள ஆய்வு மற்றும் விரிவான பொறியியல் வடிவமைப்பு என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவை. ஆலோசகர் RDCயுடன் இணைந்து KCI-KECC JV.
2. தனிப்பட்ட உசாவுநர் –SHETC ICS-001 போக்குவரத்துத் திட்டமிடலாளர் (சர்வதேச)
3. தனிப்பட்ட உசாவுநர் –SHETC ICS-002 நெடுஞ்சாலைப் பொறியியலாளர் (சர்வதேச)

4. தனிப்பட்ட உசாவுநர் –SHETC ICS-003 பாலங்கள் மற்றும் கட்டமைப்புப் பொறியியலாளர் (சர்வதேச)
5. தனிப்பட்ட உசாவுநர் -CEP ICS 004 - நெடுஞ்சாலைப் பொறியியலாளர் (சர்வதேச)
6. தனிப்பட்ட -ICS 006- பாலம்/ கட்டமைப்புப் பொறியியலாளர் (சர்வதேச)
7. தனிப்பட்ட உசாவுநர் -CEP ICS 007–போக்குவரத்து திட்டமிடல் மற்றும் எதிர்வுகூறும் பகுப்பாய்வாளர்
8. தனிப்பட்ட உசாவுநர் -CEP ICS 008–போக்குவரத்து திட்டமிடல் மற்றும் எதிர்வுகூறும் பகுப்பாய்வாளர் (சர்வதேச)

2016 ஆம் ஆண்டின் இறுதியில் இல. 01-05 வரை செயற்பாடுகள் 100% முன்னேற்றத்தை அடைந்துள்ளன.06 ஆம் இலக்கச் செயற்பாடு 2016ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நோக்கெல்லை மாற்றம் காரணமாகஅவற்றைப் பூர்த்தி செய்ய முடியவில்லை .ஆனால் அதனோடு தொடர்புபட்ட வேலைகள் நடைபெற்று வந்ததுடன் அதன் முன்னேற்றம் 55% ஆகப் பதிவாகியுள்ளது. 2017 ஆம் இறுதியில் 7ஆம் இலக்கச் செயற்பாட்டின் முன்னேற்றம் 20% ஆகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 7 ஆம் இலக்கச் செயற்பாடு நிறைவு பெற்றுள்ளதுடன் 6ஆம் மற்றும் 8ஆம் இலக்கச் செயற்பாடுகள் 90% பௌதீக முன்னேற்றத்தினை அடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டினதும் இலக்கு அடைவு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.




**உரு 4.9.1- திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக இலக்கு அடைவு**

2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான நிதி முன்னேற்றம் முறையே 61% மற்றும் 25% ஆகும். சுமார் மூன்று காலாண்டுகளினால் வரவுசெலவுத்திட்டம் திருத்தம் செய்யப்பட்ட போதிலும் 31.12.2018 ஆம் திகதியில் எதிர்பார்க்கப்பட்டவாறு செலவினம் அறிக்கையிடப்படவில்லை.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-42** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 23.0 | 99.5 | 60.38 |
| | **மொத்தம்** | **23.0** | 99.5 | 60.38 |

## 4.10 வீதிகள் வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்(சர்வதேசஅபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் - I)

இக்கருத்திட்டத்திற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் (OFID) 40 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இக்கருத்திட்டத்தில், சுமார் 37 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகளைப் புனரமைத்து மேம்படுத்துதல், பொல்கஹவலை - கேகாலை வீதியில் மகாஓயாவுக்கு குறுக்காகவுள்ள 3/2 ஆம் இலக்க பாலத்தின் மீள்நிர்மாணம் என்பன இக்கருத்திட்டத்தில் உள்ளடங்கும். இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் நெடுஞ்சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்க வாகனத் தொழிற்பாட்டுச் செலவைக் குறைத்து பிரதேசத்திலுள்ள அபிவிருத்திக்காக சமூகத்திற்கு வழங்கப்படும் சேவை மட்டத்தினை அதிகரிப்பதாகும். இது நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும். நான்கு ஒப்பந்தப் பொதிகள் உடனடி அமுலாக்கத்திற்காக ஒப்படைக்கப்பட்டதுடன் எல்லா ஒப்பந்தப் பொதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் A005 பேராதனை – பதுளை –

செங்கலடி வீதியின் 2.63 கி.மீ புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் (ஒப்பந்தப் பொதி 5) கடனின் சேமிப்புகளை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டது. மேற்கூறிய வீதிப் பொதிக்கு 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற பௌதீக முன்னேற்றம் 5% ஆகவும் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 35% ஆகவும் காணப்படுகின்றது. திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க கருத்திட்டத்தின் இலக்கு அடைவு 2018 ஆம் ஆண்டில் 55% ஆகவும் 2017 ஆம் ஆண்டில் 7% ஆகவும் காணப்படுகின்றது.

**அட்டவணை 4.10.1 வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதி மற்றும் பாலப் பொதிகள்**

| கருத்திட்ட விபரம் | நீளம் (கிமீ) | பௌதீக முன்னேற்றம் 31/12/2017 ஆம் திகதியில் | பௌதீக முன்னேற்றம் 31/12/2018 ஆம் திகதியில் |
|---|---|---|---|
| இரக்குவானை - மாதம்பை வீதிப் பகுதி | 14.0 | பூர்த்தியடைந்துள்ளது | |
| எஹலியகொடை -தெஹியோவிட வீதிப் பகுதி | 17.0 | | |
| எத்துள்கோட்டே - கொஹுவலை வீதிப் பகுதி | 6 .0 | | |
| பொல்கஹவலை -கேகாலை வீதியிலுள்ள 3/2 ஆம் இலக்க பாலத்தின் மீள்நிர்மாணம் | 120.4 மீ (1 பாலம்) | | |
| பேராதனை – பதுளை – செங்கலடி வீதி | 2.63 | 4.8% | 35% |

இக்கருத்திட்டம் 2017 ஆம்ஆண்டில் 59% நிதிமுன்னேற்றத்தைஅடைந்துள்ளபோதிலும், 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் சற்று குறைவான முன்னேற்றத்தையே அடைந்துள்ளது. இக்குறைவான முன்னேற்றத்திற்கு காரணம் ஒப்பந்தக்காரரின் குறைவான செயலாற்றுகையேயாகும்.

**31.12.2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-31** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 25.0 | 25.0 | 20.5 |
| | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 250.0 | 250.0 | 124.8 |
| | **மொத்தம்** | **275.0** | **275.0** | **145.3** |

இக்கருத்திட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வீதிப் பிரிவுகள் முறையே கீழே காட்டப்பட்டுள்ளன.



**எஹலியகொடை தெஹியோவிட- வீதிப் பகுதி**



**பேராதனை – பதுளை – செங்கலடி வீதியின் இடப்பக்க Ch. 0+390 கரையிடலை கச்சிதமாக அமைத்தல்**

## 4.11 கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்

கொழும்பு மாவட்டத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் (OFID) 50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் கொழும்பு மாவட்டத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை மேம்படுத்துவதாகும். இது கொழும்பு மாவட்டத்தின் நகரப் பிரதேசங்களின் வீதிகளில் அதிக வாகனப் போக்குவரத்து நெரிசலில் வீணடிக்கப்படும் நேரத்தைக் குறைத்து தேசிய பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்வதற்கு உதவும். இக்கருத்திட்டம் பொதி I இன் கீழ், நாவலை- நுகேகொடை வீதியில் உள்ள நாவலைப் பாலத்தை அகலமாக்கும் பணி 2015 மே மாதத்தில் பூர்த்திசெய்யப்பட்டது. பின்வரும் அட்டவணையில் 01 முதல் 05 வரையான இலக்கங்களில் காட்டப்பட்ட செயற்பாடுகள் 2016 ஜூலையில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. செயற்பாட்டு இல.08, 10 ; கட்டம் II இன் 11,12 மற்றும்13 இன் வீதிப் பிரிவுகளுக்கான காணி சுவீகரித்தல் வேலைகள் 2017 மற்றும் 2018 ஆம்ஆண்டுகளில்நடைபெற்றுவருகின்றன. காணி சுவீகரிப்பில் தாமதம் ஏற்பட்டதினால் கருத்திட்ட ஆரம்பத் திகதிகளும் அதற்கிணங்கத் தாமதமடைந்தன.

**அட்டவணை 4.11.1 கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்திச் கருத்திட்டத்தின் கீழ் புனரமைப்புக்குத் தெரிவுசெய்யப்பட்ட வீதிப் பகுதிகள்**

| இல. | வீதியின் பெயர் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 01 | ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை அணுகுகை வீதி | 1.4 |
| 02 | தெமட்டகொடை - வெள்ளம்பிட்டி வீதி | 1.9 |
| 03 | வெலிக்கடை - கொஹிலவத்தை வீதி | 6.0 |
| 04 | கொலன்னாவை - யக்பத்தை வீதி | 2.4 |
| 05 | மட்டக்குளி மத்திய வீதி | 1.0 |
| 06 | கொட்டாவை - தலகலை வீதி | 14.4 |
| 07 | கோட்டே - போப்பே வீதி | 11.3 |
| 08 | மொரட்டுவை -பிலியந்தலை வீதி | 2.62 |
| 09 | நாவின்னை - பொரலஸ்கமுவ வீதி | 2.41 |
| 10 | பிலியந்தலை - மகரகமை வீதி | 5.38 |
| 11 | ஒறுகொடவத்தை - அம்பத்தலை வீதி | 7.7 |
| 12 | வல்கமை - தியகமை வீதி | 7.06 |
| 13 | பெலவத்தை அணுகுகை வீதி | 0.83 |

வீதியின் தன்மைகள் காரணமாக 9ஆம் இலக்கச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தாமல் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. 7ஆம் இலக்கச் செயற்பாட்டின் புனரமைப்பு வேலைகள் 31/12/2018 ஆம் திகதியில் 46% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் இது

2017ஆம் ஆண்டின் இறுதியில் 14%ஆக அறிக்கையிடப்பட்டுள்ளது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இறுதியில் 6 ஆம் இலக்கச் செயற்பாடு முறையே 12% மற்றும் 26% முன்னேற்றங்களை அடைந்துள்ளன.

2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒறுகொடவத்த – அம்பத்தலே வீதி கட்டம்I இன் பௌதீக முன்னேற்றம் 2018 நான்காம் காலாண்டின் இறுதியில் 23% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. புனரமைக்கப்பட்ட ஒவ்வொரு வீதிகளினதும் அடையப்பட்ட இலக்கை பின்வருமாறு காட்ட முடியும் (உரு4.13.1). திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க வருட இறுதியில் 06 ஆம் இலக்கச் செயற்பாட்டின் இலக்கு 27% அடையப்பட்டுள்ளதுடன் 07 ஆம் இலக்கச் செயற்பாடு 58% உம் கட்டம் II இன்11ஆம் இலக்கச் செயற்பாடு 51% இனையும் அடைந்துள்ளது.




**உரு 4.11.1 – திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 06, 07 ஆம் இலக்க மற்றும் கட்டம் II இன் 11 ஆம் இலக்கச் செயற்பாடுகளின் பௌதீக இலக்கு அடைவு**

இக்கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் 97% உம் 2016 ஆம் ஆண்டில் 90% நிதி முன்னேற்றத்தையும் அடைந்திருந்தது. அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு இ,ரூ. 1600 மில்லியனாக காணப்பட்ட போதிலும், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இ.ரூ.2067.3 மில்லியனாகத் திருத்தப்பட்டது. எனவே, இக்கருத்திட்டம் செயற்பாட்டுத் திட்டத்திலுள்ள

இலக்கினை விடவும் கூடுதலான இலக்கினை அடைந்துள்ளது. அத்துடன் திருத்தப்பட்ட ஒதுக்கீட்டிற்கிணங்க, இக்கருத்திட்டம் 97% நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-32** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1,285.0 | 1317.0 | 1253.1 |
| | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 500.0 | 750.0 | 750.0 |
| | **மொத்தம்** | **1,785.0** | **2067.3** | **2003.1** |

கோட்டே – போப்பே வீதி (16+740 லிருந்து 28+004 கி.மீ வரையிலான வீதிப் பிரிவு) மேம்படுத்தல் கீழே காட்டப்பட்டுள்ளது.



Ch 11+090 (LHS) இல் அடித்தள நிர்மாணம்



Ch 2+130 (RHS) கற்கள் நிரப்புதல்

## 4.12 முன்னுரிமை வீதிகள் கருத்திட்ட விரிவாக்கம் (PRP III)- கட்டம் 1

முன்னுரிமை வீதி கருத்திட்டத்தின் இக்கட்டத்திற்காக சீன அபிவிருத்தி வங்கி (CDB) மேலும் 300 ஐக்கிய அமெரிக்க டொலர்களை வழங்கியது. PRP III கருத்திட்டத்தின் கட்டம் I, பன்னிரண்டு ஒப்பந்தப் பொதிகளாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இக்கட்டத்தின் மொத்த நீளம் 248.96 கி.மீற்றர்களாகும். இக்கருத்திட்டமானது இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குப் பாரியளவில் முக்கியத்துவம் வழங்கும் விதத்தில் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பதினொறு வீதிப் பகுதிகளும் மூன்று பாலப் பொதிகளும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் ஐந்து வீதிப் பொதிகள் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. இதில் நான்கு கருத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் ஒரு பொதி 78% பௌதீக முன்னேறத்தினை அடைந்துள்ளது. 2018 டிசம்பர் இறுதியில் ஒப்பந்தப் பொதி 13 தவிர சகல அசல் ஒப்பந்தப் பொதிகளும் நிறைவடைந்திருந்தன. எனவே வடிவமைக்கப்பட்ட அசல் வீதிப் பொதிகளின் 99% நிறைவடைந்துள்ளதுடன் அசல் ஒப்பந்தப் பொதிகளின் சேமிப்புகளைப் பயன்படுத்தி கீழ்வரும் வீதிப் பொதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன (அட்டவணை 4.12.1). இதில் 3 ஆம் இலக்க விடயத்தை 2018 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஒப்பந்தப் பொதி 8 இன் சேமிப்புகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வீதி மேம்படுத்தல்கள் 16.6 கி.மீ நீள வீதியை நிறைவு செய்ய முடிந்துள்ளது.

**அட்டவணை 4.12.1- PRP3 – கட்டம் I இன் அசல் ஒப்பந்தப் பொதிகளின் சேமிப்புகளைப் பயன்படுத்தி புனரமைக்கப்பட்ட வீதிகள்**

| வீதியின் பெயர்/பாலத்தின் பெயர் | வீதியின் நீளம் (கி.மீ) / பாலத்தின் வீச்செல்லை (மீ) | மாவட்டம் / இடவமைவு | பௌதீக முன்னேற்றம் 31/12/2018 ஆம் திகதியில் |
|---|---|---|---|
| PRP 3 –Ph1/C8 VO12 சேமிப்புகளிலிருந்து பிங்கிரிய தேர்தல் தொகுதியில் 04 வீதிப்பிரிவுகள்<br>• ஹம்மன்னபஹூவ – பரம்பொல வீதி<br>• கஹதெனிகம – கொஸ்ஹேன வீதி<br>• பலுகமுவ – தல்கஹபொத வீதி<br>• கோயில்வீதி– தெமத்தவாவவீதி | 16.60 கி.மீ | குருநாகல் | 100% |
| C4 ,VO-17 இன் சேமிப்புகள் பலகொல்ல ஜூம்மா பள்ளிவாசல் சுற்று வட்ட வீதி | 4.6 கி.மீ | | 85%% |
| C10, VO - 8 இன் சேமிப்புகள் மினிகமுவ – சியுறுபிட்டிய வீதி | 5.5 கி.மீ | | 80%% |
| C 7 , VO - 09 இன் சேமிப்புகள் கடலதெனிய – பரணபட்டிய வீதி | 3.5 கி.மீ | கண்டி | 23% |

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-39** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 4642.0 | 3465.0 | 3420.0 |
| | **மொத்தம்** | **4642.0** | **3465.0** | **3420.0** |

2017 ஆம் ஆண்டில் நிதி முன்னேற்றம் 96% ஆகக்காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 99% ஆகப் பதியப்பட்டுள்ளது. திட்டமிட்டவாறு அதிக வேலைகள்

பூர்த்தியடைந்துள்ளதுடன் அசல் வரவு செலவுத்திட்ட ஏற்பாட்டில் சுமார் இ.ரூ.1.2 மில்லியன் இவ்வருடத்தில் மற்றைய கருத்திட்டத்திற்கு மாற்றப்பட்டது. ஒப்பந்தப்பொதி 8 இன் சேமிப்புகளைப் பயன்படுத்தி பிங்கிரிய தேர்தல் தொகுதியில் பூர்த்திசெய்யப்பட்ட வீதி வேலைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.



**ஹமன்னபஹுஎிவ – பரம்பொலவீதி**



**புளுகமுவ – பிபிலதெனிய – தல்கஹபொத்தவீதி**

2018 ஆம் ஆண்டின் இறுதியில் ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும் அடையப்பட்ட பௌதீக முன்னேற்றம் ***பின்னிணைப்பு -10*** இல்காட்டப்பட்டுள்ளது.

## 4.13 தென்பிராந்திய வீதி இணைப்புக்கருத்திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி)

இக்கருத்திட்டத்தின் கீழ் கடுகதிப்பாதை வலையமைப்பைத் தொடர்புபடுத்தும் தேசிய நெடுஞ்சாலைகளைப் புனரமைத்து மேம்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 70 ஐக்கிய அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இக்கருத்திட்டத்தின் பிரதான விளைவு தென்பிராந்தியத்திலுள்ள கடுகதிப்பாதை வலையமைப்பை தொடர்புபடுத்தும் பிரதான தேசிய நெடுஞ்சாலைகளின் 31.2 கி.மீ இன் கொள்ளளவை மேம்படுத்தல் மற்றும் கடுகதிப்பாதை இணைப்பு மேம்பாட்டைத் திட்டமிடுவதில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆற்றலை மேம்படுத்துவதுடன் அமுலாக்கல் தயார்நிலையையும் உறுதிப்படுத்துவதாகும்

மேலும், தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் ஆக்கக்கூறானது தென்பிராந்திய கடுகதிப்பாதையின் மூன்று இடைமாறல்களுக்கு தொடர்பினை வழங்கும் ஐந்து (5) முன்னுரிமை தேசிய நெடுஞ்சாலைகளின் ஆறு (6) பிரிவுகளை மேம்படுத்தும் பொருட்டு

வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போதைய வீதி நிலைமை மற்றும் கொள்ளளவு, பிரயாண தேவைகள் மற்றும் மேம்படுத்துவதற்கான தயார்நிலை ஆகியவற்றிற்கிணங்க இந்த முன்னுரிமை நெடுஞ்சாலைகள் தெரிவுசெய்யப்பட்டன.

ரத்மலானை – மிரிஹான மற்றும் மொறட்டுவ – பிலியந்தலை வீதி மேம்படுத்தல் மற்றும் புனரமைத்தல் (பொதிI) 2015 ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. கெஸ்பாவவிலிருந்து பொக்குணுவிற்ற, கிருலப்பனை – கொடகம வீதிப் பிரிவு (பொதி II) மற்றும் தென்பிராந்திய கடுகதிப்பாதையிலிருந்து மதுறுகொட வரையிலான வீதிப் பிரிவு (பொதி III) 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2018 டிசம்பர் இறுதியில் பொதி II மற்றும் பொதி III இன் ஒட்டுமொத்த முன்னேற்றம் முறையே 80% மற்றும் 100% ஆகும். அம்பத்தலேயிலிருந்து CINEC சந்தி வரையிலான பொதி IV 2017 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் மொத்த முன்னேற்றம் 2018 டிசம்பர் இறுதியில் 66% ஆகும்.

**அட்டவணை 4.13.1 தென்பிராந்திய வீதி இணைப்புக் கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்ட வீதிப் பொதிகள்**

| ஒப்பந்தப் பொதி | வீதியின் பெயர் | நீளம் (கி.மீ) | பௌதீக முன்னேற்றம் 31/12/2018 |
|---|---|---|---|
| CP01 | B389 இரத்மலானை – மிரிஹான வீதி5+700கி.மீஇருந்து7+840கி.மீ வரை | 2.14 | 100% |
| | B295 மொறட்டுவை – பிலியந்தளை வீதி2+620 கி.மீஇருந்து5+120கி.மீ வரை | 2.55 | |
| CP02 | B084 கெஸ்பேவை – பொக்குனுவிற்ற வீதி13+800 கி.மீஇருந்து 28+180கி.மீ வரை | 14.40 | 80% |
| | A004 கிருலப்பன – கொடகம வீதி0+130 கி.மீஇருந்து 1+000, மற்றும்17+260 கி.மீஇருந்து 18+200கி.மீ வரை | 1.79 | |
| CP03 | B157 மத்துகமை – தென்பிராந்திய கடுகதிப்பாதை 42+372 கி.மீஇருந்து 32+000கி.மீ வரை | 10.37 | 100% |
| CP04 | CINEC-அம்பத்தல சந்தி வீதி | 1.88 | 66%% |

2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க, 2017 ஆம் ஆண்டில் CP01 பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை விட 35% முன்னேற்றம்

காணப்படுகின்றது. CP02 ஆனது செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 25% முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் இது இலக்கினை விடவும் குறைவானதுடன் 63% சாதனையை அடைந்துள்ளது. CP04 ஒப்பந்தம் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் CP02 ஆனது 100% அதிகமான இலக்கினை அடைந்துள்ளதுடன் CP03 ஆனது 100% பௌதீக இலக்கினை அடைந்துள்ளது. CP04 ஆனது 95% இலக்கினைஅடைந்துள்ள போதிலும், 70% இலக்கு அடைவினை பிரதிபலிக்கின்ற தீர்வு முடிவு அடைவு 66% ஆகவே காணப்பட்டது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-43** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1,369.05 | 2,429.05 | 2,073.37 |
| | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 400.0 | 400.0 | 400.0 |
| | **மொத்தம்** | **1,769.05** | **2829.05** | **2,473.37** |

2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிதி முன்னேற்றம் முறையே 87% மற்றும் 81% ஆகக் காணப்பட்டது. கருத்திட்டத்தின் அசல் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 ஆம் ஆண்டில் இ.ரூ.2829 மில்லியன் வரையில் அதிகரிக்கப்பட்டது. கருத்திட்ட முன்னேற்றங்களுடன் நிதி தேவைப்பாடுகள் வெற்றிகரமாக திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

42+372 லிருந்து 32+000 கி.மீ வரையிலான B157 மத்துகம – தென்பிராந்திய கடுகதிப்பாதையில் பூர்த்தி செய்யப்பட்ட வீதிப் பிரிவுகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.



கெஸ்பாவ – பொக்குணுவிற்றவீதி



தென்பிராந்தியகடுகதிப்பாதை – மதுறுகொடவீதி

## 4.14 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் – கட்டம் I

ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமானது கிராமிய சமுதாயங்களுக்கும் சமூக பொருளாதார நிலையங்களுக்கும் இடையிலான அணுகுகை வசதியை மேம்படுத்தும் குறிக்கோளுடன் தெரிவுசெய்யப்பட்ட மாகாணங்களிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட கிராமிய மற்றும் தேசிய வீதிகளைப் புனரமைத்துப் பராமரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இதன் நீண்ட காலத் தாக்கமாக இணைப்பு மேம்படுவதுடன் இதன் விளைவாகத் தெரிவு செய்யப்பட்ட வீதிகளில் போக்குவரத்து வினைத்திறன் அதிகரிக்கும்.

இதற்கிணங்க, இக்கருத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் (அதாவது மாகாண சபைகளுக்கும் பிரதேச சபைகளுக்கும்) சொந்தமான 3131 கி.மீ நீளமான கிராமிய வீதிகளும் சுமார் 265 கி.மீ நீளமான, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உள்ள தேசிய வீதிகளும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டல்களுக்கும் பாதுகாப்புக்கு கொள்கைகளுக்கும் இணங்கும் விதத்தில் பெறுகை வேலைகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் முறையே ஐந்து மற்றும் ஏழு வருட காலப்பகுதிகளில் வடிவமைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டு, பராமரிக்கப்படவுள்ளன.

இக்கருத்திட்டத்தின் கீழ் மாகாண வீதிகளினதும் தேசிய வீதிகளினதும் மேம்பாடு மற்றும் புனரமைப்புக்கு 800 மில்லியன் ஐ.அ.டொலர்களை நிதி உதவியாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டுள்ளதுடன் இலங்கை அரசாங்கம் 106 மில்லியன் ஐ.அ.டொலர்களை வழங்கும். இக்கருத்திட்டம் 2015 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2024 மார்ச் மாதத்தில் பூர்த்தியடையும். ஆனால், கிராமிய வீதிகளுக்கான நிர்மாணக் காலப்

பகுதி 2019 ஆம் ஆண்டில் முடிவடைவதுடன் அடுத்துவரும் 3 வருடங்களும் செயலாற்றுகை அடிப்படையிலான பராமரிப்புக் (PBM) காலமாக அமையும். தேசிய வீதிகளுக்கான வீதி முகாமை ஒப்பந்தம் (RMC) 2024 ஆம் ஆண்டு வரை தொடரும்.

***அட்டவணை* 4.14.1 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்ட கிராமிய வீதிப் பொதிகள் – 2018**

| மாகாணம் | மாவட்டம் | வீதிகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) |
|---|---|---|---|
| தென் மாகாணம் | காலி | 66 | 197 |
| | மாத்தறை | 67 | 218 |
| | அம்பாந்தோட்டை | 51 | 167 |
| சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 38 | 255 |
| | கேகாலை | 63 | 217 |
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | 60 | 330 |
| | பொலனறுவை | 55 | 170 |
| மத்திய மாகாணம் | கண்டி | 50 | 221 |
| | மாத்தளை | 51 | 194 |
| | நுவரெலியா | 43 | 180 |
| வட மேல்மாகாணம் | புத்தளம் | 38 | 220 |
| | குருநாகல் | 76 | 485 |
| மேல் மாகாணம் | களுத்துறை | 83 | 276 |
| **மொத்தம்** | | **741** | **3,131** |

2018 டிசம்பர் இறுதியில் கருத்திட்டத்தின் மொத்த முன்னேற்றம் 82% ஆகக் காணப்படுகின்றது. மாகாண ரீதியாக ஒவ்வொரு வீதிப் பொதிகளும் அடைந்த முன்னேற்றத்தை பின்வருமாறு காட்ட முடியும்.

**அட்டவணை 4.14.2 மாகாண ரீதியாக ஒவ்வொரு வீதிப் பொதிகளும் அடைந்த முன்னேற்றம்**

| மாகாணம் | பௌதீக முன்னேற்றம் 31.12.2017 இல் | பௌதீக முன்னேற்றம் 31.12.2018 இல் |
|---|---|---|
| தென் மாகாணம் | 90% | 96% |
| மத்திய மாகாணம் | 84% | 91% |
| சப்ரகமுவ மாகாணம் | 56% | 69% |
| வட மத்திய மாகாணம் | 47% | 97% |
| வட மேல்மாகாணம் | 32% | 59% |
| களுத்துறை மாவட்டம் (மேல்மாகாணம்) | 34% | 46% |

2015 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமையால் பௌதீக முன்னேற்றம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே 3% மற்றும் 27% ஆகக் காணப்படுகின்றன. எனவே, 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான திரட்டிய முன்னேற்றம் 62% ஆகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியில் திரட்டிய பௌதீக முன்னேற்றம் 82% ஆகக் காணப்பட்டதுடன் இவ்வாண்டில் 20% முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க, 2017 ஆம் ஆண்டில் 47% ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றத்தை அடைவதற்கு PMU எதிர்பார்த்தது. செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 2017 ஆம் ஆண்டிற்கான உண்மையான பௌதீக முன்னேற்றம் 32% ஆகவும் 68% இலக்கும் அடையப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தின் மொத்த பௌதீக முன்னேற்றம் 28 ஆகக் காணப்பட்டதுடன் திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு செயற்பாட்டுத்திட்டத்திற்கிணங்க அடையப்பட்ட விளைவுகள் சுமார் 3 காலாண்டுகளாக (71%) காணப்பட்டன.

**அட்டவணை 4.14.3 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்கான உத்தேச தேசிய வீதிப் பொதிகள்**

| இல. | வீதியின் பெயர் மற்றும் இல. | நீளம் (கி.மீ) | உள்ளடங்கும் மாவட்டம் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 01 | மருதங்கடவலை - ஹபரணை வீதி (A011) | 25 | பொலன்னறுவை<br>அநுராதபுரம் | ஒப்பந்தமளிப்பதற்கு அமைச்சரவை அனுமதியை எதிர்நோக்கியிருத்தல் |
| 02 | கொழும்பு -கண்டிவீதி (அம்பேபுஸ்ஸ-கடுகண்ணாவ பிரிவு) | 40 | கேகாலை, கண்டி | ஆரம்ப அளவை வேலைகள் மற்றும் வடிவமைப்பு வேலைகள் நடைபெற்றுவருகின்றன |
| 03 | பெல்மடுல்ல-அம்பிலிப்பிற்றிய-பதனங்கல வீதி (A018)) | 66 | இரத்தினபுரி, அம்பாந்தோட்டை | வடிவமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளன. 2019 பெப்ரவரி இறுதியில் விலைக்கேள்விகளை கோருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது |
| 04 | கராபிற்றிய – நாகொட வீதிB248, B454, உடுகம பார் சந்தி – தவலம வீதி B129, B429,B156 | 51.7 | காலி | தொழில்நுட்ப விலைக்கேள்வி மதிப்பீட்டிற்கும் நிதிசார் விலைக்கேள்வியைத் திறப்பதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணக்கப்பாட்டை எதிர்நோக்கியிருத்தல் |
| 05 | தலாவ – கெக்கிராவ – கனேவல்பொல – கலன்பிந்துனுவெவ-டச்சிஹல்மில்லேவ வீதி | 90 | அநுராதபுரம் | வடிவமைப்பு மற்றும் ஆரம்ப வேலைகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. |
| | **மொத்தம்** | **272.7** | | |



குபல்கொட சீலரத்ன வீதி



பஹலமரகஹவேவ கடுபத்துவெவ மாவத்தை

## 4.15. இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் ( iRoad 2)

இக்கருத்திட்டம் இலங்கையின் கிராமிய பிரதேசங்களிலுள்ள வீதி வலையமைப்பின் அணுகுகையை மேம்படுத்துகின்றது. இதன் மூலம் கிராமியப் பிரதேசங்களிலுள்ள மக்களை தேசிய ரீதியில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான அவர்களின் ஈடுபாட்டினை அதிகரிக்க முடியும். இக்கருத்திட்டம் 3,404 கி.மீ கிராமிய வீதிகளை தரமுயர்த்தி பராமரித்தல்,வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள ஏறத்தாழ 343 கி.மீ தேசிய வீதிகளை தரமான நிலையில் பராமரித்தல் மற்றும் பாதுகாப்புகள், வீதிப் பாதுகாப்பு, பராமரிப்பு, ஆய்வு திறன் மற்றும் வீதி வடிவமைப்பு நிர்மாணத்துடன் வீதி முகவர்களின் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்தும்.

இதனை அமுல்படுத்தும் காலம் 2018 – 2017 வரையாகும். ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைகள் முதல் இரண்டு வருடங்களில் பூர்த்தியடையும். அதன்பின்னர் கிராமிய மற்றும் தேசிய வீதிகளுக்கான **கருத்திறன் அடிப்படையிலான பராமரிப்பு** காலம் 3 மற்றும் 5 வருடங்களாகும்.

***அட்டவணை இல. 4.15.1. – இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழுள்ள உத்தேச வீதிகள்***

| மாகாணம் | மாவட்டம் | தேசிய வீதி (கி.மீ) | தேசிய வீதிகளின் எண்ணிக்கை | கிராமிய வீதிகள் (கி.மீ) | கிராமிய வீதிகளின் எண்ணிக்கை | வீதிகளின் எண்ணிக்கை (மொத்தம்) | மொத்த நீளம் (கி.மீ) |
|---|---|---|---|---|---|---|---|
| வடக்கு | யாழ்ப்பாணம் | 114.89 | 1 | 260.24 | 127 | 128 | 1057.77 |
| | கிளிநொச்சி | | - | 181.78 | 47 | 47 | |
| | மன்னார் | | 1 | 137.74 | 67 | 68 | |
| | வவுனியா | | 2 | 221.78 | 62 | 64 | |
| | முல்லைத்தீவு | | - | 141.34 | 36 | 36 | |
| கிழக்கு | மட்டக்களப்பு | 155.76 | 1 | 184.99 | 123 | 124 | 845.83 |
| | அம்பாறை | | 14 | 319.45 | 144 | 158 | |
| | திருகோணமலை | | 1 | 185.63 | 123 | 124 | |
| ஊவா | பதுளை | 72.9 | 6 | 494.53 | 147 | 153 | 1044.51 |
| | மொனறாகலை | | 1 | 477.08 | 95 | 96 | |
| மேல் | கொழும்பு | - | - | 247.21 | 149 | 149 | 799.98 |
| | கம்பஹா | | | 307.37 | 183 | 183 | |
| | களுத்துறை | | | 245.4 | 102 | 102 | |
| **மொத்தம்** | | **343.55** | **27** | **3,404.54** | **1405** | **1432** | **3,748.09** |

இக்கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் கடன் உடன்படிக்கை 2017 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டு ஊவா மாணத்திற்கான சிவில் வேலைகள் ஒப்பந்தங்களுக்கான விலைக்கேள்விகள் 2017 ஜூனில் கோரப்பட்டன.

2018 டிசம்பர் இறுதியில் கருத்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறு;

- ஊவா மாகாணத்திற்கான கிராமிய வீதிகள் புனரமைத்தலின் சிவில் வேலைகள் வழங்கப்பட்டு 6.8% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது.
- கிழக்கு, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களுக்கான சிவில் வேலைகளின் பெறுகை வேலைகள் நடைபெற்று வருகின்றன.

நிதி இலக்கிற்கான அடைவு 2016 ஆம் ஆண்டில் 99 ஆகக் காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் 98% ஆகக் காணப்பட்டது. மேற்கூறிய இரு தொடர்ச்சியான ஆண்டுகளிலும் காணப்பட்ட இலக்கு அடைவினை விடவும் 2018 ஆம் ஆண்டில் குறைவாகவே காணப்பட்டுள்ளது. இது 84% என பதிவாகியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு பல தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் திருத்தம்

செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க எதிர்பார்க்கப்பட்டவாறு நிதி இலக்குகளை அடைய முடியவில்லை. கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை விடவும் மொத்தச் செலவு அதிகரித்துள்ள போதிலும் அசல் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க அடையப்பட்ட நிதி இலக்கு 100% விடவும் அதிகமாகும். மேலும் இரண்டு கட்டங்களிலும் கருத்திட்டத்தின் கட்டம் Iஆனது கருத்திட்டம் கட்டம் II இனை விடவும் அதிக செலவின பகுதியுடன் ஒத்திருக்கின்றது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-44** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 13,484.0 | 16,559.0 | 13,933.1 |
| | **மொத்தம்** | 13,484.0 | 16,559.0 | 13,933.1 |

## 4.16 அரசாங்கத்தின் உத்தரவாதத்தின் கீழ் உள்நாட்டு வங்கிகளால் நிதியிடப்பட்ட வீதிப் புனரமைப்புக் கருத்திட்டம்

வீதி புனரமைப்பு/மேம்படுத்தலுக்கான ஒப்பந்தங்களை முகாமை செய்வதற்காக உள்நாட்டு வர்த்தக வங்கிகளின் நிதியிடப்பட்டுஇக்கருத்திட்டம் உருவாக்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆலோசனை வழங்குவதுடன் சில வீதிகள் மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகத்தினால் (CECB)நிர்மாணிக்கப்பட்டன. அனைத்து ஒப்பந்தங்களும் உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்கருத்திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் மொத்தமாக 64 வீதிகள் புனரமைக்கப்புக்காக/தர மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ளன.

64 ஒப்பந்தங்களில் 59 ஒப்பந்தங்கள் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்துள்ளன. இவற்றில் 8 ஒப்பந்தப் பொதிகள் 2017 ஆம் ஆண்டில்பூர்த்தி செய்யப்பட்டன. மற்றை இரண்டு

கருத்திட்டங்கள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளன. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இதன் பௌதீக முன்னேற்றம் 98% ஆகும். இந்த இரண்டு கருத்திட்டங்களில் 5 ஒப்பந்தப் பொதிகளன் வேலைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்று வருகின்றன. 64 ஒப்பந்தப் பொதிகளில் 62 ஒப்பந்தப் பொதிகள் 2018 டிசம்பர் இறுதியில் நிறைவடைந்துள்ளன. அந்த 64ஒப்பந்தப் பொதிகளில் 02 பொதிகள் மாத்திரம் 2018ஆம் ஆண்டு இறுதியில் முன்னேற்றத்தை அறிக்கையிட்டுள்ளதுடன் ஒவ்வொன்றும் அடைந்த பௌதீக முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

***அட்டவணை 4.16.1 நடைபெற்றுக்கொண்டிருக்கும் வீதிப் பிரிவுகளின் முன்னேற்றம்***

| விடய இல. | வீதியின் பெயர் | வீதியின் நீளம் (கி.மீ) | மாவட்டம்/இடவமைவு | பௌதீக முள்னேற்றம் 31/12/2018 இல் (%) |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு – கண்டி வீதி (கடவத்தை – நிட்டம்புவ) | 23.00 | கம்பஹா | 81% |
| 02 | லனுகம்வெகர – கதிர்காமம் வீதி | 13.82 | மொனறாகலை | 98% |

2018 ஆம் ஆண்டின் இறுதியில் இக்கருத்திட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்டுள்ள வீதிகளின் பட்டியல் ***பின்னிணைப்பு - 11*** இல் தரப்பட்டுள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-51** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 24,000.0 | 35,200.0 | 35,194.0 |
| | **மொத்தம்** | **24,000.0** | **35,200.0** | **35,194.0** |

2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் முறையே 99% மற்றும் 100% ஆகும்.



லணுகம்வெகர – கதிர்காமம் வீதியின்12+766 கி.மீ பூர்த்தி செய்யப்பட்டுள்ள பாலம்



லணுகம்வெகர – கதிர்காமம் வீதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீதி வேலை

## 4.17 போக்குவரத்து இணைப்பு மற்றும் ஆதன முகாமைக் கருத்திட்டம்

15.08.2018 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் கருத்திட்டம் மீள்கட்டமைக்கப்பட்டது. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் சிவில் வேலைகள் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சொத்து முகாமைத்துவ ஆக்கக்கூறு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. கருத்திட்டத்தின் புதிய நோக்கெல்லைக்கிணங்க திருத்தப்பட்ட பின்வரும் நடவடிக்கைகள் இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

கருத்திட்டத்தின் திருத்தம் செய்யப்ட்ட ஆக்கக்கூறுகள்

**ஆக்கக்கூறு 1:**

சொத்து முகாமைத்துவத்திற்கான நிறுவன வலிமை மற்றும் திறன் அபிவிருத்தி

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் சொத்து முகாமைத்துவப் பிரிவை தாபித்தல்
- Network referencing ஐ பூர்த்தி செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போ திருக்கின்ற இணைய அடிப்படையிலான, பல-பாவனையாளர் சொத்து, வீதிச் சொத்து முகாமைத்துவ முறைமையை (RAMS) செயற்படுத்துதல், சகல RAMs modules உம் வரி

சைப்படுத்தி பயன்படுத்தல், வெளியாட்களின் தகவல் சேகரிப்பு மற்றும் முறைமையை முகாமைப்படுத்துவதற்கு ஊழியர்களை பகுத்தறிதல்

- வீதிப் பிரிவு கொள்கையும் உபாயத்தையும் இறுதிப்படுத்தல்
- வீதித் துறை உபாயத்தையும் கொள்கையும் அபிவிருத்தி செய்தல்
- சரியான தீர்மானம் எடுத்தலின் பொருட்டு தகவல்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கான முகாமைத்துவ தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல்
- வீதிப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு நியமங்களையும் குறிப்பீடுகளையும் அபிவிருத்தி செய்தல்

ஆக்கக்கூறு 2:

மீள்கட்டமைக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தின் கீழ் வீதிச் சொத்து முகாமைத்துவ கொள்கைகள் நடைமுறைப்படுத்தலை வழிநடத்துதல். பேலியகொடை புத்தளம் வீதியின் (A003 ) – 58 கி.மீ விளைவு அடிப்படையிலான செயல்முன்னேற்ற வீதி ஒப்பந்த முறை (Output Based Performance Road Contact Format) இனைப் பயன்படுத்தி ஜா-எலயிலிருந்து சிலாபம் வரையிலான வீதிப் பிரிவில் வீதிச் சொத்து முகாமைத்துவ கொள்கைகளைப் பயன்படுத்தி மேம்படுத்தல், புனரமைத்தல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்திற்காக DBM ஒப்பந்தத்திற்கு இக்கருத்திட்டம் நிதியளிக்காது என முன்மொழியப்பட்டுள்ளது.

மீள்கட்டமைக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு செயற்பாட்டினாலும் அடையப்பெற்ற முன்னேற்றம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் வீதிச் சொத்து முகாமைத்துவ முறைமையை தாபித்தல்

   - 26.10.2018 ஆம் திகதி நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சினூடாக அனுப்பப்பட்ட பணிநிலைப் பிரிவு முன்மொழிவிற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது.

2. எண்ணக்கரு வடிவமைப்புகளையும் RAP யும் தயாரித்தல்

- எண்ணக்கரு வடிவமைப்பை தயாரித்தல் 2017 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் RAP ஐ தயாரித்தல் 2017 ஆம் ஆண்டில் 90% பூர்த்தியடைந்துள்ளதுடன் எஞ்சியவை 2018 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்துள்ளன.

3. வீதிப் பாவனையாளர் திருப்தியை அளவிடல்

- இந்நடவடிக்கை 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 95% மற்றும் 100% பூர்த்தியடைந்துள்ளன.

4. A003 இல் ஆபத்துள்ள இருண்ட பகுதிகளை மேம்படுத்தல் TL ஆய்விற்கு காணி சுவீகரித்தல் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்துள்ளது.

செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பினும் மீள்கட்டமைக்கப்பட்ட கருத்திட்டம் பின்வரும் இரண்டு நடவடிக்கைகளையும் கொண்டிராமையினால் இந்நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படவில்லை.

i. விளைவு மற்றும் செயல்முன்னேற்ற அடிப்படையிலான வீதிப் பராமரிப்பு ஒப்பந்தங்கள்
ii. ஆபத்துள்ள இருண்ட பகுதிகள் மற்றும் வழிகாட்டு வீதிகளில் காணி சுவீகரித்தல் செயன்முறை

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-48** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 550.0 | 92.0 | 31.2 |
| | **மொத்தம்** | **550.0** | **92.0** | **31.2** |

2017 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 80% ஆகக் காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் 34% ஆகக் காணப்பட்டது. இக்கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டில்

முன்னெடுக்கப்பட்டிருந்த போதுலும் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டின் ஏற்பாடு 2016 ஒகஸ்ட்டிலேயே தரப்பட்டுள்ளது. செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 2017 ஆம் ஆண்டில் திட்டமிட்டிருந்த செயற்பாடுகள் நிறைவடைந்திருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் அவை மாற்றப்பட்டன. 2018 ஆம் அண்டில் கருத்திட்டம் மீள்கட்டமைக்கப்பட்டிருந்தமையால் சில நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படவில்லை. எனவே, 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க அடையப்பட்ட இலக்கு எதிர்பார்த்ததை விடவும் குறைவாகும். அதேபோல் அசல் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடும் குறைவடைந்திருந்ததுடன் FR 66 இன் கீழ் அது மற்றைய கருத்திட்டங்களுக்கு மாற்றப்பட்டது.

## 4.18 முன்னுரிமை வீதி மேம்படுத்தல் மற்றும் புனரமைத்தல் கருத்திட்டங்கள்-3 கட்டம் II (PRP 3- கட்டம் II)

பிரதான நகரங்களுக்கான இணைப்பு வீதிகளை மேம்படுத்துவதற்காக சீன அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியது. இக்கருத்திட்டத்திற்கான கருத்திட்டக் காலப்பகுதி 18 மாதங்களாகும். இதற்கான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு 16,000 மில்லியன் ரூபாவாகும். கண்டி (13 வீதிப் பிரிவுகள்) மற்றும் கேகாலை (7 வீதிப் பிரிவுகள்) மாவட்டங்களில் 131.85 கி.மீ மொத்த நீளம்கொண்ட 20 வீதிப் பிரிவுகள்இக்கருத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தி புனரமைப்பதற்காக தெரிவுசெய்யப்பட்டன.

ஒரு ஒப்பந்தப் பொதியை தவிர மற்றைய எல்லா 20 ஒப்பந்தப் பொதிகளும் 2016 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.ஒவ்வொரு வீதிப் பிரிவுகளினதும் முன்னேற்றத்திற்கிணங்க, 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இக்கருத்திட்டம் திருப்திகரமான முன்னேற்ற மட்டத்தை அடைந்துள்ளது. CP 42 இனைத் தவிர எல்லா வீதிப் பிரிவுகளும் 50% இனை விட அதிகமான மொத்த பௌதீக முன்னேற்றத்தினை 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அடைந்துள்ளன. இதில் 11 கருத்திட்டங்கள் பௌதீக வேலைகளின் 80% விட அதிகமானமான முன்னேற்றத்தை பூர்த்தி செய்துள்ளன.

2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க, 5 ஒப்பந்தப் பொதிகள் இலக்கினை விட கூடுதலான அடைவினை எட்டியுள்ளன. 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க மற்றைய 6, 5 மற்றும் 3 கருத்திட்டங்கள் முறையே 90%, 80% மற்றும் 70% முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் அனைத்து வீதிப்பொதிகளும் 100% இற்கும் அதிகமான பௌதீக இலக்கினை அடைந்துள்ளது. 31.12.2018 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப் பொதிகளின் பௌதீக முன்னேற்றம் ***பின்னிணைப்பு -12*** இல் தரப்பட்டுள்ளது.

இந்த 20 ஒப்பந்தப் பொதிகளை விடவும், ஒப்பந்தப் பொதிகள் 24 மற்றும் 28 இன் சேமிப்புகளிலிருந்து மேலும் 2 பொதிகள் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த புதிய பொதிகளில் முதலாவது பொதி 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலும் இரண்டாவது பொதி இரண்டாவது காலாண்டின் முதல் மாதத்திலும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

| வீதியின் பெயர் | நீளம் (கி.மீ) | மாவட்டம்/இடவமைவு | பௌதீக முன்னேற்றம் 31/12/2018 இல் |
|---|---|---|---|
| ஹீதெனிய –மெதவல வீதி (C24 Vo) | 3.3 | கண்டி | 57% |
| புஸ்ஸலாவ-உடலோத வீதி (C28 Vo) | 2.9 | கண்டி | 65% |

இக்கருத்திட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட வீதிப் பிரிவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.



**ஹீன்னாரந்தெனிய சந்தி – உடிவிட்ட எல்பிற்றிய வீதி மற்றும் எல்பிற்றிய ஆறு – வெலிகம சந்தி**



**எரமுதுலியத்த– கொலுகல – திஸ்பட வீதி**

2017 ஆம் ஆண்டில் 83% நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டில் 83% அடையப்பட்டுள்ளது. எனவே, 2018 ஆம் ஆண்டை விடவும் 2017 ஆம் ஆண்டின் தொகை 1% அதிகமாகக் காணப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டில், நிதி இலக்கு அடைவு பெரும்பாலும் ஒத்த தன்மையுடையதாகக் காணப்பட்டது. அசல் ஏற்பாட்டிற்கிணங்க கருத்திட்டத்தின் இலக்கு அடைவு 2018 ஆம் ஆண்டில் 100% அதிகமாகக் காணப்பட்டது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-46** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 2,120.0 | 4,470.0 | 3,654.2 |
| | மொத்தம் | **2,120.0** | 4,470.0 | 3,654.2 |

## 4.19 பேஸ் லைன் வீதி விரிவாக்கச் கருத்திட்டம் - கட்டம் III

பேஸ் லைன் வீதி விரிவாக்கம் கட்டம் III இன் அடிப்படைப் பிரேரணையின் படி கிருளப்பனைச் சந்தியிலிருந்து இரத்மலானையிலுள்ள மலிபன் சந்தி வரை விரிவாக்க வேண்டும். எனினும், அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் துட்டுகெமுனு வீதி வரை அது வரையறுக்கப்பட்டது. இதற்கிணங்க வீதியின் நீளம் 0.86 கி.மீ ஆகும். கிருலப்பனை சந்தியில் மேம்பாலமொன்றும் பலபொக்குண வீதியில் சுரங்கமொன்றினையும் உள்ளடக்கி 3 ஒழுங்கை இரட்டை நெடுஞ்சாலைகளுடன் முன்மொழியப்பட்டுள்ள இவ்வீதி நிர்மாணிக்கப்படும்.

மேன்முறையீட்டு நீதிமன்ற கட்டளையின் காரணமாக 07.12.2016 ஆம் திகதியிலிருந்து கட்டம் I இற்கான காணி சுவீகரிப்பு வேலைகளை இக்கருத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தியிருந்ததுடன் செலவு இன்றி அனைத்து வழக்குகளையும் தள்ளுபடி செய்யுமாறு 23.05.2018 ஆம் திகதியில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கிருலப்பனைச் சந்தியிலிருந்து

துட்டகெமுனு வீதிப் பிரிவிற்கான காணி சுவீகரிப்பு 50% முன்னேற்றத்துடன் நடைபெற்று வருகின்றது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-04-10 | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 150.0 | 105.0 | 10.8 |
| | மொத்தம் | **150.0** | **105.0** | **10.8** |

நிதி முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 62% முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் இது 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 1% முன்னேற்றத்தை அடைந்துள்ளது. வழக்குத் தீர்ப்பு ஆண்டின் நடுப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளமையால் காணி சுவீகரித்தல் வேலைஅண்மையிலேயே ஆரம்பிக்கப்பட்டது. இது மிகக் குறைவான நிதி முன்னேற்றத்திற்கு வழிவகிக்கின்றது.

## 4.20 மேல் மாகாண தேசிய நெடுஞ்சாலைக் கருத்திட்டம்

சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் (OFID) மேல் மாகாணத்திலுள்ள, குறிப்பாக கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட வீதிகளின் மேம்பாட்டுக்காக 17.00 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இதில் சுமார் 25.81 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகளைப் புனரமைத்து மேம்படுத்துவது உள்ளடக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் இரண்டு ஒப்பந்தப் பொதிகளின் கீழ் அகலமாக்கி மேம்படுத்துவதற்காக பின்வரும் நான்கு வீதிப் பகுதிகள் தெரிவுசெய்யப்பட்டன.

**அட்டவணை 4.20.1 - மேல் மாகாண தேசிய நெடுஞ்சாலைக் கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்ட வீதிப் பொதிகள்**

| இல | வீதிப் பகுதிகள் | நீளம் (கி.மீ) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | கடுவலை - அத்துறுகிரிய வீதி (0+000கி.மீ– 9+500 கி.மீ) | 9.50 | சிவில் வேலை – 11% |
| 02 | வல்கம - அத்துறுகிரிய வீதி (0+000 கி.மீ– 1+210 கி.மீ) | 1.21 | |
| 03 | வாத்துவை - மொரொந்துடுவை வீதி (1+000 கி.மீ– 5+300 கி.மீ) | 5.30 | சிவில் வேலை– 50% |
| 04 | பெல்லானை - மரகல்லை வீதி (0+000 கி.மீ– 9+800 கி.மீ) | 9.80 | |

01 மற்றும் 02 ஆம் இலக்க கருத்திட்டங்களின் சிவில் வேலைகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 31.12.2018 ஆம் திகதியில் 11% முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க இரு வீதிகளினதும் பௌதீக முன்னேற்றம் 44% ஆகும். 03 மற்றும் 04 ஆம் இலக்க கருத்திட்டங்களின் சிவில் வேலைகள் 05/10/2017 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த பௌதீக முன்னேற்றம் 2% ஆகும். இந்த இரண்டு பிரிவுகளும் 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விரு வீதிகளினதும் பௌதீக முன்னேற்றம் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 50% முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் இது 2018 ஆம் ஆண்டில் 48% ஆகும். எனவே 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 03 மற்றும் 04 ஆம் இலக்க வீதிகளின் இலக்கு அடைவு 87% ஆகும். 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க, எல்லா 4 வீதிப் பிரிவுகளினதும் சிவில் வேலைகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், காணி சுவீகரித்தல் செயன்முறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இது இயலாமல் போனது. விடயம் 1 மற்றும் 2 இன் காணி சுவீகரித்தல் செயன்முறை மூன்று காலாண்டுகளுக்கு மேலாகக் காணப்பட்டதுடன் விடயம் 3 மற்றும் 4 முறையே 26% மற்றும் 35 % ஆகும்.

இக்கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் 7% நிதி முன்னேற்றத்தை மட்டுமே அடைந்துள்ளது. எல்லா வீதிப் பிரிவுகளும் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், சுவீகரித்தல் செயன்முறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இது தாமதமானது. இது ஒட்டுமொத்த நிதி முன்னேற்றத்தையும் பாதிக்கச் செய்திருந்தது. 2018 ஆம் ஆண்டில், மொத்த நிதி முன்னேற்றம்

84% ஐ அடைந்திருந்துடன் அசல் ஏற்பாடு 50% அளவினால் திருத்தம் செய்யப்பட்டது. எனவே கருத்திட்டத்தினால் அடையப்பெற்ற நிதி இலக்கு 2017 ஆம் ஆண்டுடன் அதிகமானதாகும்.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-40** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 450.0 | 1082.7 | 882.49 |
| | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 200.0 | 140.0 | 140.0 |
| | **மொத்தம்** | **650.0** | **1222.7** | **1022.49** |

### 4.21 மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை அகலப்படுத்தலும் மேம்படுத்தலும்

இலங்கை அரசாங்கமானது மத்திய, ஊவா மாகாணங்களில் 64.31 கி.மீ நீளமான வீதிகளை அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் 13 பாலங்களை புனர்நிர்மாணித்தல் ஆகியவற்றுக்காக சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியிடமிருந்தும் (ஹூனான் கிளை) இலங்கையின் மக்கள் வங்கியிடமிருந்தும் கடனொன்றைப் பெற்றுள்ளது.

இக்கருத்திட்டம் 2 ஒப்பந்தப் பொதிகளாக அமுல்படுத்தப்படும். வீதிப் பொதி (C1) மற்றும் பாலப் பொதி (C2) இற்கான இரண்டு பொதிகளினது நிர்மாணக் காலம் முறையே 24 மாதங்கள் மற்றும் 18 மாதங்கள் ஆகும். சிவில் வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஒப்பந்தக்காரரின் தயார்படுத்தல் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் வடிவமைப்பு வேலைகள் (1%) நடைபெற்று வருகின்றன.

**அட்டவணை 4.21.1 – மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இக்கருத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்கள்**

| ஒப்பந்த இல. | வீதிப் பொதி | நீளம் (கி.மீ)/ பாலங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| C1 | கண்டி – கிரிமற்றிய வீதி | 7.64 |
| | அம்பிற்றிய – குருதெனிய (பிச்சமல்வத்த வீதி) | 2.25 |
| | நுவரெலியா – ராகலை – உடபுஸ்ஸவாவ வீதி | 27.00 |
| | வெலிமட – கிரிக்லீஸ் வீதி | 17.83 |
| | அவிஸ்ஸாவெல – ஹற்றன் – நுவரெலியா வீதி | 9.59 |
| C2 | தென்னகும்புர – ரிக்கிலகஸ்கட – ராகலை வீதியின் Reconstruction of Bridge Nos. 24/3 மற்றும் 42/1 ஆம் இலக்கப் பாலத்தை மீள்நிர்மாணித்தல் | 02 |
| | கண்டி – கிரிமெற்றிய வீதியில் 3/2 ஆம் இலக்கப் பாலத்தை மீள்நிர்மாணித்தல் | 01 |
| | நுவரெலியா – ராகலை – உடபுஸ்ஸலாவ வீதியில் 23/3, 27/2, 30/4, 31/5, 34/8, 37/1 மற்றும் 38/5 ஆம் இலக்கப் பாலத்தை மீள்நிர்மாணித்தல் | 07 |
| | வெலிமட – கிரிக்லீஸ் வீதியில் 1/1, 2/5, and 7/7 ஆம் இலக்கப் பாலத்தை மீள்நிர்மாணித்தல் | 03 |

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை அகலப்படுத்துதலுடனும் மேம்படுத்துதலுடனும் சம்பந்தப்பட்ட வீதிகளினதும் பாலங்களினதும் பட்டியல் ***பின்னிணைப்பு – 13*** இல் தரப்பட்டுள்ளது.

## 4.22 போக்குவரத்துக் கருத்திட்ட தயார்படுத்தல் வசதிக் கருத்திட்டம்

வீதி, புகையிரதம் மற்றும் துறைமுக உபபிரிவுகளில் முன்னுரிமை போக்குவரத்துக் கருத்திட்டங்களின் தொடக்க வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் இக்கருத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி வழங்குகின்றது. இதன் செயற்பாடுகள் பின்வருமாறு;

- சாத்தியக்கூற்று ஆய்வு, விரிவான வடிவமைப்பு மற்றும் பெறுகை ஆவணங்களைத் தயாரித்தல், மற்றும்

- கருத்திட்டத்தை அமுல்படுத்தும் ஆரம்ப கட்டத்தில் அமுல்படுத்துதல் உதவிகளை வழங்குதல்.

இக்கருத்திட்டத்தின் கீழ் 3 செயற்பாடுகள் பின்வருமாறு அமுல்படுத்தப்பட்டுள்ளன.

***அட்டவணை 4.22.1 31.12.2018 ஆம் திகதியில் உள்ளவாறான TPPF கருத்திட்டத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றம்***

| விடய இல. | கருத்திட்டத்தின் பெயர்/ வீஅ.அ.பிரிவு. | ஆரம்ப திகதி | முடிவடையும் திகதி | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1 | துறைமுக அணுகுகைக்கான நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலைக் கருத்திட்டத்தில் விரிவான வடிவமைப்பிற்கான ஆலோசனை சேவைகள் | 20-02-2017 | 19-02-2018 | 100% |
| 2 | பேலியகொட – ராஜகிரிய நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலைக்கு (ICS 01) ஆலோசனை தனியான)- )நிதி ஆலோசகர் | 16-ஒக்டோ-17 | 10-பெப்-19 | 80% |
| 3 | பேலியகொட – ராஜகிரிய நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலைக்கு (ICS 03) ஆலோசனை (தனியான) பரிவர்த்தனை ஆலோசகர் | 10- ஒக்டோ-17 | 10- பெப்-19 | 90% |

2017 ஆம் ஆண்டின் இறுதியில் விடய இல.01 72% நிறைவடைந்துள்ளதுடன் 28% 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க இந்நடவடிக்கையின் இலக்கு 100% அடையப்பட்டிருந்ததுடன் இது 2018 ஆம் ஆண்டில் நிறைவடைந்திருந்தது. விடய இல.02 மற்றும் 03 2017 ஆம் ஆண்டில் 50% நிறைவடைந்திருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க விடய இல.02 இற்காக அடையப்பெற்ற பௌதீக இலக்கு 60% ஆகவும் விடய இல.03 80% இலக்கினையும் அடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க ஒவ்வொரு விடயத்திற்கும் அடையப்பட்ட இலக்கு கீழே வரைபடமாக காட்டப்பட்டுள்ளது.




2018 ஆம் ஆண்டின் திருத்தம் செய்யப்பட்ட ஒதுக்கீட்டிற்கிணங்க கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 75% ஆகவும் 2017 ஆம் ஆண்டில் இது 53% ஆகவும் காணப்பட்டது. எனவே 2018 ஆம் அண்டின் நிதி முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டை விடவும் அதிகமானதாகும்.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-04-47 | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 45.0 | 279.0 | 208.0 |
| | **மொத்தம்** | **45.0** | **279.0** | **208.0** |

## 4.23 கடலோர வீதியை பாணந்துறை வரை நீடித்தல்

கொழும்பு – காலி வீதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு மாற்று வழியாக 1990 ஆம் ஆண்டுகளில் பிற்பகுதியில் கடலோர வீதி அடையாளங்காணப்பட்டது. கடலோர வீதியின் (பிரிவு 2) நிர்மாணம் 1998 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ரண்முத்து ஹாட்டலிலிருந்து தெஹிவளை நகரப் பக்கமாக (0+520 கி.மீ - 8+420 கி.மீ) பல்வேறு கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டது.

முன்மொழியப்பட்டுள்ள துறைமுக நகர அபிவிருத்திக்கான தொடர்பினையும் அணுகுகையும் மேம்படுத்தும் பொருட்டு தற்போது காணப்படுகின்ற கடலோர வீதியை காலி முகத்திடல் வரையில் நீடிப்பதற்கு முன்மொழியப்பட்டது. கொழும்பு – காலி வீதியின் போக்குவரத்து அளவு காரணமாக போக்குவரத்து நெரிசல் விரைவாக ஏற்படுவதுடன் தற்போது பரபரப்பான நேரங்களில் தெஹிவளைக்கு அப்பாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இந்த போக்குவரத்து நெரிசலுக்கு மிகப் பிரதான காரணம் மாற்று வழியொன்று காணப்படாமையேயாகும். இந்நிலைமையில் கடரோல வீதியை பாணந்துறை வரையில் நீடிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

2018 டிசம்பர் இறுதியில் உள்ளவாறு, தெஹிவளை – பாணந்துறை பிரிவிற்கான சாத்தியக்கூற்று ஆய்வு மற்றும் காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெற்று வருகின்றன. ஆள்துளையிடல் நிறைவடைந்துள்ளது. பம்பலப்பிட்டி – கொள்ளுப்பிட்டிப் பிரிவிற்கான நடைபாதை வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க கருத்திட்டத்தின் இலக்கு 2017 ஆம் ஆண்டை விடவும் ஒப்பீட்டளவில் குறைவாக அடையப்பட்டுள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-04-49** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 100.0 | 200.0 | 76.2 |
| | **மொத்தம்** | **100.0** | **200.0** | **76.2** |

2018 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம் 50% விடவும் குறைவாகக் காணப்படுவதுடன் பெரும்பாலான நடவடிக்கைகள் இன்னும் அவைகளில் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளன. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிதி முன்னேற்றம் 10% ஆகக் காணப்பட்டது.

# 5.0 வீதிகளை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல்

## 5.1 வீதிகளை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல்

வீதி அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பிரதான வீதிகளை இணைக்கின்ற முக்கிய வீதி இணைப்புக்கள் மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஆனால் நிதி வழங்கும் கொடை வழங்குநர்களுக்கு வழங்க முடியாத வீதிப் பகுதிகள், சிறிய பலவீனமான பாலங்கள் என்பன புனரமைக்கப்பட்டு மீள்நிர்மாணம் செய்யப்பட்டும் வருகின்றன.மேம்படுத்தப்பட்ட இந்த வீதியின் நீளம் 2018 ஆம் ஆண்டில் 364.78 கி.மீ ஆக காணப்பட்டுள்ளதுடன் மற்றைய 337.32 கி.மீ இன் மேம்படுத்தல் வேலைகள் ஆண்டிறுதியிலும் நடைபெற்று வருகின்றன. 2018 ஆம் ஆண்டில் மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள வீதியின் நீளம் 825.87 கி.மீ ஆகும். இதில் ஆண்டின் இறுதி வரையில் 44% இனை மட்டுமே முழுவதுமாக பூர்த்தி செய்ய முடிந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கு அடைவு 2017 ஆம் ஆண்டுடன் பின்வருமாறு ஒப்பிடப்பட்டுள்ளது.







வீதிகளைத் தவிர 2 பாலங்களை புனர்நிர்மாணிக்கும் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் பாலங்களை புனர்நிர்மாணி 12 ஆம் ஆண்டில் 2017க்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன . 12 பாலங்களில் பாலங்கள் தென் மாகாணத்திலும் 5 பாலங்கள் கொழும்பு மாவட்டத்திலும் 7 .அமைந்துள்ளன 8 பாலங்களை மீள்நிர்மாணித்தல் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் டிசம்பர் இறுதியில் உள்ளவாறு அதில் 6 பாலங்களின் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. பூர்த்தி செய்யப்பட்டுள்ள பாலங்களில் 5 பாலங்கள் மேல் மாகாணத்திலும் ஒரு பாலம் தென் மாகாணத்திலும் அமைந்துள்ளன. ஒவ்வொரு மாட்டத்திலும்

2018 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீதி அகலமாக்கல் மற்றும் மேம்பாட்டுச் செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு காணப்படுகின்றது:

**அட்டவணை 5.1.1 2018 ஆம் ஆண்டில் வீதி அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல்களின் முன்னேற்றம்**

| மாவட்டத்தின் பெயர் | ஒட்டுமொத்த பௌதீக இலக்கு 31/12/2018 இல் (%) | முன்னேற்றம் 31/12/2018 வரை (%) |
|---|---|---|
| கொழும்பு மாவட்டம் | 100 | 52 |
| கம்பஹா மாவட்டம் | 100 | 82 |
| களுத்துறை மாவட்டம் | 100 | 76 |
| கண்டி மாவட்டம் | 100 | 63 |
| மாத்தளை மாவட்டம் | 100 | 29 |
| நுவரெலியா மாவட்டம் | 100 | 40 |
| மாத்தறை மாவட்டம் | 100 | 81 |
| காலி மாவட்டம் | 100 | 65 |
| அம்பாந்தோட்டை மாவட்டம் | 100 | 91 |
| யாழ்ப்பாண மாவட்டம் | 100 | 100 |
| கிளிநொச்சி மாவட்டம் | 100 | 77 |
| மன்னார் மாவட்டம் | 100 | 100 |
| வவுனியா மாவட்டம் | 100 | 100 |
| முல்லைத்தீவு மாவட்டம் | 100 | 51 |
| மட்டக்களப்பு மாவட்டம் | 100 | 97 |
| அம்பாறை மாவட்டம் | 100 | 23 |
| திருகோணமலை மாவட்டம் | 100 | 84 |
| குருநாகல் மாவட்டம் | 100 | 42 |
| புத்தளம் மாவட்டம் | 100 | 86 |
| அநுராதபுரம் மாவட்டம் | 100 | 47 |
| பொலனறுவை மாவட்டம் | 100 | 100 |
| பதுளை மாவட்டம் | 100 | 7 |
| மொனராகலை மாவட்டம் | 100 | 29 |
| கேகாலை மாவட்டம் | 100 | 10 |
| இரத்தினபுரி மாவட்டம் | 100 | 24 |

2017 ஆம் ஆண்டின் நான்காம் காலண்டின் இறுதியில் 25 மாவட்டங்களில் எந்த மாவட்டமும் 100% பௌதீக முன்னேற்றத்தை அடை யாத போதிலும் 31.12.2018 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நான்கு மாவட்டங்கள் 100% இலக்கினை அடைந்துள்ளன. அவற்றில் மூன்று வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களாகும். எஞ்சிய ஒன்று பொலன்னறுவை மாவட்டமாகும். கண்டி மற்றும் காலி மாவட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் அதிகூடிய பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

15 மாவட்டங்கள் 31.12.2017 ஆம் திகதி வரையில் 90% இற்கும் அதிகமான பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளடன் 02 மாவட்டங்கள் மட்டும் 2018 ஆம் ஆண்டில் 90% இற்கும் அதிகமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கொழும்பு, களுத்துறை, மாத்தளை, அம்பாறை, யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், மொனறாகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் வீதிகளை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் வேலைகளில் 75% - 90% இடைப்பட்ட பௌதீக முன்னேற்றத்தை அடையப் பெற்றிருந்தன. புத்தளம், திருகோணமலை, கம்பஹா, மாத்தறை, கிளிநொச்சி மற்றும் களுத்துறை மாவட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் 75% - 90% இடைப்பட்ட பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன. 25 மாவட்டங்களில் ஒரு மாவட்டம் மட்டும் 2017 ஆம் ஆண்டில் 75% இற்கு குறைவான பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 25 ஒப்பந்தங்களில் 13 ஒப்பந்தங்கள் 75% இற்கு குறைவான பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் அவற்றில் 4 வெறுமனே 25% பௌதீக முன்னேற்றத்தை பூர்த்தி செய்துள்ளன.

25 மாவட்டங்களில் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் பதுளை மாவட்டம் மிகக் குறைவான பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நுவரெலியா மாவட்டம் மிகக் குறைவான பௌதீக முன்னேற்றத்தை அடைந்திருந்தது. அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் பௌதீக இலக்குகளும் நிதியியல் இலக்குகளும் ஒவ்வொரு வருடத்தினதும் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் ஏற்பாடுகளின் அடிப்படையிலும் மற்றும் தேவைப்பாடுகளின் அடிப்படையிலும் திட்டமிடப்பட்டன.

**அட்டவணை 5.1.2 2017 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் அடையப் பெற்றுள்ள பௌதீக முன்னேற்றம்**

| மாவட்டத்தின் பெயர் | 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக இலக்கு (%) | 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக இலக்கு (%) |
|---|---|---|
| கொழும்பு மாவட்டம் | 100 | 83 |
| கம்பஹா மாவட்டம் | 100 | 95 |
| களுத்துறை மாவட்டம் | 100 | 82 |
| கண்டி மாவட்டம் | 100 | 98 |
| மாத்தளை மாவட்டம் | 100 | 80 |
| நுவரெலியா மாவட்டம் | 100 | 52 |
| மாத்தறை மாவட்டம் | 100 | 92 |
| காலி மாவட்டம் | 100 | 98 |
| அம்பாந்தோட்டை மாவட்டம் | 100 | 95 |
| மட்டக்களப்பு மாவட்டம் | 100 | 95 |
| அம்பாறை மாவட்டம் | 100 | 88 |
| திருகோணமலை மாவட்டம் | 100 | 92 |
| யாழ்ப்பாண மாவட்டம் | 100 | 85 |
| கிளிநொச்சி மாவட்டம் | 100 | 95 |
| மன்னார் மாவட்டம் | 100 | 93 |
| வவுனியா மாவட்டம் | 100 | 85 |
| முல்லைத்தீவு மாவட்டம் | 100 | 93 |
| குருநாகல் மாவட்டம் | 100 | 95 |
| புத்தளம் மாவட்டம் | 100 | 90 |
| அநுராதபுரம் மாவட்டம் | 100 | 95 |
| பொலன்னறுவை மாவட்டம் | 100 | 95 |
| பதுளை மாவட்டம் | 100 | 93 |
| மொனராகலை மாவட்டம் | 100 | 90 |
| கேகாலை மாவட்டம் | 100 | 92 |
| இரத்தினபுரி மாவட்டம் | 100 | 90 |

அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் முறையே 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான நிதி முன்னேற்ற ஒப்பீடொன்று கீழே தரப்பட்டுள்ளது. (அட்டவணை 5.1.3)

**அட்டவணை 5.1.3 - 2018 மற்றும் 2017ஆண்டுகளில் அடையப் பெற்ற மொத்த நிதி முன்னேற்றம்**

| வருடம் | ஒதுக்கீடு (ரூபா.மில்) | செலவினம் (ரூபா மில்) | நிதிச் செயலாற்றுகை (%) |
|---|---|---|---|
| **2018** | 10,865.0 | 7,559.0 | 70% |
| **2017** | 10,734.4 | 9,211.5 | 86% |

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு 2018 ஆம் ஆண்டில் 10,734.4மில்லியன் ரூபாவிலிருந்து 10,865.0மில்லியன் வரையில் சற்றுஅதிகரித்துள்ளது. இது 1% அதிகரிப்பாகும். கண்டி, அம்பாந்தோட்டை, குருநாகல், பதுளை, வட மாகாண மாவட்டங்கள், கிழக்கு மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணம் ஆகியவற்றைத் தவிர அதிக மாவட்டங்களின் அசல் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு மாற்றமடைந்துள்ளன. மேல் மாகாணம், மத்திய மாகாணத்தின் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்கள், தென் மாகாணத்தின் மாத்தறை மற்றும் காலி மாவட்டங்கள், புத்தளம் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் அசல் வரவுசெவுத்திட்ட ஒதுக்கீடு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர்களினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்டு இவ்வருடத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. 31.12.2018 ஆம் திகதி வரையில் ஒவ்வொரு மாவட்டமும் அடையப்பெற்ற நிதி முன்னேற்றத்தை பின்வருமாறு காட்ட முடியும்.

ஐந்து மாவட்டங்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி முன்னேற்றங்கள் 2018 ஆம் ஆண்டிற்குள் 100% நிதி முன்னேற்றங்களை அடைந்துள்ளதுடன் மற்றைய 3 மாவட்டங்கள் 100% நிதி முன்னேற்றங்களை அடைந்துள்ளன. இந்த மாவட்டங்களைத் தவிர 4 மாவட்டங்கள் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 80% இற்கும் அதிகமான நிதி முன்னேற்றங்களை அடைந்துள்ளன. ஆகக் குறைவான நிதி முன்னேற்றத்தை மன்னார் மாவட்டம்

அடைந்துள்ளதுடன் மற்றைய 4 மாவட்டங்கள் 20% இற்கும் குறைவான நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

**அட்டவணை 5.1.4 -2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் அடையப்பெற்றுள்ள நிதி முன்னேற்றம்**

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | மாவட்டத்தின் பெயர் | வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு 2018 | திருத்தப்பட்ட ஒதுக்கீடு (ரூபா.மில்) | 31 டிசம்பர் 2018இல் உள்ளவாறான செலவினம் | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| 117-02-05-01-2104-11 | கொழும்பு மாவட்டம் | 800.0 | 944.0 | 283.7 | 30% |
| 117-02-05-02-2104-11 | கம்பஹா மாவட்டம் | 600.0 | 705.0 | 368.5 | 52% |
| 117-02-05-03-2104-11 | களுத்துறை மாவட்டம் | 500.0 | 568.0 | 104.7 | 18% |
| 117-02-05-04-2104-11 | கண்டி மாவட்டம் | 450 | 450.0 | 378.4 | 84% |
| 117-02-05-05-2104-11 | மாத்தளை மாவட்டம் | 300 | 331.0 | 50.05 | 15% |
| 117-02-05-06-2104-11 | நுவரெலியா மாவட்டம் | 200 | 237.0 | 44.99 | 19% |
| 117-02-05-07-2104-11 | மாத்தறை மாவட்டம் | 300 | 345.0 | 229.54 | 67% |
| 117-02-05-08-2104-11 | காலி மாவட்டம் | 250 | 269.0 | 51.43 | 19% |
| 117-02-05-09-2104-11 | அம்பாந்தோட்டை மாவட்டம் | 300 | 300.0 | 278.28 | 93% |
| 117-02-05-10-2104-11 | யாழ்ப்பாண மாவட்டம் | 150 | 150.0 | 81.73 | 54% |
| 117-02-05-11-2104-11 | கிளிநொச்சி மாவட்டம் | 150 | 150.0 | 154.1 | 103% |
| 117-02-05-12-2104-11 | மன்னார் மாவட்டம் | 175 | 175.0 | 0.65 | 0% |
| 117-02-05-13-2104-11 | வவுனியா மாவட்டம் | 175 | 175.0 | 117.21 | 67% |
| 117-02-05-14-2104-11 | முல்லைத்தீவு மாவட்டம் | 175 | 175.0 | 239.2 | 137% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 117-02-05-15-2104-11 | மட்டக்களப்பு மாவட்டம் | 100 | 100.0 | 117.57 | 118% |
| 117-02-05-16-2104-11 | அம்பாறை மாவட்டம் | 125 | 125.0 | 104.95 | 84% |
| 117-02-05-17-2104-11 | திருகோணமலை மாவட்டம் | 75 | 75.0 | 61.75 | 82% |
| 117-02-05-18-2104-12 | குருநாகல் மாவட்டம் | 300 | 300.0 | 412.0 | 137% |
| 117-02-05-19-2104-13 | புத்தளம் மாவட்டம் | 300 | 347.0 | 183.3 | 53% |
| 117-02-05-20-2104-14 | அநுராதபுரம் மாவட்டம் | 300 | 300.0 | 313.3 | 104% |
| 117-02-05-21-2104-15 | பொலன்னறுவை மாவட்டம் | 400 | 400.0 | 180.81 | 45% |
| 117-02-05-22-2104-16 | பதுளை மாவட்டம் | 200 | 200.0 | 146.87 | 73% |
| 117-02-05-23-2104-17 | மொனறாகலை மாவட்டம் | 150 | 30.96 | 30.96 | 100% |
| 117-02-05-24-2104-18 | கேகாலை மாவட்டம் | 200 | 134.19 | 134.19 | 100% |
| 117-02-05-25-2104-19 | இரத்தினபுரி மாவட்டம் | 150 | 200.85 | 200.85 | 100% |
| 117-02-05-26-2104-20 | வரி ஆக்கக்கூறு | 800 | 800.0 | 589.7 | 74% |
| 117-02-05-29-2104-21 | தேசிய சேமிப்பு வங்கியினால் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்கள் | 2700 | 2700.0 | 2700.0 | 100% |
| **மொத்தம்** | | **9525.0** | **10,865.0** | **7,559.0** | **70%** |

31.12.2017 ஆம் திகதியில் ஒவ்வொரு மாவட்டங்களும் அடையப் பெற்றுள்ள நிதி முன்னேற்றத்தை பின்வருமாறு காட்ட முடியும் (அட்டவணை 5.1.5).

**அட்டவணை 5.1.5 –31.12.2017 ஆம் திகதி வரையில் அடையப் பெற்ற நிதி முன்னேற்றம்**

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | மாவட்டத்தின் பெயர் | திருத்தப்பட்ட ஒதுக்கீடு (ரூபா.மில்) | 31 டிசம்பர் 2017இல் உள்ளவாறான செலவினம் | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 117-02-05-01-2104-11 | கொழும்பு மாவட்டம் | 598.03 | 434.26 | 73 |
| 117-02-05-02-2104-11 | கம்பஹா மாவட்டம் | 446.12 | 321.43 | 72 |
| 117-02-05-03-2104-11 | களுத்துறை மாவட்டம் | 317.52 | 234.49 | 74 |
| 117-02-05-04-2104-11 | கண்டி மாவட்டம் | 356.37 | 356.37 | 100 |
| 117-02-05-05-2104-11 | மாத்தளை மாவட்டம் | 92.79 | 46.44 | 50 |
| 117-02-05-06-2104-11 | நுவரெலியா மாவட்டம் | 85.54 | 33.32 | 39 |
| 117-02-05-07-2104-11 | மாத்தறை மாவட்டம் | 296.40 | 241.63 | 82 |
| 117-02-05-08-2104-11 | காலி மாவட்டம் | 160.38 | 128.28 | 80 |
| 117-02-05-09-2104-11 | அம்பாந்தோட்டை மாவட்டம் | 277.52 | 277.52 | 100 |
| 117-02-05-10-2104-11 | யாழ்ப்பாண மாவட்டம் | 188.70 | 188.70 | 100 |
| 117-02-05-11-2104-11 | கிளிநொச்சி மாவட்டம் | 136.21 | 136.21 | 100 |
| 117-02-05-12-2104-11 | மன்னார் மாவட்டம் | 150.00 | 121.52 | 81 |
| 117-02-05-13-2104-11 | வவுனியா மாவட்டம் | 276.49 | 276.49 | 100 |
| 117-02-05-14-2104-11 | முல்லைத்தீவு மாவட்டம் | 252.25 | 252.25 | 100 |
| 117-02-05-15-2104-11 | மட்டக்களப்பு மாவட்டம் | 93.60 | 93.60 | 100 |
| 117-02-05-16-2104-11 | அம்பாறை மாவட்டம் | 164.42 | 164.42 | 100 |
| 117-02-05-17-2104-11 | திருகோணமலை மாவட்டம் | 109.28 | 109.28 | 100 |
| 117-02-05-18-2104-12 | குருநாகல் மாவட்டம் | 369.01 | 369.01 | 100 |
| 117-02-05-19-2104-13 | புத்தளம் மாவட்டம் | 296.00 | 238.78 | 81 |
| 117-02-05-20-2104-14 | அநுராதபுரம் மாவட்டம் | 387.10 | 387.10 | 100 |
| 117-02-05-21-2104-15 | பொலன்னறுவை மாவட்டம் | 279.19 | 279.19 | 100 |
| 117-02-05-22-2104-16 | பதுளை மாவட்டம் | 180.83 | 180.83 | 100 |
| 117-02-05-23-2104-17 | மொனறாகலை மாவட்டம் | 84.03 | 50.84 | 61 |
| 117-02-05-24-2104-18 | கேகாலை மாவட்டம் | 175.00 | 135.51 | 77 |
| 117-02-05-25-2104-19 | இரத்தினபுரி மாவட்டம் | 150.00 | 139.39 | 93 |

| | | | | |
|---|---|---|---|---|
| 117-02-05-26-2104-20 | வரி ஆக்கக்கூறு | 714.57 | 714.57 | 100 |
| 117-02-05-29-2104-21 | தேசிய சேமிப்பு வங்கியினால் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்கள் | 4100.00 | 3300.0 | 80 |
| **மொத்தம்** | | **10737.40** | **9211.50** | **70** |

மேற்தரப்பட்ட அட்டவணைக்கிணங்க, 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் 13 மாவட்டங்கள் 100% நிதியியல் முன்னேற்றத்தை அடைந்துள்ளன எனக் குறிப்பிட முடியும்; இதில் நுவரெலியா மாவட்டம் ஆகக் குறைந்த நிதியியல் முன்னேற்றத்தை அடைந்துள்ளது. மாகாண ரீதியாக 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அடையப்பெற்ற நிதியியல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளன. (அட்டவணை 5.1.6)

**அட்டவணை 5.1.6 - 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அடையப்பெற்ற மாகாண ரீதியான நிதி முன்னேற்றத்தின் ஒப்பீடு**

| மாகாணத்தின் பெயர் | 2017 டிசம்பர் 31 இல் நிதி முன்னேற்றம் (%) | 2018 டிசம்பர் 31 இல் நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|
| மேல் மாகாணம் | 73% | 34% |
| மத்திய மாகாணம் | 82% | 46% |
| தென் மாகாணம் | 88% | 61% |
| வட மாகாணம் | 97% | 72% |
| கிழக்கு மாகாணம் | 100% | 95% |
| வடமேல் மாகாணம் | 91% | 92% |
| வட மத்திய மாகாணம் | 100% | 71% |
| ஊவா மாகாணம் | 87% | 77% |
| சப்ரகமுவ மாகாணம் | 85% | 100% |

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு மாகாணமும் அடையப் பெற்ற நிதி முன்னேற்றங்களை மேலே உள்ளவாறு வரைபில் காட்டக் கூடியதாக இருந்த போதிலும், ஒவ்வொரு மாவட்டத்திற்குமான ஒதுக்கீடுகள் விடயத்தில் வருடாந்த முன்னுரிமைத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப ஒதுக்கப்பட்டமையினால் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான பெறுமானங்களை ஒப்பீடு செய்ய முடியாதுள்ளது.

ஆனால், 2017 ஆம் ஆண்டின் இறுதியில், 100% நிதி முன்னேற்றத்தை கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்கள் அடைந்திருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் சப்பிரகமுவ மாகாணம் 100% நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டில் வட மத்திய மாகாணத்தைத் தவிர மற்றைய எல்லா மாகாணங்களும் மிகக் குறைவான நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளன. 2017 மற்றும் 2018ஆகிய இரண்டு வருடங்களிலும் ஆகக் குறைந்த நிதி முன்னேற்றத்தை மேல்மாகாணமே அடைந்துள்ளது.எனவே, 2018 ஆம் ஆண்டில், ஒவ்வொரு மாகாணத்தினாலும் அடையப்பெற்ற ஒட்டுமொத்த நிதியியல் இலக்கினை ஒரு ஒப்பீட்டளவில் நடுத்தரமான செயல்முன்னேற்றம் ( 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்துடன்) என்ற முடிவுக்கு வர முடியும்.

# 6.0 பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்

வீதி வலையமைப்பின் தவிர்க்க முடியாத பகுதிகளாக இருப்பதனால், வீதி அபிவிருக்கு சமனாக பாலங்களும் மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் மீள்நிர்மாணம் செய்யப்படுகின்றன அல்லது புனரமைக்கப்படுகின்றன. வருடாந்தம் 100 - 150 பாலங்களை மீள்நிர்மாணம் செய்யப்பட வேண்டியுள்ளன (தற்போது காணப்படும் மிதவைப் பாலங்கள் மற்றும் பலவீனமான, ஒடுங்கிய பாலங்கள் என்பவற்றுக்குப் பதிலாக நிரந்தரப் பாலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன). தாமதங்களையும் விபத்துக்களையும் குறைத்து வாகனங்களின் தொழிற்பாட்டுச் செலவுகளை குறைப்பதன் மூலம் பாதுகாப்பானதும் வினைத்திறன்மிக்கதுமான போக்குவரத்தை உறுதிசெய்வதற்காக வாகனப் போக்குவரத்து நெரிசல் கொண்ட இடைத்தொடர்புப் பிரதேசங்களில் மேம்பாலங்களை நிர்மாணிக்க வேண்டியுள்ளன. இந்த வகையில் இவ்வமைச்சு இலகுவானதும் பாதுகாப்பானதுமான போக்குவரத்து வசதியினை உறுதிப்படுத்துவதற்காகப் பல்வேறு கருத்திட்டங்களின் கீழ் புதிய பாலங்களின் புனரமைப்பு, மேம்படுத்தல், மீள்நிர்மாணம், நிர்மாணம் ஆகிய பணிகளில் ஈடுபடுகின்றது.

தேசிய வீதி வலையமைப்பில் சுமார் 4662 பாலங்கள் (A தர மற்றும் B தர நெடுஞ்சாலைகள்) காணப்படுகின்றன. வீச்செல்லைக்கிணங்க பாலங்களை வகைப்படுத்தல் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.




**உரு 6.0 – தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள பாலங்களின் சுருக்கம்**

தேசிய வீதி வலையமைப்பில் அமைந்துள்ள அதிக எண்ணிக்கையிலான பாலங்கள் 10மீ இற்கும் குறைவான வீச்செல்லையையே கொண்டுள்ளன. ஆகக் குறைவான

எண்ணிக்கையிலான பாலங்கள் 30மீ<வீச்செல்லை< 50மீமற்றும் 10மீ<வீச்செல்லை< 30மீ உடன் காணப்படுகின்றன. இப்பாலங்கள் தேசிய வீதி வலைமைப்பில் ‘A’ தர நெடுஞ்சாலைகளிலும் ‘B’ தர நெடுஞ்சாலைகளிலும் அமைந்துள்ள போதிலும் கடுகதிப்பாதைகளில் நிர்மாணிக்கப்பட்ட பாலங்கள் இந்த அளவீடுகளுக்குள் உள்ளடக்கப்படவில்லை.

## 6.1 தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள சேதமடைந்த/ பலவீனமான பாலங்களை மீள நிர்மாணித்தல்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாலங்கள் மேம்படுத்தப்பட்டதுடன் 86 ஆம் ஆண்டில் 2017 2018 ஆம் ஆண்டில் 53 பாலங்கள் மேம்படுத்தப்பட்டன .53 பாலங்களில் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 10 பாலங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன .2017 ஆம் ஆண்டில் பாலங்கள் 37 பூர்த்திசெய்யப்பட்டும் மற்றும் பூர்த்தியடையும் நிலையிலும் இருந்தன .13 பாலங்களின் பௌதீக வேலைகள் நடைபெற்று வருவதுடன் பாலங்கள் கேள்விமனு கட்டத்தில் 47 காணப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் 12 கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் அவை அனைத்தும் கேள்விமனு கட்டத்திலேயே 31.12.2018 ஆம் திகதி வரையில் காணப்பட்டன. 53 பாலங்களில் 31 பாலங்களின் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**அட்டவணை 6.1.1 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பௌதீகச் செயலாற்றுகை**

| *மாகாணம்* | *பூர்த்தியடைந்தவை* | *நடைபெறுபவை* | *கேள்விமனுக் கட்டம்* | *மொத்தம்* |
|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | 02 | 04 | 04 | 10 |
| மத்திய மாகாணம் | - | 08 | 05 | 13 |
| தென் மாகாணம் | 01 | 01 | - | 02 |
| வட மாகாணம் | - | - | - | - |
| கிழக்கு மாகாணம் | - | - | 01 | 01 |
| கிழக்கு மாகாணம் (APD - Akp) | - | 1 | - | 01 |
| வட மேல் மாகாணம் | 03 | 04 | - | 07 |
| வட மத்திய மாகாணம் | 01 | 06 | 02 | 09 |
| ஊவா மாகாணம் | 01 | 01 | - | 02 |
| சப்பிரகமுவ மாகாணம் | 02 | 06 | - | 08 |
| ***மொத்தம்*** | **10** | **31** | **12** | **53** |

கருத்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் அடையப்பெற்ற நிதி முன்னேற்றம் 61% ஆகவும் 2017 ஆம் ஆண்டில் 82% ஆகவும் காணப்பட்டது. எனவே 2017 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க அடையப்பெற்ற நிதி இலக்கு 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் சிறிது குறைவடைந்துள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-06-08** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 350.0 | 400.0 | 243.68 |
| | **மொத்தம்** | **350.0** | **400.0** | **243.68** |

## 6.2 பழைய பாலங்களின் பாகங்களைப் பயன்படுத்தி கிராமியப் பாலங்களை நிர்மாணித்தல்

கிராமியப் பிரதேசங்கங்களில் செலவு குறைந்த பாலங்களை நிர்மாணித்தல், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய வீதிகளில் வெள்ளப்பெருக்குகளினால் ஏற்படும் சேதங்கள் போன்ற அவசர நிலைமைகளில் விரைவான தற்காலிகப் பாலங்களை நிர்மாணித்தல் என்பன கிராமியப் பாலங்களின் நிர்மாணப் பிரிவின் முக்கிய பொறுப்புக்களில் உள்ளடங்கும். அடிப்படையில் இந்தப் பாலங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பாலங்களிலிருந்து அகற்றப்பட்ட பால உருக்குப் பாகங்களைப் பயன்படுத்தி கிராமப் புறங்களில் நிர்மாணிக்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் 76 பாலங்கள் புனர்நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒதுக்கீடு பிரச்சினை காரணமாக செயற்பாட்டுத் திட்டம் திருத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையில் 12 பாலங்கள் பூர்த்திசெய்யப்பட்டன. 8 பாலங்களின் நிர்மாண வேலைகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் 3 பாலங்கள் குறித்த

ஆண்டிலேயே பூர்த்திசெய்யப்பட்டன. 35 பாலங்களின் நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2018 ஆம் ஆண்டில், 7 பாலங்களை மீள்நிர்மாணிக்கும் வேலைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 14 பாலங்களின் வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. 21 பாலங்களின் நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன. 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள போதிலும் இந்த 21 பாலங்களில் 6 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை. அவற்றைத் தவிர அவசர திருத்தங்கள்,போக்குவரத்து ஆக்கக்கூறுகள் உள்ளடங்கலாக launching and delaunching baily bridges 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டவாறு அமுல்படுத்தப்பட்டன. இது 100% பௌதீக முன்னேற்றத்துடன் 100% இலக்கினையும் அடைந்துள்ளது. கருத்திட்ட விபரங்கள் ***பின்னிணைப்பு – 14*** இல் தரப்பட்டுள்ளன.

இக்கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் 65% நிதியியல் முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளது. இது 2017 ஆம் ஆண்டில் 52% ஆகக் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க நான்காம் காலாண்டின் இறுதியில் இக்கருத்திட்டம் குறிப்பிடத்தக்க தொகைக்கு நிதி இலக்குகளை அடைந்துள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-06-14** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 300.0 | 343.0 | 221.2 |
| | **மொத்தம்** | **300.0** | **343.0** | **221.2** |

## 6.3 பிராந்தியப் பாலங்கள் கருத்திட்டம் - கட்டம் II

இக்கருத்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு 45 மில்லியன் பவுன்களாகும். இக்கருத்திட்டத்திற்கு ஐக்கிய இராச்சியத்திலுள்ள எச்.எஸ்.பி.சீ வங்கி கடனுதவி

வழங்குகின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ் 80 பாலங்கள் புனர்நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. கருத்திட்டக் காலம் 2013 முதல் 2017 வரையான 4 வருடங்களாகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 10 பாலங்கள் பூர்த்திசெய்யப்பட்டதுடன் 16கருத்திட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில் காணப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் பட்டியலிலிருந்து புனரமைப்பதற்கான 66 பாலங்களிலிருந்து சில பாலங்கள் தற்காலிகமாக பயன்படுத்தப்பட்டன. மொத்தத்தில் 65 பாலங்கள் 2017 ஆம் ஆண்டு இறுதி வரையில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 5% ஆகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியில் திரட்டிய பௌதீக முன்னேற்றம் ஏறத்தாழ 97% ஆகும்.

2018 ஆம் ஆண்டில், 11 பாலங்களின் வேலைகள் நிறைவடைந்துள்ளன. 06 கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2018 டிசம்பர் இறுதியில் எஞ்சியவை வேலைகள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் 76 பாலங்கள் நிறைவடைந்துள்ளன. 2018 டிசம்பர் இறுதியில் கருத்திட்டத்தின் மொத்த முன்னேற்றம் 99% ஆகும். நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கருத்திட்டங்களின் விபரங்கள் ***பின்னிணைப்பு - 15*** இல் தரப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் அடையப்பட்ட நிதி முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-06-16** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 125.0 | 346.0 | 346.0 |
| | **மொத்தம்** | 125.0 | 346.0 | 346.0 |

2018 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தினால் அடையப்பெற்ற நிதி முன்னேற்றம் 100% ஆகவும் இது 2017 ஆம் ஆண்டில் 96% ஆகவும் காணப்பட்டது. எனவே 2018 ஆம் ஆண்டின்

செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க இக்கருத்திட்டம் தனது முழு நிதி இலக்குகளையும் அடைந்துள்ளது.



**எஸ்வத்த – ரண்வல வீதியில் களணி ஆற்றுக்கு குறுக்கேயுள்ள பாலம்**



**சல்கஸ்ஹந்திய ஆற்றங்கரை வீதியை இணைக்கும் கல்லோயாவிற்கு மேலுள்ள பாலம்**

## 6.4 தேசிய நெடுஞ்சாலைகளில் 25 பாலங்களை மீள்நிர்மாணித்தல்

இக்கருத்திட்டத்தின் கீழ் ஏ மற்றும் பி தர வீதிகளில் 25 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இக்கருத்திட்டத்திற்கு அரபுப் பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் (KFAED) நிதி உதவி வழங்குகின்றது. மொத்தக் கடன் தொகை 10 மில்லியன் (4,460 மில்லியன் ரூபா) குவைத் தீனார்களாகும். இக்கருத்திட்டம் மூன்று பொதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில், ஒப்பந்தப் பொதி 1 இன் கீழ் 8 பாலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொதி 1 இன் சிவில் வேலைகள் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 201 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும். 2015 ஆம் ஆண்டில் பூர்வாங்க வேலைகள் மாத்திரமே செய்யப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டில் 2016 ஆம் ஆண்டினைப் போலவே சிவில் வேலைகள் தொடர்ந்தன. பொதி 1 இற்கான ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 28% ஆகவும் 2017 ஆம் ஆண்டில் 12% மட்டுமே அடைந்துள்ளது. எனவே டிசம்பர் இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 40% ஆகும். இது 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 67% மொத்த பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இது இவ்வருடத்திற்குள் அடையப்பெற்ற மற்றைய 27% பூர்த்திக்கு ஒத்திசைவானது.

பொதி 1 இன் கீழ் மீள்நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு பாலத்தினதும் திரட்டிய பௌதீக முன்னேற்றத்தை பின்வருமாறு குறிப்பிட முடியும். (அட்டவணை 6.4.1)

**அட்டவணை 6.4.1 - பொதி 1 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம்**

| இல. | பாலத்தின் பெயர் மற்றும் இல. | நீளம் (மீ) | திரட்டிய பௌதீக முன்னேற்றம் (31டிசம்பர் 2016) | திரட்டிய பௌதீக முன்னேற்றம் (31டிசம்பர் 2017) | திரட்டிய பௌதீக முன்னேற்றம் (31டிசம்பர் 2018) |
|---|---|---|---|---|---|
| 1 | கடுவலை – பியகம வீதியின் (AB004) 1/1 ஆம் இலக்கப் பாலம் **(B1)** | 92.76 | 31% | 40% | 75% |
| 2 | கலகெதர – ஹொரண வீதியின் (B123) 14/3 ஆம் இலக்கப் பாலம் **(B2)** | 11.5 | 29% | 40% | 56% |
| 3 | கலகெதர – ஹொரண வீதியின் 14/8 ஆம் இலக்கப் பாலம் (B123)**(B3)** | 11.5 | 34% | 51% | 95% |
| 4 | கேகாலை – புளத்கொஹூபிற்றிய வீதியின் 11/4 ஆம் இலக்கப் பாலம் (AA021) **(B4)** | 31.6 | 12% | 27% | 63% |
| 5 | வெயாங்கொடை – றுவன்வெல்ல வீதியின் (B445) 32/1 ஆம் இலக்கப் பாலம்**(B5)** | 19.3 | 26% | 45% | 60% |
| 6 | தங்கல்லை – வீரகெற்றிய வீதியின் (B410)2/2 ஆம் இலக்கப் பாலம் **(B6)** | 6.92 | 0% (வடிவமைப்பு மாற்றம் காரணமாக) | 63% | 99% |
| 7 | தங்கல்லை – வீரகெற்றிய வீதியின் (B410) 2/3 ஆம் இலக்கப் பாலம்**(B7)** | 13.9 | | 4% | 46% |
| 8 | அம்பலந்துரை – வீரமுனை வீதியின் (B018)10/2 ஆம் இலக்கப் பாலம் **(B8)** | 50.4 | 35% | 41% | 46% |

**அட்டவணை 6.4.2 பொதி 1 இற்கான செயற்பாட்டுத் திட்டங்களுக்கிணங்க 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான திருத்தப்பட்டவாறான ஒட்டுமொத்த இலக்குகள் மற்றும் அசல் முன்னேற்றம்**

| | பௌதீக இலக்கு % | | | | பௌதீக முன்னேற்றம் % | | | | அடைவு % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2018 | Q1 | Q2 | Q3 | Q4 | Q1 | Q2 | Q3 | Q4 | மொத்தம் |
| | 40 | 18 | - | - | 7 | 10 | 7 | 3 | 47 |
| 2017 | Q1 | Q2 | Q3 | Q4 | Q1 | Q2 | Q3 | Q4 | மொத்தம் |
| | 23 | 17 | 18 | 8 | 5 | 5 | 2 | 0.1 | 18 |

இக்கருத்திட்டத்தின் பொதி II மற்றும் III இன் கீழ் எல்லாமாக 17 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டன. பொதி - 2 இற்கான கேள்விப் பத்திர ஆவணம் தயாரித்தல் பூர்த்தியடைந்துள்ளதுடன் கேள்விப் பத்திரம் வழங்கும் பணி 22 டிசம்பர் 2017 இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொதிக்கான ஆலோசனை சேவை ஒப்பந்தம் 2018 ஆம் ஆண்டின் செப்டெம்பரில் வழங்கப்பட்டது.2018 ஆம் ஆண்டின் இறுதியில் பொதி 03 இற்கான வடிவமைப்புகள், கேள்விப் பத்திர ஆவணங்கள் ஆகியவை இன்னும் தயார்படுத்தப்பட்டு வருகின்றன.

பொதி II, III என்பவற்றின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் பௌதீக முன்னேற்றம் ***பின்னிணைப்பு - 16*** இல் காட்டப்பட்டுள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-06-17** | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 25.0 | 25.0 | 13.38 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 550.0 | 320.0 | 265.83 |
| | **மொத்தம்** | **575.0** | **345.0** | **279.21** |

இக்கருத்திட்டத்திற்கான நிதி முன்னேற்றம் 2018 ஆம் ஆண்டில் 81% ஆகவும் 2017 ஆம் ஆண்டில் 89% ஆகவும் காணப்பட்டது.

## 6.5 46 பாலங்களின் மீள் நிர்மாணம்

மிகவும் பழைய ஒடுங்கிய 46 பாலங்களை மீள்நிர்மாணத்திற்காக பிரான்சிய அரசாங்கத்திடமிருந்து கடனாக 22.05 மில்லியன் யூரோக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளன. இக்கருத்திட்டம் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் மீள்நிர்மாணத்திற்காக 50 பாலங்கள் தெரிவுசெய்யப்பட்டன. 2016 ஆம் ஆண்டின் இறுதியில், 44 பாலங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்திருந்ததுடன் இக்கருத்திட்டம் 93% ஒட்டுமொத் பௌதீக முன்னேற்றத்தை அடைந்திருந்தது. எஞ்சிய பாலங்கள் 2017 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டன. அவை ஏறத்தாழ 100% முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

2018 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதிகளைகளையும் இக்கருத்திட்டம் பயன்படுத்தக்கூடியதாக இருந்தமையால் ஏறத்தாழ 100% நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் டிசம்பர் இறுதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம் 97% ஆகும். எனவே, 2017 ஆம் ஆண்டுக்கான நிதி முன்னேற்றம் 3% இனால் குறைக்கப்பட்ட போதிலும் நிதி இலக்கு நடுத்தரமான முன்னேற்றத்தை அடைந்தது.

இக்கருத்திட்டத்தின் கீழ் பாலங்களை நிர்மாணித்தல் 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க பௌதீக இலக்குகளில் 100% முன்னேற்றத்தை அடைந்துள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கான விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு இவ்வருடத்தில் அசல் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இக்கருத்திட்டம் தனது பாலங்கள் மீள்நிர்மாணித்தலின் அனைத்து வேலைகளையும் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்துள்ள போதிலும், இதன் பௌதீக இலக்கு அடைவுகள் செயற்பாட்டுத் திட்டத்திலோ அல்லது திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திலோ உள்ளடக்கப்பட வேண்டிய தேவையில்லை.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-06-18 | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 3.0 | 12.0 | 11.7 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 15.0 | 107.0 | 107.0 |
| | **மொத்தம்** | **18.0** | **119.0** | **118.5** |



**பதல்கும்புற – புத்தள – செல்லக் கதிர்காமம் வீதியின் 8/2 ஆம் இலக்கப் பாலம்**



**பேராதனை – பதுளை – செங்கலடி வீதியின் 194/1 ஆம் இலக்கப் பாலம்**

## 6.6 தேசிய வீதி வலையமைப்பின் முக்கியமான பாலங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் நோக்கெல்லை அதிஉயர் முன்னுரிமை தேசிய வீதிகள் உட்கட்டமைப்பின் ஒரு பகுதியான தேசிய நெடுஞ்சாலைகளில் பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் மாற்றுதல் போன்ற பகுதிகளை மேம்படுத்துவதாகும். இந்தப் பாலங்கள் ‘A’ மற்றும் ‘B’ தர வீதிகளில் காணப்படுவதால் இந்தப் பாலங்களை நிர்மாணிப்பதானது போக்குவரத்து

நேரம், வாகன தொழிற்பாட்டுச் செலவு ஆகியவற்றைக் குறைத்தல் மற்றும் வாகனங்களின் சராசரி வேகத்தை அதிகரித்தல் என்பவற்றின் ஊடாக முழு நாட்டிற்கும் நன்மையைத் தரக்கூடியதாகும்.

இக்கருத்திட்டத்திற்கு சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம் நிதியுதவி வழங்குகிறது. இதற்கான மொத்தக் கடன் தொகை 12,381 மில்லியன் ஜப்பானிய யென்களாகும். நிர்மாணப் பணிகள் 2015 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் 37 பாலங்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் நிதி நிலமை காரணமாக இது 21 பாலங்களுக்கு குறைக்கப்பட்டது. ஒப்பந்தப் பொதி I இன் கீழ் தென் மாகாணத்தில் 10 பாலங்களின் சிவில் வேலைகள் 2015 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

ஒப்பந்தப் பொதி I இன் 2017 டிசம்பர் மாத இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம்98% ஆகக் காணப்பட்டதுடன் அனைத்து சிவில் வேலைகளும் 31.03.2018 ஆம் திகதியளவில் பூர்த்தியடைந்திருந்தன. இந்தப் 10 பாலங்களில் பொல்வத்த மற்றும் கொலேதந்த பாலங்கள் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. மற்றைய 7 பாலங்கள் 2017 ஆம் ஆண்டிற்குள் பூர்த்திசெய்யப்பட்டன.பொதி I ஆனது 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 73% பௌதீக முன்னேற்றத்தை மட்டுமே அடைந்திருந்தது.கருத்திட்டத்தின் இப்பொதி 2017 ஆம் ஆண்டிற்குள் 25% இலக்கினையும் 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 100% பௌதீக முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க பௌதீக இலக்கு அடைவு 100% ஆகும்.

ஒப்பந்தப் பொதி II இன் கீழ் மீள்நிர்மாணத்திற்கான வட மாகாணத்திலுள்ள 8 பாலங்கள் தெரிவுசெய்யப்பட்டன. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ஒப்பந்தக்காரர் இக்கருத்திட்டத்தின் தளத்தைத் தயார்படுத்துதல் மற்றும் பூர்வாங்க வேலைகளை நிறைவு செய்திருந்தார்.இப்பொதியின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் 43% பௌதீக முன்னேற்றத்தையும் 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 70% இலக்கினையும் அடைந்துள்ளது. இக்கருத்திட்டத்தின் பொதி II ஆனது இலக்கிடப்பட்டிருந்த அனைத்து நிர்மாண நடவடிக்கைகளையும் 2018 ஒக்டோபர் மாதத்திற்குள் நிறைவு செய்திருந்ததுடன் 100% மொத்த பௌதீக முன்னேற்றத்தையும் அடைந்திருந்தது. இவ்வருடத்திற்குள் இது 57% பௌதீக முன்னேற்றத்தையும் அடைந்துள்ளதுடன் திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 100% இலக்கினையும்

அடைந்துள்ளது. பொதி I மற்றும் II இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் பட்டியல் ***பின்னிணைப்பு -17*** இல் தரப்பட்டுள்ளது



**B403 வீதியின் 21/1 ஆம் இலக்க அரிப்புப் பாலம்**



**39/2 on A032 வீதியின் 39/2 ஆம் இலக்க மண்டக்கல்லாறு பாலம்**

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-06-19 | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 100.0 | 100.0 | 76.35 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1600.0 | 2147.0 | 2135.88 |
| | **மொத்தம்** | **1700.0** | **2247.0** | **2212.23** |

இக்கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் 96% நிதி முன்னேற்றத்தையும் 2018 டிசம்பர் இறுதியளவில் 98% நிதி முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க இக்கருத்திட்டத்தினால் அடையப்பெற்ற நிதி முன்னேற்றம் 100% விடவும் அதிகமாகும். எனவே இரு ஆண்டுகளிலும் அடையப்பெற்ற நிதி இலக்குகள் பெரும்பாலும் ஒத்துக் காணப்பட்டன.

## 6.7 இரண்டாவது புதிய களனிப் பாலத்தின் நிர்மாணம்

இக்கருத்திட்டத்திற்கு ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவர் (JICA) நிறுவனம் 35,020 மில்லியன் ஜப்பானிய யென்களைக் கடனாக வழங்கியுள்ளது. 2014 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இக்கருத்திட்டத்தின் நிர்மாண வேலைகள் 2020 இல் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் குறிப்பாக புதிய களனிப் பாலத்தில் காணப்படும் வாகனப் போக்குவரத்து நெரிசலைத் குறைத்து கொழும்பு நகரத்தில் குறிப்பாக கொழும்பு கட்டுநாயக்க கடுகதிப்பாதை, பேஸ் லைன் வீதி, துறைமுக அணுகுகைவீதி என்பவற்றில் போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதாகும். கொழும்பு - கட்டுநாயக்க கடுகதிப் பாதை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இக்கடுகதிப்பாதையின் ஊடாகக் கொழும்பு நகரத்தினுள் பிரவேசிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் தேவையை ஈடுசெய்வதற்கு புதிய களனிப் பாலம் ஆறு போக்குவரத்து ஒழுங்கைளையும், இடைமாறல்களையும், துறைமுக அணுகுகை வீதிக்கான நிலமட்டத்திற்கு மேலான வீதியையும் கொண்டதாக அமைக்கப்படும்.

இலங்கை அணுசக்தி அதிகாரசபைக்கான (SLAEB) கட்டடத்தை இடமாற்றி ஒறுகொடவத்தையில் நிர்மாணிக்கும் பணி 2018 ஆம் ஆண்டின் திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 100% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க மேற்கூறிய வேலைக்கான இலக்கு அடைவு 2017 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 70% ஆகும். மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்தை (AETI) வேறு இடத்தில் மீள் நிர்மாணம் செய்யும் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டு 2017 செப்டெம்பரில் NAITA இற்கு கையளிக்கப்பட்டது.

பிரதான சிவில் வேலைகளுக்கான ஆலோசனைசேவைஒப்பந்தம் ஓரியண்டல் கன்ஸ்டல்டன்ட் கம்பனி லிமிடட் மற்றும் கடஹிர அண்ட் எஞ்சினயர்ஸ் இன்டர்நஷனல் என்பவற்றுக்கு வழங்கப்பட்டது. வடிவமைப்பு, கேள்விமனு உதவி மற்றும் நிர்மாண மேற்பார்வை என்பவற்றுக்கான காலப்பகுதி 2015 ஜனவரி முதல் 2019 டிசம்பர் வரையாகும். வடிவமைப்பு வேலைகள் மற்றும் கேள்விமனு உதவி கட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. பிரதான சிவில் வேலை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதுடன் பொதி I மற்றும் பொதி II இற்கான நிர்மாண வேலைகள் முறையே டிசம்பர் 2017 மற்றும் செப்டெம்பர் 2017 இல் ஆரம்பிக்கப்பட்டன. புதிய

களணிப் பாலத்தின் நிர்மாணம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் சாலமுல்ல லக்சத செனவ வீட்டுத் திட்டத்தில் ஏப்ரல் 2017 இல் குடியமர்த்தப்பட்டனர். காணி சுவீகரித்தல் தற்போது நடைபெற்று வருவதுடன் 2017 ஆம் ஆண்டில் 98% முன்னேற்றத்தையும் 2016 டிசம்பர் இறுதியில் உள்ளவாறு 57% முன்னேற்றத்தையும் கொண்டிருந்தது. காணி சுவீகரித்தல் வேலைகள்2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறைவடைந்துள்ளதுடன் பிரிவு 44 இன் வழங்குதல் நடைபெற்று வருகின்றது. பிரிவு 1 இற்கான ஒப்பந்தம் டிசம்பர் 2017 இல் வழங்கப்பட்டமையால் 0% இலக்கே அறிக்கையிடப்பட்டது. பிரிவு 2 இற்கு செப்டெம்பர் 2017 இல் ஒப்பந்தம் அளிக்கப்பட்டது. எனவே 15% இலக்கு அடையப்பட்டது. பொதி 1 இற்கான சிவில் வேலைகளின் மொத்த முன்னேற்றம் 2018 டிசம்பர் இறுதியளவில் 10% ஆக அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் பொதி 2 இன் மொத்த பௌதீக முன்னேற்றம் 31% ஆகும்.




**உரு 6.7.1 – திருத்தம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க பொதிகள் I மற்றும் II இனால் அடையப்பட்ட சிவில் வேலைகளினது இலக்கு**

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-2-06-21 | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 150.0 | 150.0 | 70.58 |
| | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 10,000.0 | 9,010.0 | 8454.81 |
| | **மொத்தம்** | **10,150.0** | **9,160.0** | **8525.39** |

2017 ஆம் ஆண்டில் 92% நிதி முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டில் 93% நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் அடையப்பட்ட நிதி முன்னேற்றத்திற்கிணங்க 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் நிதி அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட முடியும்.

## 6.8 பால முகாமை முறை (BMS) மற்றும் பால மதிப்பீட்டு அலகு (BAU) என்பவற்றின் உருவாக்கம்

தற்போது காணப்படும் முறைமையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதனால், பொருத்தமான பால முகாமை மற்றும் மதிப்பீட்டு முறைமையொன்றை உருவாக்குவதற்கு உதவுமாறு இலங்கை அரசாங்கம் ஜப்பானிய அரசாங்கத்திடம் இலங்கை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது. அதனால், பொருத்தமான பால முகாமை மற்றும் மதிப்பீட்டு முறைமையொன்றை உருவாக்குவதற்கு சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகத்தின் ஊடாகத் தொழில்நுட்ப உதவி வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் உடன்பட்டது. இது 2015 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று வருடத் திட்டமாகும்.

இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் பாலங்களை அவற்றின் திருத்த வேலைகளுக்கான/ புனரமைப்புக்கான/ மீள்நிர்மாணத்திற்கான கட்டமைப்பு உறுதித்தன்மை மற்றும் ஏனைய

முக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முகாமை செய்வதாகும். எனவே பலவீனமான பாலங்களை முன்கூட்டியே அடையாளப்படுத்தி பராமரிப்பதன் ஊடாக பராமரிப்புச் செலவினத்தைக் குறைத்து பொருளாதார அபிவிருத்தியை இக்கருத்திட்டம் அதிகரிக்கும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செயற்பாடு | பௌதீக முன்னேற்றம்31/12/2017 இல் (%) | பௌதீக முன்னேற்றம்31/12/2018 இல் (%) |
|---|---|---|
| மாதிரி மாகாணங்களிலுள்ள பாலங்களைச் சோதனை செய்தல் | 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது | |
| மற்றைய மாகாணங்களிலுள்ள பாலங்களைச் சோதனை செய்தல்(மற்றைய 6 மாகாணங்கள்) | 50 | 100 |
| பாலம் பராமரிப்பு மற்றும் மதிப்பீட்டு அலகு நடவடிக்கைகளுக்கான கையேடுகளை தயாரித்தல் | 100 | |
| பாலங்கள் தொடர்பான தரவுத் தளம்– தரவு உட்சேர்த்தல் செயன்முறை | 60 | 95 |

மாதிரி மாகாணங்களில் (மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்கள்) பாலங்களை சோதனை செய்தல் நடவடிக்கை சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகத்தின் தொழில்நுட்ப உதவியுடனும் மற்றைய பாலங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டன. 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாதிரி மாகாணங்களில் பாலங்களை சோதனை செய்தல் 95% பூர்த்தியடைந்துள்ளது.மற்றைய மாகாணங்களில் பாலங்களை சோதனை செய்யும் நடவடிக்கை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 3000 பாலங்களுக்கான தரவு உட்சேர்த்தல் செயன்முறை பூர்த்தியடைந்துள்ளதுடன் 2017 ஆம் ஆண்டில் சுமார் 60% பௌதீக முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் 95% பூர்த்தியடைந்துள்ளது

பாலம் பராமரிப்பு மற்றும் மதிப்பீட்டு அலகு நடவடிக்கைகளுக்கான கையேடுகளை தயாரித்தல் 2016 ஆம் ஆண்டில் வரைவுச் செயன்முறை மேற்கொள்ளப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் இப்பணி பூர்த்தியடைந்துள்ளது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அடையப்பெற்ற

பௌதீக முன்னேற்றம் முறையே 33% மற்றும் 50% ஆகும்.எனவே, 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அடையப்பெற்ற ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 98% ஆகும். இக்கருத்திட்டத்தின் ஆக்கக்கூற்றிக்கு ஜெய்கா நிதியளித்தல் ஏற்கனவே நிறைவடைந்துள்ளமையால் இந்நிகழ்ச்சித்திட்டம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பாலம் வடிவமைத்தல் பிரிவின் கீழ் வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாக 2018 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 31.12.2018 ஆம் திகதியளவில் இது 100% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பாலம் சோதனையிடல் நடவடிக்கைகளை பின்வருமாறு காட்ட முடியும்.




**உரு 6.8.1 – 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட பாலம் சோதனையிடல் நடவடிக்கைகளின் இலக்கு அடைவு**

2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க அடையப்பெற்ற இலக்கு முறையே 100% மற்றும் 97% ஆகும்.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-2-06-22 | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 8.0 | 15.0 | 12.27 |
| | **மொத்தம்** | 8.0 | 15.0 | 12.27 |

2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் அடையப்பெற்ற நிதி முன்னேற்றம் 82% ஆகவும் 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் அடையப்பெற்ற நிதி முன்னேற்றம் 73% ஆகவும் காணப்பட்டது. இக்கருத்திட்டத்தின் அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடானது முன்னைய வருடங்களின் விலைப்பட்டியல்களை கொடுப்பனவு செய்யும் நோக்கத்திற்காக வருடத்தில் சுமார் இரு தடவைகள் அதிகரிக்கப்பட்டது.

## 6.9 சமவச்சத்தீவு - முனைச்சேனை வீதியில் குழாய்ப் பாலம் நிர்மாணம் (தட்டுத்துறைப் பாலம்)

சமவச்சத்தீவு - முனைச்சேனை வீதியில் தட்டுத்துறைப் பாலத்தை பல செல் குழாய் மதகு கொண்டதாக நிர்மாணிப்பதற்கு அபிவிருத்திக்கான சவுதி நிதியம் நிதி உதவி வழங்குகின்றது. இக்கருத்திட்டத்தின் சிவில் வேலைகள் 2015 ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஜூலை மாதத்தில் பூர்த்திசெய்யப்பட்டது.

ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2015 ஆம் ஆண்டில் 47% ஆகக் காணப்பட்டதுடன் மீதமுள்ள 53% பௌதீக முன்னேற்றம் 2016 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டன.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-06-23 | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 5.0 | 5.0 | 2.73 |
| | **மொத்தம்** | **5.0** | **5.0** | **2.73** |

இக்கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் 89% நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் 2018 ஆம் ஆண்டில் இது 55% நிதி முன்னேற்றத்தை மட்டுமே அடைந்துள்ளது. இக்கருத்திட்டம் பௌதீக ரீதியாக ஜூலை 2016 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டதுடன் விலைப்பட்டியல்களை கொடுப்பனவு செய்யும் எஞ்சியுள்ள வேலைகள் 2017 ஆம் ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



**தட்டுத்துறை பாலம்**

## 6.10 பேலியகொடை புத்தளம் வீதியில் கொச்சிக்கடை பாலம் நிர்மாணம்

பேலியகொடை - புத்தளம் (ஏ 003) வீதியில் உள்ள 38/3 ஆம் இலக்க பழைய ஒடுங்கிய பாலத்தை புனரமைத்து மீள்நிர்மாணம் செய்வதற்கு ஒஸ்ட்ரியாவின் ரைஃபீசன் (Raiffeisen) சர்வதேச வங்கி 8.7 மில்லியன் யூரோவை கடனாக வழங்கியது. இப்பாலம் நிர்மாணித்தலின் பிரதான குறிக்கோள் போக்குவரத்து நேரத்தைக் குறைத்து வீதிப் பாவனையாளர்களுக்கு

பாதுகாப்பான பாதையை மேம்படுத்தும் பொருட்டு பழைய ஒடுங்கிய பாலத்தை புனரமைத்து மீள்நிர்மாணம் செய்வதாகும்.

மூன்று வீச்செல்லைகளுடன் இப்பாலத்தின் நீளம் 105 மீற்றர்களாகும். இப்பாலத்தை 4 ஒழுங்கைகள் கொண்டதாக நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பௌதீக வேலைகள் 2016 ஜுலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ள திகதி 2019 ஜனவரி 24 ஆந் திகதியாகும். அத்துடன் கோளாறுகளைக் கண்டுபிடிப்பதற்கான காலமாக மேலும் ஒரு வருடம் வழங்கப்படும். (ஜனவரி 2020 வரை)

2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அடையப்பெற்ற சிவில் வேலைகளின் மொத்த முன்னேற்றம் 65% ஆகும். 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற பௌதீக முன்னேற்றம் 23% ஆகும். எனவே, 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க சிவில் வேலைகளின் அடைவு 38% ஆகும். 2018 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பௌதீக இலக்கு 35% ஆகவும் இது 2018 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் 100% இலக்கினையும் அடைந்துள்ளது. எனவே 2018 டிசம்பர் இறுதியில் அடையப்பெற்ற சிவில் வேலைகளின் முன்னேற்றம் 100% ஆகும்.

திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திற்கிணங்க, 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 99% நிதி முன்னேற்றத்தையும் 2017 ஆம் ஆண்டில் 46% நிதி முன்னேற்றத்தையும் இக்கருத்திட்டம் அடையப்பெற்றுள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-2-6-20** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 375.0 | 437.0 | 435.0 |
| | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 5.0 | 0.0 | 0.0 |
| | **மொத்தம்** | 380.0 | 437.0 | 435.0 |

## 6.11 ராஜகிரிய, பொல்கஹவலை மற்றும் கணேமுல்லை ஆகிய இடங்களில் 3 மேம்பாலங்கள் நிர்மாணித்தல்

இக்கருத்திட்டமானது வாகனங்களுக்கான செலவையும் பொருளாதாரத்திற்குப் பெரும் இழப்பையும் ஏற்படுத்தும் முக்கியமான 3 இடங்களில் நிலவும் கடுமையான வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும் வாகன தொழிற்பாட்டுச் செலவை குறைப்பதங்காகவும் வீதிப் பாவனையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கான கருத்திட்டக் காலம் 32 மாதங்களாகக் கருதப்படுகின்றது (2016-2018). இக்கருத்திட்டத்திற்கு ஸ்பெயின் நாடு நிதியுதவி வழங்குகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 3 மேம்பாலங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது;

**அட்டவணை 6.11.1 மேம்பாலங்களின் விபரச் சுருக்கம்**

| மேம்பாலம் | இடைவெளி நீளம் (மீ) | மொத்தம் நீளம் (மீ) | ஒழுங்கைகளின் எண்ணிக்கை | கருத்திட்டக் காலப்பகுதி (மாதங்கள்) |
|---|---|---|---|---|
| ராஜகிரிய | 363 | 533.2 | 4 | 32 |
| பொல்கஹவலை | 233 | 353.0 | 2 | 16 |
| கணேமுல்லை | 204 | 275.3 | 2 | 14 |

- **ராஜகிரிய மேம்பாலம் :**

ராஜகிரிய சந்தியில் நிர்மாணிக்கப்படும் ராஜகிரிய மேம்பாலமானது கொள்ளுப்பிட்டி - ஸ்ரீஜயவர்தனபுர (A000) வீதி, வெலிக்கடை - நாவலை (B470) வீதி, பொரளை -ராஜகிரிய (B062) வீதி என்பவற்றில் சுதந்திரமானதும் தடங்கலற்ற வாகனப் போக்குவரத்துக்கான வசதிகளை ஏற்படுத்தும். இம்மேம்பாலத்தின் நிர்மாண வேலைகள் கட்டம் - Iதெற்கு மேம்பாலம - கட்டம் II வடக்கு மேம்பாலம் என கட்டங்களாக 2 நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு கட்டத்திற்குமான நிர்மாணக் காலப்பகுதி

மாதங்களாகும். மேலும் இந்த வடிவமைப்பானது 4 ஒழுங்கைகளைக் கொண்ட மல்டி 16 ஸ்பேன் ஸ்டீல் ஹைபிரிட் ஃபுல் வெப் ட்ரஸ் மேம்பாலமக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அது 2 வெவ்வேறான மற்றும் சமாந்தரமான மேடைகளைக் கொண்டிருக்கும் .

- **பொல்கஹவலை மேம்பாலம்**

பொல்கஹவலை மேம்பாலம் பொல்கஹவலை புகையிரத நிலையத்திற்கு அருகில் அமையக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் 353 மீற்றர் நீளமான 2 ஒழுங்கை மல்டி ஸ்பேன் ஸ்ட்ரைட் ஸ்டீல் மேம்பாலமாக அமையும். இந்த மேம்பாலத்தின் மூலம் பொல்கஹவலை - குருநாகல் வீதியில் (ஏ19) சுதந்திரமானதும் தடங்கலற்றதுமான வாகனப் போக்குவரத்துக்கான வசதி ஏற்படுத்தப்படும். இக்கருத்திட்டத்திற்கான காலப்பகுதி 16 மாதங்களாகும்.

- **கணேமுல்லை மேம்பாலம்:**

கணேமுல்லை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் நிர்மாணிக்கப்படும் கணேமுல்லை மேம்பாலம், மொத்தமாக 275.32 மீற்றர் நீளம் கொண்ட இரண்டு ஒழுங்கைகளைக் கொண்ட மல்டி ஸ்பேன் நேரான இரும்பு மேம்பாலமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பியன்விலை - கணேமுல்லை (பி58), கிரிந்திவிட்ட - கணேமுல்லை (பி226) ஆகிய வீதிகளில் தடங்கலற்ற சுதந்திரமான வாகனப் போக்குவரத்தை உறுதிப்படுத்த முடியும். இக்கருத்திட்டத்தின் பயன்பாட்டுச் சேவைகளை இடமாற்றும் வேலைகள் 2016.12.31 ஆந் திகதியில் பூர்த்தியடையும் தருவாயில் காணப்பட்டன.

ஒவ்வொரு மேம்பாலும் அடையப்பெற்ற 31.12.2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.11.2 – 31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| மேம்பாலத்தின் பெயர் | மொத்த பௌதீக முன்னேற்றம் (%) | | |
|---|---|---|---|
| | 31/12/2016 | 31/12/2017 | 31/12/2018 |
| **ராஜகிரிய மேம்பாலம்** | கட்டம் I – 62%<br>கட்டம் II- 24% | கட்டம்I – 97%<br>கட்டம் II- 94% | நிறைவடைந்துள்ளது |
| **பொல்கஹவலை மேம்பாலம்** | 78% | 99% | நிறைவடைந்துள்ளது |
| **கணேமுல்லை மேம்பாலம்** | 75% | 100% | நிறைவடைந்துள்ளது |

2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க கட்டம் I இற்கானமொத்த பௌதீக முன்னேற்றம் 37% ஆகவும் கட்டம் II இற்கான மொத்த பௌதீக இலக்கு 55% ஆகவும் அடையப்பட்டுள்ள. ஒவ்வொரு கட்டத்திற்குமான இலக்கு முறையே 37% மற்றும் 70% ஆக அடையப்பட்டுள்ளன. எனவே 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க கட்டம் I இற்கு 100% இலக்கும் கட்டம் II இற்கு 100% விட அதிகமான இலக்கும் அடையப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க, 28% பௌதீக இலக்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதன் 20% இலக்கு அடையப் பெற்றிருந்தது. எனவே, 2017 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க71% இலக்கு அடையப்பெற்றிருந்தது.

2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க இக்கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் 23% பௌதீக இலக்காகவும் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 25% முன்னேற்றத்தையும் அடையப் பெற்றிருந்தது. எனவே, 2017 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க இம்மேம்பால நிர்மாணம் 100% விட கூடுதலாக இலக்கினை அடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் அடையப்பெற்ற பௌதீக முன்னேற்றம் 75% ஆகும். இம்மேம்பாலத்தின் நிர்மாண வேலை 2017 ஆம் ஆண்டிற்குள் பூர்த்திசெய்யப்பட்டது.

ஒட்டுமொத்தமாக இக்கருத்திட்டத்தின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் 99% ஆகவும் 2016 ஆம் ஆண்டில் 32% ஆகவும் அடையப்பெற்றுள்ளது. எனவே 2017 ஆம் ஆண்டின் டிசம்பர் இறுதியில் இம்மூன்று மேம்பாலங்களினதும் பணிகள் 100% பூர்த்திசெய்யப்பட்டு பொது மக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டன. நிர்மாணத் தளத்தில் சில சொற்ப வேலைகள் மட்டும் 2018 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ளன. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இம்மூன்று மேம்பாலங்களினதும் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும், அவைகளின் பௌதீக இலக்குகள் 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் காணப்படவில்லை. எஞ்சியுள் மற்றைய சில பௌதீக வேலைகளுக்காக ராஜகிரிய மேம்பாலத்தின் கட்டம் I மற்றும் கட்டம் II இன் பௌதீக இலக்கு 4% காணப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 93% இது 2018 ஆம் ஆண்டில் 99% ஆகவும் காணப்பட்டது. பூர்த்தி செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கான விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யும் பொருட்டு இவ்வாண்டில் அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு திருத்தப்பட்டது. அத்தொகையில் பெரும்பாலும் எல்லாத்

தொகைகளும் கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் 31.12.2018 ஆம் திகதியில் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-2-6-24 | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 380.0 | 740.0 | 738.2 |
| | 2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள் | 0.0 | 176.0 | 176.0 |
| | **மொத்தம்** | **380.0** | **916.0** | **914.2** |



பொல்கஹவலை மேம்பாலம்



கனேமுல்லை மேம்பாலம்



ராஜகிரிய மேம்பாலம்

# 7.0 இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வீதிகளைப் புனரமைத்தல்

## 7.1 தேசிய வீதி வலையமைப்பிற்கான மண்சரிவு அனர்த்தப் பாதுகாப்புச் கருத்திட்டம்

இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்து, முகாமைத்துவ ஆற்றல்களைப் பலப்படுத்தி, அதிக மழைவீழ்ச்சியினால் ஏற்படும் மண்சரிவு அனர்த்தங்களினால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மலை மற்றும் மலைப்பாங்கான பிரதேசங்களில் மண்சரிவுகள் ஏற்படாமல் தடுத்து பாதுகாப்பான, சௌகரிகமான வீதி வலையமைப்பொன்றை உருவாக்குவது, அபிருத்தித் திட்டங்களின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் என்பன சரிவு முகாமை மற்றும் சரிவுப் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்களை உருவாக்குவதற்கு (தொழில்நுட்ப வழிகாட்டல்கள்) ஆரம்பித்துள்ளன. அத்துடன் வீதி நெடுகிலும் உள்ள சாய்வுகளை முகாமை செய்வதற்கான அவற்றின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும், உரிய நேரங்களில் மண்சரிவு எச்சரிக்கைகளை வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளன. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட வழிகாட்டல்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மலைப்பாங்கான பிராந்தியங்களிலுள்ள ஏழு மாவட்டங்களின் தேசிய வீதிச் கருத்திட்டங்களில் நடைமுறைப்படுத்தும். எவ்வாறாயினும் அவர்கள் மண்சரிவு அனர்த்த முகாமையில் அதிக அனுபவம் கொண்ட சர்வதேச ஆலோசகர்களின் உதவியைப் பெறுவதற்கும் அவர்களுடைய தொழில்நுட்ப ஆற்றல்களை விருத்தி செய்வதற்கும் செலவு மற்றும் திறன் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் எதிர்பார்க்கிறார்கள்.

இக்கருத்திட்டத்திற்கான மொத்தச் செலவு 9,590 மில்லியன் ஜப்பானிய யென்கள் என மதிப்பிடப்பட்டிருந்தது. 2013 ஜுலையில் ஆரம்பிக்கப்பட்ட இக்கருத்திட்டம் 2020 ஜுலையில் பூர்த்தியடையும். இக்கருத்திட்டம் கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள 'A' தர வீதிகளை உள்ளடக்கிய மத்திய மலைநாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் உயர் நிலப் பிரதேசங்களில் உள்ள 'A' தரத்து தேசிய வீதிகளை இலக்காகக் கொண்டு பொருத்தமான நடவடிக்கைகளின் மூலம் மண்சரிவு

அனர்த்தங்களைத் தவிர்ப்பதும் அதன் மூலம், வீதி வலையமைப்பின் பாதுகாப்பை மேம்படுத்தி அவற்றின் ஓரங்களில் வசிப்பவர்களைப் பாதுகாப்பதாகும். இத்திட்டத்தின் கீழ் மண்சரிவுகளைத் தடுப்பதற்கான ஜப்பானியத் தொழில்நுட்பம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மண்சரிவு அனர்த்த பாதுகாப்புச் கருத்திட்டம் பின்வரும் 06 ஆலோசனை சேவை நடவடிக்கைகளையும் மற்றும் சிவில் வேலை ஒப்பந்தங்களையும் உள்ளடக்கியுள்ளது. பொதி 1 இற்கான சிவில் வேலை ஸ்டேட் டெவலப்மென்ட் அன்ட் கென்ஸ்ரெக்சன் கோப்பரேசன் (SD & CC) நிறுவனத்திற்கும் பொதி 2 இற்கான சிவில் வேலை ஒப்பந்தம் ஆர்ஆர்-சொல்டெக் ஜொயின்ட் வென்சர் நிறுவனத்திற்கும் 5 மாவட்டங்களில் 16 பிரதேசங்களை உள்ளடக்குமாறு அளிக்கப்பட்டுள்ளன. சிவில் வேலை ஒப்பந்தப் பொதிகளின் முன்னேற்றத்தை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- ஒப்பந்தப் பொதி 1 – நுவரெலியா, பதுளை, கண்டி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் 10 பிரதேசங்களை உள்ளடக்குமாறு பொதி 1 காணப்படுகின்றது. அவற்றில் 07 பிரதேசங்கள் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்திருந்தன. இப்பொதிக்கான சிவில் வேலை 2017 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொதிக்கு டிசம்பர் 31 ஆம் திகதியில் அடையப்பெற்ற பௌதீக முன்னேற்றம் 3% ஆகக் காணப்பட்டது. இது 9% ஆக அடைவதற்கு இலக்கிடப்பட்டது. எனவே இக்கருத்திட்டத்தின் இலக்கு அடைவு 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க ஏறத்தாழ 33% ஆகும். 2018 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க இப்பொதி 100% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இதில் 90% முன்னேற்றம் டிசம்பர் இறுதியளவில் அடையப்பட்டுள்ளது.

- ஒப்பந்தப் பொதி 2 –பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 06 பிரதேசங்களை உள்ளடக்குமாறு பொதி 2 காணப்படுகின்றது. அந்த 06 பிரதேசங்களில் 05 பிரதேசங்கள் பதுளை மாவட்டத்தில் அமைந்திருந்தன. இப்பொதிக்கான சிவில் வேலை 2017 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்டது. 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் அடையப்பெற்ற பௌதீக முன்னேற்றம் 38% ஆகக் காணப்பட்டது. இக்கருத்திட்டத்தின் மொத்த இலக்கு அடைவு 90% விட அதிகமானதாகும். மேலும் 31.12.2018 ஆம் திகதியளவில் இப்பொதி சுமார் 97% இலக்கினை அடைந்துள்ளதுடன் இது 68% பௌதீக முன்னேற்றத்தையும் இவ்வருடத்திற்குள் அடைந்துள்ளது.

2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஒவ்வொரு நடவடிக்கையினதும் பௌதீக முன்னேற்றத்துடனான ஆலோசனை சேவைகளின் நோக்கெல்லையை பின்வருமாறு காட்ட முடியும்.

**அட்டவணை 7.1.1 மண்சரிவு அனர்த்த பாதுகாப்புக் கருத்திட்டத்தின் கீழ் ஆலோசனை சேவைகளின் பௌதீக முன்னேற்றம்**

<table>
<tr><th>நடவடிக்கை</th><th>பௌதீக முன்னேற்றம்31/12/2017 இல் (%)</th><th>பௌதீக முன்னேற்றம் 31/12/2017 இல் (%)</th></tr>
<tr><td>முன்னெச்சரிக்கை முறைமையை தாபித்தல்</td><td rowspan="2">பூர்த்தியடைந்துள்ளது</td><td rowspan="2">பூர்த்தியடைந்துள்ளது</td></tr>
<tr><td>மண்சரிவு பாதுக்காப்பில் பெறுகை நடவடிக்கைகளில் உதவி செய்தல்</td></tr>
<tr><td>மண்சரிவு பாதுக்காப்பிற்கான நிர்மாண மேற்பார்வை</td><td>75</td><td>83</td></tr>
<tr><td>திறன் அபிவிருத்தி</td><td>60</td><td>70</td></tr>
<tr><td>மண்சரிவு தொடர்பான ஆய்வு, கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு</td><td rowspan="2">பூர்த்தியடைந்துள்ளது</td><td rowspan="2">பூர்த்தியடைந்துள்ளது</td></tr>
<tr><td>விரவான வடிவமைப்புச் செயன்முறை</td></tr>
</table>

ஊவா, மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களில் 30 இடங்களில் தானியங்கி மழை மானி முறையைப் பொருத்துதல் மூன்றாம் காலாண்டில் பூர்த்திசெய்யப்பட்டது. மென்பொருள் நிறுவுதல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறை, மழை மானி வலையமைப்பை தாபித்தல் ஆகிய செயற்பாடுகள் 2016 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த செயன்முறையும் பௌதீக ரீதியாக பூர்த்திசெய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் பெறுகை நடவடிக்கைகளில் உதவிச் செயன்முறை பூர்த்தியடைந்துள்ளதுடன் இது 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 95% பூர்த்தியடைந்திருந்தது. விரிவான வடிவமைப்பு செயன்முறை 2015 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டது. மண்சரிவு பாதுகாப்பிற்கான நிர்மாண மேற்பார்வை மற்றும் திறன் அபிவிருத்தி செயன்முறைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே 75% மற்றும் 60% பௌதீக முன்னேற்றத்துடன் நடைபெற்று வருவதுடன் அவை 2018 ஆம் ஆண்டில் முறையே 83% மற்றும் 70% ஆகும்.

மண்சரிவு அனர்த்த பாதுகாப்புக் கருத்திட்டத்தின் திட்டவரைவு ***பின்னிணைப்பு - 18*** இல் காட்டப்பட்டுள்ளன.

இக்கருத்திட்டத்தினால் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அடையப்பெற்ற மொத்த பௌதீக முன்னேற்றம் 28% இது 31.12.2018 இல் 84% ஆகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. மேற்கூறியவாறு மொத்த பௌதீக முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும் 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்குள் இந்நடவடிக்கைகள் தனியாக இலக்கிடப்பட்டமையால் செயற்பாட்டுத் திட்டத்துடன் இதனை ஒப்பீட்டளவில் வெளிப்படுத்த முடியாதுள்ளது. 31.12.2018 ஆம் திகதியளவில் அடையப்பெற்ற நிதி முன்னேற்றத்தின் விகிதம் 99% ஆகவும் 2017 ஆம் ஆண்டின் நிதி முன்னேற்றம் 66% ஆகவும் காணப்பட்டுள்ளது. எனவே 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க இக்கருத்திட்டம் ஒப்பீட்டளவில் அதிக நிதி முன்னேற்றத்தை பூர்த்தி செய்துள்ளது.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **117-02-07-13** | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1,200.0 | 3082.0 | 3058.2 |
| | **மொத்தம்** | 1,200.0 | 3082.0 | 3058.2 |



**பதுளை தளக் காட்சி - A 005**



**வோல்ஹபுதென்ன முன்பக்க தளக் காட்சி– A004**

## 8.0 கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

கடந்த சில வருடங்களாக, 'மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்' என முன்னர் பெயரிடப்பட்ட கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இலங்கையின் வீதித் துறையில் ஒரு முக்கிய அம்சமாக மாறியுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டம் கிராமிய வீதிகள் தேவைப்பாடுகளின் சரியான புரிந்துணர்வுடன் புதிய முறைமையியலைப் பின்பற்றி 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இயந்திரமிடல், கிரவல் இடல், கற்கலிட்டு தார் இடல் மற்றும் கொங்கிறீட் பரவுதல் ஆகியவை மூலம் குறைந்த நீளம் கொண்ட கிராமிய வீதிகளை (இலங்கை வீதியின் மொத்த நீளத்தில்72% கிராமிய வீதிகள்) அபிவிருத்தி செய்வதற்கு 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. வீதிகளின் தரத்தினை கருத்திற்கொண்டு இன்டர்லொக்கிங் கற்கள் பரவுதலை அறிமுகப்படுத்தி 2009 ஆம் ஆண்டில் இது விரிவு படுத்தப்பட்டது. **"கிராமிய வீதி மீள்எழுச்சி நிகழ்ச்சித்திட்டம்"** என்ற கோட்பாடு குறிப்பிடத்தக்களவில் கிராமப் புறங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்தி கிராமிய இணைப்பை மேம்படுத்துகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கிராமிய அபிவிருத்தித் தேவைப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி சிறப்பான திட்டமிடலுடன் கிராமிய வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும். கிராமிய வீதிகளைத் தெரிவு செய்யும் விடயத்தில் அதிகமான துணை வீதிகளுக்கும் பொது இடங்களுக்கும் செல்வதற்குப் பயன்படுத்தப்படும், கிராமப் பிரதேசங்களில் வாழும் அதிகமான குடும்பங்களுக்குப் பயனளிக்கும் கிராமிய வீதிகளுக்கு அதி உயர் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. கிராம சேவகர் பிரிவுகளில் அனுமதியளிக்கப்பட்ட சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கூடாக வீதி அபிவிருத்தி கருத்திட்டங்கள்தெரிவு செய்யப்படினும், இக்கருத்திட்டத்திலிருந்து நேரடியாக கிராமிய சமூகம் பயனடைகின்றது. பின்வருவன இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

- உயர் தரத்திலான கிராமிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அபிவிருத்தித் முன்னுரிமைத்தேவைப்பாடுகளை கவனத்திற் கொண்டு தெரிவுசெய்யப்படும் கிராமிய வீதித் தொகுதியை அபிவிருத்தி செய்தல்.
- கிராமிய சமுதாயங்களின் நாளாந்த வாழ்க்கையில் நேரடியாகத் தாக்கம் செலுத்தும் மிகக் கஷ்டமான கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்தல்.
- கிராமிய மட்டத்தில் புதிய தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல் (மூலப் பொருள் வழங்குநர்கள், கொங்கிரீட் அச்சுக் கல் உற்பத்தியாளர்கள்)

- கிராமிய சமுதாய நிறுவனங்களின் மூலம்கிராமிய ஊழியர்களை அபிவிருத்திப் பணிகளை நடைமுறைப்படுத்துவதில் பயன்படுத்தல் வாய்ப்பாக அமைதல்.
- கிராமிய சமுதாயங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதிகளை கற்கலிட்டு தார் இடல், வீதிகளை கிரவல் இடல், வீதிகளுக்கு இயந்திரமிடல், வீதிகளின் நில வேலைகள், வீதிகளுக்கு கொங்கிறீட் இடல், வீதிகளுக்கு கொங்கிறீட் கற்கள் பதித்தல் ஆகிய வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. வீதி வேலைகளைத் தவிர பக்க வடிகால்கள் நிர்மாணம், தடுப்புச் சுவர்கள் நிர்மாணித்தல், பாறைகளை வெடிக்க வைத்து அகற்றுதல், கிராமிய பாலங்களை நிர்மாணித்தல், மதகுகளை நிர்மாணித்தல் மற்றும் உயர்த்தப்பட்ட பாதைகள் (causeways) போன்ற கட்டமைப்புகளின் நிர்மாணமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## 8.1 கிராமிய வீதி மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்

கிராமிய வீதி மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் 2017 ஆம் ஆண்டில் பின்வரும் பிரதான ஆக்கக்கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டன:

I. அச்சுக் கற்கள் பதித்தல்
II. கொங்கிரீட் இடுதல்
III. கல்இட்டு தார்பூசுதல்
IV. பக்க வடிகால்களும் பக்கச் சுவர்களும் நிர்மாணித்தல்

2017 ஆம் ஆண்டில் 3176 கருத்திட்டங்கள் அனுமதியளிக்கப்பட்டு அவற்றில் 1358 கருத்திட்டங்கள் இவ்வருடத்தினுள் பூர்த்திசெய்ய முடியுமாயிருந்தன. இதன் கீழ் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இலக்கிடப்பட்ட 328.3 கி.மீற்றரிலிருந்து கிராமிய வீதிகளின் மொத்த நீளம் 115.86 கி.மீ மொத்தமாக அபிவிருத்தி செய்யப்பட்டன. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற மொத்த இலக்கு 50% ஆகும். 2016ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட மொத்த நீளம் 157 கி.மீற்றரிலிருந்து கிராமிய வீதிகள் 87.64 கி.மீற்றர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற நடவடிக்கைகளைத் தவிர 2018 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான மதகுகளை நிர்மாணித்தல் வேலைகள் நடைபெற்று

வந்துள்ளதுடன் வருடத்தின் இறுதியில் மொத்தம் 13 மதகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் 2585 கருத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 1333 இவ்வருடத்திற்குள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இலக்கிடப்பட்ட 250 கி.மீ வீதி நீளத்தில் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 167.33 கி.மீ மேம்படுத்தப்பட்டுள்ளன. இது 67% இலக்கு அடைவாகும். எனவே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கு அடைவு 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் அதிகமாகும்.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்புகளை பின்வருமாறு காட்டலாம்.

**அட்டவணை 8.1.1 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்புகளின் ஒப்பீடு**

| வருடம் | பக்க வடிகால்கள் (கி.மீ) | தடுப்புச் சுவர்கள் (மீ2) | மதகுகள் |
|---|---|---|---|
| **2016** | 0.13 | 51.0 | None |
| **2017** | 0.43 | 114.0 | 1 |
| **2018** | 0.43 | 516.32 | 13 |

தடுப்புச் சுவர்களையும் மதகுகளையும் நிர்மாணித்தல் 2018 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பக்க வடிகால்களை அமைத்தல் 2017 ஆம் ஆண்டைப் போலவே காணப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க, காலாண்டில் அடைந்த ஒட்டுமொத்த இலக்கு பின்வருமாறு.

**அட்டவணை 8.1.2- 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க அடையப்பெற்ற இலக்கு**

| | 2017 | | | | | 2018 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Q1 | Q2 | Q3 | Q4 | மொத்தம் | Q1 | Q2 | Q3 | Q4 | மொத்தம் |
| **இலக்கு** | 8% | 12% | 34% | 46% | 100% | 10% | 20% | 30% | 40% | 100% |
| **அடைவு** | 8% | 1% | 5% | 36% | 50% | 40% | 9% | 1% | 17% | 67% |

2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க, அதிகூடிய இலக்கு அடைவு மட்டம் முதலாம் காலாண்டிற்குள் பதியப்பட்டுள்ளதுடன் அது 100% ஆகும்.ஆகக்குறைந்த இலக்கு அடைவு மட்டம் இரண்டாம் காலாண்டில் பதியப்பட்டுள்ளதுடன் அது 8% ஆகும்.

2018 ஆம் ஆண்டில், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கு அடைவு மேலே காலே காட்டப்பட்டுள்ளது. அவற்றில் ஆகக்கூடுதலான இலக்கு ஆண்டின்முதலாம் காலாண்டிலும் மிகக் குறைவான இலக்கு மூன்றாம் காலாண்டிலும் அடையப்பட்டுள்ளது. புனரமைப்பதற்காக இலக்கிடப்பட்ட வீதியின் நீளங்களுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்தினால் அடையப்பட்ட இலக்கு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.




**உரு 8.1 – 2018 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டத்தின் புனரமைத்தல் வேலைக்காக அடையப்பட்ட இலக்கு**

## 8.2 கிராமிய வீதி மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்

இந்நிகழ்ச்சித்திட்டத்தினால் அடையப்பெற்ற முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் அசல் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடானது வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கூடாக ஒதுக்கீட்ட நிதிகளிலிருந்தும் வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடுகளிலிருந்தும் இவ்வருடத்தில் இரு தடவைகள் திருத்தம் செய்யப்பட்டன. எனவே ஒதுக்கீடு இ.ரூ.1,600.3 மில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 50% இற்கும் அதிகமாகும்.

ஒதுக்கீட்டிற்கு எதிராக செலுத்தப்பட்ட தொகை தொடர்பாக 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அடையப்பெற்ற மொத்த நிதி முன்னேற்றம் முறையே 64% மற்றும் 46% ஆகக்

காணப்படுகின்றன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கீட்டிற்கு எதிராக அறிக்கையிடப்பட்ட வேலை தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற மொத்த நிதி முன்னேற்றம் 69% ஆகும்.ஒதுக்கீட்டிற்கு எதிராக அறிக்கையிடப்பட்ட வேலை தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற மொத்த நிதி முன்னேற்றம் 84% ஆகும். 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க, முதலாம் காலாண்டு, இரண்டாம் காலாண்டு, மூன்றாம் காலாண்டு மற்றும் நான்காம் காலாண்டுகளில் அடையப்பெற்ற நிதி இலக்கு முறையே 91%, 13%, 17% மற்றும் 69% ஆகும். இது 2018 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே 53%, 8%, 5% மற்றும் 11% ஆகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தினால் அடையப்பெற்ற மொத்த நிதி முன்னேற்றம் 2018 ஆம் ஆண்டில் 18% இனால் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற மொத்த நிதி முன்னேற்றம் பின்வருமாறு.

**31/12/2018 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம்**

| வரவுசெலவுத் திட்டக் குறியீடு | விடயம்/வகை விபரம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 (ரூபா மில்லியன்) | திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 31/12/2018 ஆம் திகதியில் (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 117-02-09-01 | 2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1,500.0 | 3,100.3 | 2,003.8 |
| | **மொத்தம்** | **1,500.0** | **3,100.3** | **2,003.8** |



**வவுனியா – வவுனியா தெற்கு – மணிப்புரச் சந்தி வீதி**



**இரத்தினபுரி –ஒபநாயக்க – தெனியாய – அம்பேகஹதென்ன வீதி வரையில்**

## 9.0 முன்னேற்ற மீளாய்வு

கடந்த தசாப்தத்தை கருத்திற்கொள்கையில், 2017 மற்றும் 2015ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் 2018 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைகள் துறைக்கு அதிகபட்ச வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் துறையின் முதலீடு மற்றும் செலவினம் தொடர்பான மேலதிக தெளிவுபடுத்தல் ***பின்னிணைப்பு -19*** இல் அவதானிக்க முடியும்.

2017ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றத்துடன் 2018ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைகள் துறையின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

### 9.1. நிதி முன்னேற்றம்

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நெடுஞ்சாலைகள் துறையானது 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான மூலதன வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி, கடுகதிப்பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் நிர்மாணம், வீதிகளை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல், அவசர உதவி நிகழ்ச்சித்திட்டம், கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆகிய 6 முக்கியமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

**உரு 9.1.1 ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்–நெடுஞ்சாலைகள் துறை**



நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நெடுஞ்சாலைகள் துறைக்கு 2018 ஆம் ஆண்டுக்காக 196,318.42 மில்லியன் இ.ரூபா (திருத்தப்பட்ட ஒதுக்கீடு) ஒதுக்கப்பட்டது. அதில் 85% குறித்த வருடத்தில் பயன்படுத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டில் 93% பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மொத்த செலவினம்192,039.10 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. நெடுஞ்சாலைகள் துறைக்கான ஏற்பாடு 2017 ஆம் ஆண்டை விடவும் குறைவாகவும் 2016 ஆம் ஆண்டை விடவும் அதிகமாகக் காணப்பட்டது. செலவினமும் அவ்வாறே காணப்பட்டது. கடந்த கால தசாப்தங்களைக் நோக்குகையில், நெடுஞ்சாலைகள் துறைக்கு அதிக ஏற்பாடும் அதிக செலவினமும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் 85% நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டில் அதை விட அதிகமாக 93% அடையப்பட்டுள்ளது.

**அட்டவணை 9.1.1. 31/12/2018 இல் உள்ளவாறான ஒப்பிய பொறுப்பு மிகுதி மற்றும் செலுத்தப்படாமலுள்ள விலைப்பட்டியல்கள்**

| நிதி மூலம் | ஒப்பிய பொறுப்பு மிகுதி இ.ரூ.மில்லியன் | செலுத்தப்படாமலுள்ள விலைப்பட்டியல்கள் மிகுதி இ.ரூ.மில்லியன் |
|---|---|---|
| **உள்நாட்டு நிதிகள் ( 11/17)** | 59,988.58 | 36,956.55 |
| **வெளிநாட்டு நிதிகள்(12)** | 71,266.13 | 49,943.77 |
| **வெளிநாட்டுடன் தொடர்புடைய நிதிகள் (14/18)** | 218.35 | 269.70 |
| **மொத்தம்** | 131,473.05 | 87,170.02 |

புதிய களணிப் பாலத்திலிருந்து அத்துறுகிரிய வரையிலானநிலமட்டத்திற்கு மேலானநெடுஞ்சாலை, துறைமுக அணுகுகை நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை கருத்திட்டம், பேஸ்லைன் நீடிப்பு மற்றும் கடலோர வீதியை பாணந்துறை வரையில் நீடித்தல் போன்ற சில அபிவிருத்திக் கருத்திட்டங்களின் வேலைகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன. எனவே இக்கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் முழுவதும் இவ்வாண்டில் பயன்படுத்தப்படவில்லை. நெடுஞ்சாலைகள் துறைக்காக 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட அசல் வரவு செலவுத்திட்ட மதிப்பீடானது (இ.ரூ.136,263மில்லியன்) வருடத்தின் இறுதியில் 44% இனால் அதிகரிக்கப்பட்டது.

எனவே, நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நெடுஞ்சாலைகள் துறையானது அசல் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுடன் 2018 ஆம் ஆண்டில் 100% நிதி முன்னேற்றத்தை அடைந்திருந்தது. வரவு செலவுத்திட்ட ஏற்பாடு இ.ரூ.125,263.3 இற்கு மேலதிகமாக வரவு செலவுத்திட்டத்தினூடாக இவ்வமைச்சின் நெடுஞ்சாலைகள் துறைக்கு மேலும் இ.ரூ.11 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் மேலதிக ஒதுக்கீடும் (ஏறத்தாழ இ.ரூ.30 பில்லியன்) குறைநிரப்பு ஒதுக்கீடும் (இ.ரூ.30 பில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்து ஒதுக்கீடுகளுடன் நெடுஞ்சாலைகள் துறைக்கு 2018 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடு இ.ரூ.196,318.38 மில்லியன் ஆகும்.

**உரு 9.1.2 2018 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் உள்ளடக்கம் - நெடுஞ்சாலைகள் துறை**




## 9.1.1. தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் 3 வகைகள்/ விடயங்கள் உள்ளன. அவையாவன

- அமைச்சர் அலுவலகத்தின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

➢ இராஜாங்க அமைச்சர் அலுவலகத்தின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

➢ அமைச்சின் பொது நிர்வாகப் பிரிவின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் நிதி முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 9.1:2 தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் நிதி முன்னேற்றம்**

| தலைப்பு விபரம் | விடயம் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில். | செலவினம் (ரூபா மில்லியன்) | நிதி முன்னேற்றம் % | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில். | செலவினம் (ரூபா மில்லியன்) | நிதி முன்னேற்றம் % |
| 117-1-1 | அமைச்சர் அலுவலகம் | 70.94 | 66.97 | 94% | 27.82 | 24.79 | 89% |
| 117-1-11 | இராஜாங்க அமைச்சரின் அலுவலகம் | 27.17 | 26.42 | 97% | 25.79 | 23.85 | 92% |
| 117-1-2 | அமைச்சின் பொது நிர்வாகம் | 229.42 | 184.67 | 80% | 220.63 | 188.31 | 85% |
| | மொத்தம் | **327.53** | **278.06** | **85%** | **274.24** | **236.95** | **86%** |

அமைச்சர் அலுவலகம், இராஜாங்க அமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சின் பொது நிர்வாகம் ஆகிய மூன்று அலுவலகங்களினதும் தொழிற்பாடுகளை இவ்வருடத்தில் வெற்றிகரமாக் கொண்டு நடத்துவதற்கு மேற்கூறிய இவ்வேற்பாடுகளே பயன்படுத்தப்பட்டன. இவ்வேற்பாடுகள் மூலதனம் மற்றும் மீண்டுவரும் ஆகிய இரு பிரதான வகைகளைக் கொண்டுள்ளது. பொதுவாக, மூலதன ஏற்பாடு புனரமைத்தல், மேம்படுத்தல் மற்றும் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காகவும் மீண்டுவரும் ஏற்பாடுகள் தனியாள் ஊதியங்கள், போக்குவரத்து செலவினங்கள், விநியோகங்கள், பராமரிப்பு மற்றும் குறித்த வருடத்தில் ஏற்படுகின்ற மற்றைய மீண்டுவரும் செலவினங்கள் ஆகியவற்றுக்காக வழங்கப்படுகின்றன.

எப்போதும், அமைச்சினதும் அதன் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களினதுசமூகமானதும், செயற்றினானதும் மற்றும் வினைத்திறனானதுமான செயற்பாடுகளின் பொருட்டு அதன் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளுக்கு அதிக பங்கு அமைச்சுக்கு வழங்கப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டின்

ஏற்பாடுகள் குறைவாகக் காணப்படினும் பயன்பாட்டு விகிதம் அதிகமானதாகும். ஆனால், இவ்வாண்டின் குறைவான செலவினம் செலவு முகாமைத்துவத்தை நிரூபித்து காண்பிக்கின்றது.

### 9.1.2. அபிவிருத்திச் செயற்பாடுகள்

அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழ் 7 வகைகள்/ விடயங்கள் உள்ளன. அவையாவன

- கடுகதிப்பாதைகள் அபிவிருத்தி
- நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி
- வீதிகளை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல்
- பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் நிர்மாணம்
- இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வீதிகளின் புனரமைப்பு
- நிறுவனம் சார் ஒத்துழைப்பு
- கிராமிய வீதி அபிவிருத்தி

### அ. கடுகதிப்பாதைகள் அபிவிருத்தி

2018 ஆம் ஆண்டில் 07 கருத்திட்டங்களுக்கு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட வேளையில் கடுகதிப்பாதைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் 09 கருத்திட்டங்களுக்கு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. கடுகதிப்பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2018மற்றும்2017ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் முறையே78% மற்றும் 96% ஆகக் காணப்பட்டன. கட்டுநிதி பற்றாக்குறை காரணமாக வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2018 ஆம் ஆண்டில் 18% குறைக்கப்பட்டது. ஒதுக்கீடு வழங்கப்பட்ட போதிலும், கட்டுநிதி உரிய நேரத்தில் வழங்கப்படவில்லை. வெளிநாட்டு நிதியளித்தலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக குறைவான செலவினம் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் கையில் விலைப்பட்டியல்களில் கணிசமானளவு தொகை காணப்படுகின்றது. இவ்வருடத்தில் போதுமானளவு கட்டுநிதி மற்றும் IPC அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பின் நிதி முன்னேற்றம் அதிகமான பெறுமதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கும்.

**அட்டவணை 9.1.3. – கடுகதிப்பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த நிதி முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் | 2017 ஆம் ஆண்டு நிதி முன்னேற்றம் | | | 2018 ஆம் ஆண்டு நிதி முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | செலவினம் ரூபா. மில்லியன் | முன்னேற்றம் % | ஒதுக்கீடு ரூபா. மில் | செலவினம் ரூபா. மில்லியன் | முன்னேற்றம் % |
| கடுகதிப்பாதைகள் அபிவிருத்தி | 82984.10 | 79429.20 | 96% | 78627.25 | 61454.94 | 78% |

நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 7 கருத்திட்டங்களில் 6 கருத்திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வருவதுடன் வெளிச் சுற்றுவட்ட நெடுஞ் சலைக் கருத்திட்டம் – II மட்டும் பூர்த்தி செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டில் விலைப்பட்டியல்களைச் செலுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

**அட்டவணை 9.1:4 - கடுகதிப்பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

| தலைப்புக் குறியீடு | கருத்திட்டத்தின் பெயர் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % |
| 117-2-3-5 | வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை கருத்திட்டம் II - ஜெய்கா | 450.00 | 432.00 | **96%** | 392.00 | 376.63 | **96%** |
| 117-2-3-7 | மத்திய கடுகதிப் பாதை கருத்திட்டம் | 2,861.70 | 2016.30 | **70%** | 7,907.00 | 7,676.00 | **97%** |
| 117-2-3-9 | தென் கடுதிப்பாதை நீடிப்புக் | 66,600.4 | 65,657.60 | **99%** | 52,709.5 | 40,019.94 | **76%** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 117-2-3-10 | கடவத்தை முதல் கெரவலப்பிட்டி வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை (இலங்கை அரசாங்கம் - சீனா) | 12,663.0 | 11,126.40 | **88%** | 17,385.0 | 13,223.59 | **76%** |
| 117-2-3-13 | கொழும்பு - இரத்தினபுரி - பல்மடுல்லை கடுகதிப்பாதை | 100.00 | 92.10 | **92%** | 90.00 | 75.30 | **84%** |
| 117-2-3-15 | புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துறுகிரிய வரையில் நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை | 186.80 | 26.80 | **14%** | 111.75 | 53.03 | **47%** |
| 117-2-3-16 | துறைமுக அணுகுகை நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை | 45.30 | 24.40 | **54%** | 32.00 | 30.45 | **95%** |
| | **மொத்தம்** | **82,984.1** | **79,429.20** | **96%** | **78,627.25** | **61,454.94** | **78%** |

2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள், மேலதிக ஒதுக்கீடு, குறைநிரப்பு வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றினூடாக 07 கருத்திட்டங்களுக்கு இ.ரூ.78,627.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம் 78% இனை அடைந்துள்ளது. புதிய களணிப் பாலத்திலிருந்து ராஜகிரிய ஊடாக அத்துறுகிரிய வரையிலான நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை கருத்திட்டத்தின் சிவில் வேலை 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படாமையினால் இக்கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் மிகக்குறைவானதாக அவதானிக்கப்பட்டது. இக்கடுப்பாதையைத் தவிர மற்றைய எல்லாக் கருத்திட்டங்களும் 50% இற்கும் அதிகமான நிதி முன்னேற்றத்தை அறிக்கையிட்டுள்ளதுடன் தென்பிராந்திய கடுகதிப்பாதையின் மற்றைய எல்லா நான்கு பிரிவுகளினதும் சிவில் வேலைகள் நிறைவடையும் தருவாயிலும் சிறப்பாக செயற்படுவதினாலும் தென்பிராந்திய கடுகதிப்பாதை நீடிப்புக் கருத்திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் மிகக்கூடிய செலவு ஏற்பட்டுள்ளது.

## ஆ. நெடுஞ்சாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டின் கீழ் 2017ஆம் மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 26 கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கான மொத்த ஒதுக்கீடு 2017ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளது.

**அட்டவணை 9.1.5- நெடுஞ்சாலைகள் அபிவிருத்தியின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் | 2016நிதி முன்னேற்றம் | | | 2017நிதி முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன் | முன்னேற்றம் % | ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன் | முன்னேற்றம் % |
| நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி | 80,994.1 | 76,589.2 | 95% | 79,201.60 | 72,218.51 | 91% |

2018 ஆம் ஆண்டில் 25 கருத்திட்டங்களில் 5 குறித்த வருடத்தில் தரப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளையும் பயன்படுத்தியுள்ளதுடன் மற்றைய 12 கருத்திட்டங்கள் 80% இற்கும் அதிகமான நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளன. எஞ்சியவற்றில் 6 கருத்திட்டங்கள் 80% இற்கும் அதிகமான நிதி முன்னேற்றத்துடன் நடைபெற்று வருகின்றன.

4 கருத்திட்டங்கள் மட்டும் 50% இற்கும் குறைவான நிதி முன்னேற்றத்தை காட்டியுள்ளது. நீதமன்ற உத்தரவு காரணமாக வருடத்தின் முதல் சில மாதங்களில் பேஸ்லைன் நீடிப்புக் கருத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதன் காரணமாக இக்கருத்திட்டம் மிகக் குறைவான நிதி முன்னேற்றத்தை கொண்டுள்ளது. நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 6 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டன. வீதிகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் (RMTF), போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் வீதிப் பாதுகாப்பு, பாரிய கொழுப்பு பிரதேசத்தில் போக்குவரத்து முகாமைத்துவம், அரசாங்க உத்தரவாதம் பெற்ற உள்ளூர் வங்கிகளால் நிதியளிக்கப்படும் வீதி புனரமைத்தல் கருத்திட்டம், பூர்த்தியடைந்துள்ள மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கருத்திட்டங்களுக்கான காணி சுவீகரித்தல் நடவடிக்கைகள், ஆராய்ச்சியும் அபிவிருத்தியும், ஆய்வு மற்றும் முதலீடு, பயிற்சி ஒதுக்கீடுகள் 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டில் ஏற்பாடுகளும் செலவினங்களும் குறைவாகும். ஆனால், கட்டுநிதியைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் காணப்படுவதினால் நிதி முன்னேற்றம்

பாதிப்படைந்துள்ளது. எனவே, போதுமானளவு கட்டுநிதி கிடைக்கப்பெற்றிருப்பின் செலவினம் இதனை விட அதிகரித்திருக்கும்.

**அட்டவணை 9.1.6- நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிதி முன்னேற்ற கருத்திட்டங்கள்**

| தலைப்பு இல. | கருத்திட்டத்தின் பெயர் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில்லியன். | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % |
| 117-2-4-1 | வீதிகளினதும் பாலங்களினதும் பராமரிப்பு (RMTF) | 4,000.00 | 3,638.60 | 91% | 5,385.00 | 4,360.00 | 81% |
| 117-2-4-10 | பேஸ் லைன் விரிவாக்கம்– கட்டம் 3 | 25.00 | 15.60 | 62% | 105.00 | 10.85 | 10% |
| 117-2-4-13 | பாதெனிய அநுராதபுர வீதி | 5.00 | 5.00 | 100% | 1.00 | 1.00 | 100% |
| 117-2-4-18 | ஹட்டன் - நுவரெலியா வீதி - EDCF | 50.70 | 18.50 | 36% | 30.60 | 30.60 | 100% |
| 117-2-4-21 | வாகனப் போக்குவரத்து முகாமை மற்றும் வீதிப் பாதுகாப்பு | 25.00 | 8.50 | 34% | 19.00 | 16.36 | 86% |
| 117-2-4-22 | பாரிய கொழும்புப் பிரதேசத்தில் வாகனப் போக்குவரத்து முகாமை | 25.00 | 25.00 | 100% | 41.50 | 37.44 | 90% |
| 117-2-4-23 | பதுளை முதல் செங்கலடி வரையிலான பேராதனை - பதுளை வீதி (அபிவிருத்திக்கான சவுதி நிதியம்) | 1.50 | 1.30 | 87% | 1,215.00 | 694.58 | 57% |
| 117-2-4-28 | தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் கருத்திட்டம் (துணைக் கடன்- ஆசிய அபிவிருத்தி வங்கி) | 284.50 | 280.70 | 99% | 100.00 | 100.00 | 100% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 117-2-4-29 | வீதி வலையமைப்பு அபிவிருத்திச் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம்-அபிவிருத்திக்கான சவுதி நிதியம்) | 426.20 | 406.20 | 95% | 163.25 | 47.70 | 29% |
| 117-2-4-30 | வடபிராந்திய வீதி இணைப்பு கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம்-ஆ.அ.வ.) | 706.00 | 584.65 | 83% | 828.00 | 708.57 | 86% |
| 117-2-4-31 | வீதி வலையமைப்பு அபிவிருத்திச் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்) | 309.60 | 181.10 | 58% | 275.00 | 145.51 | 53% |
| 117-2-4-32 | கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்) | 2,067.30 | 2,003.12 | 97% | 1,661.00 | 1,461.06 | 88% |
| 117-2-4-39 | முன்னுரிமை வீதி கருத்திட்ட விரிவாக்கம் (இலங்கை அரசாங்கம் - CDB) | 7,900.00 | 7,611.60 | 96% | 3,465.00 | 3,420.91 | 99% |
| 117-2-4-40 | மேல் மாகாண தேசிய நெடுஞ்சாலைச் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்) | 457.30 | 32.40 | 7% | 1,222.70 | 1,022.50 | 84% |
| | பேராதனை – பதுளை வீதியில் பதுளையிலிருந்து செங்கலடி வரை (இலங்கை அரசாங்கம்-சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்) | 2,145.50 | 2,084.50 | 97% | 1,765.00 | 1,437.26 | 81% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 117-2-4-42 | கடுகதிப் பாதை இணைப்பு மேம்பாட்டுத் திட்டச் கருத்திட்டம் | 285.00 | 72.33 | 25% | 99.50 | 60.39 | 61% |
| 117-2-4-43 | தெற்கு வீதி இணைப்புச் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - ஆசிய அபிவிருத்தி வங்கி) | 2,215.00 | 1,789.50 | 81% | 2,829.05 | 2,473.37 | 87% |
| 117-2-4-44 | ஒருங்கிணைந்த வீதி முதலீடு (I Road) (இலங்கை அரசாங்கம் - ஆசிய அபிவிருத்தி வங்கி) | 18,837.70 | 18,544.40 | 98% | 16,559.00 | 13,933.00 | 84% |
| | மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகளையும் பாலங்களையும் அகலப்படுத்தலும் மேம்படுத்தலும் (இலங்கை அரசாங்கம், CDB - ஹூனான் கிளை) | - | - | - | 1,902.00 | 1,901.42 | 100% |
| 117-2-4-46 | முன்னுரிமை வீதிகளை புனரமைத்து மேம்படுத்துதல் கருத்திட்டம்-3 கட்டம் II (இலங்கை அரசாங்கம் - CDB) | 7,200.00 | 5,991.10 | 83% | 4,470.00 | 3,654.21 | 82% |
| 117-2-4-47 | போக்குவரத்து கருத்திட்ட தயார்படுத்தல் வசதி (இலங்கை அரசாங்கம் - ஆசிய அபிவிருத்தி வங்கி | 280.00 | 92.30 | 33% | 279.00 | 208.04 | 75% |
| 117-2-4-48 | போக்குவரத்து இணைப்பு மற்றும் ஆதன முகாமைச் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - உலக வங்கி) | 80.00 | 63.80 | 80% | 92.00 | 31.22 | 34% |
| 117-2-4-49 | கடலோர வீதியை பாணந்துறை வரை நீடித்தல் | 150.00 | 15.00 | 10% | 200.00 | 76.20 | 38% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 117-2-4-51 | அரசாங்க உத்தரவாதம் பெற்ற உள்ளூர் வங்கி நிதியளிக்கும் வீதிப் புனரமைத்தல் கருத்திட்டம் | 30,323.40 | 30,320.70 | 100% | 35,200.00 | 35,194.90 | 100% |
| 117-2-4-52 | நிறைவுபெற்ற மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கருத்திட்டங்களுக்கான காணி சுவீகரித்தல் | 2,350.00 | 2,230.30 | 95% | 1,145.00 | 1,089.44 | 95% |
| 117-2-4-53 | இயந்திரம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அளவை மற்றும் முதலீடு, பயிற்சி | 100.00 | 51.50 | 52% | 149.00 | 101.98 | 68% |
| | **மொத்தம்** | **80,249.70** | **76,067.70** | **95%** | **79,201.60** | **72,218.51** | **91%** |

பௌதீக ரீதியில் சில கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செலுத்தும் செயன்முறைகள் மாத்திரம் 2018 ஆம் ஆண்டில் எஞ்சியிருந்த சில கருத்திட்டங்களும் காணப்பட்டன. அவையாவன

- தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் கருத்திட்டம்
- பாதெனிய அநுராதபுரம் வீதி புனரமைத்தல் கருத்திட்டம்
- ஹட்டன் - நுவரெலியா வீதி - பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம்
- வடக்கு வீதி இணைப்புச் கருத்திட்டம் - ஆசிய அபிவிருத்தி வங்கி
- வீதி வலையமைப்பு அபிவிருத்திச் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம்-அபிவிருத்திக்கான சவுதி நிதியம்)
- வடபிராந்திய வீதி இணைப்புக் கருத்திட்டம் - குறைநிரப்பு (இலங்கை அரசாங்கம் - ஆசிய அபிவிருத்தி வங்கி)
- வீதி வலையமைப்பு அபிவிருத்திச் கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்)

## இ. வீதிகளை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல்

2018 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் பின்வருமாறு.

**அட்டவணை 9.1.7. அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் | 2017 நிதி முன்னேற்றம் | | | 2018 நிதி முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | செலவினம். ரூபா மில்லியன் | முன்னேற்றம் % | ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | செலவினம். ரூபா மில்லியன் | முன்னேற்றம் % |
| அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் | 10,734.4 | 9,211.5 | 86% | 10,865.00 | 7,558.99 | 70% |

இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் இ.ரூ.10 பில்லியனுக்கும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவுப் பெறுமதியின் காரணமாக 2018 ஆம் ஆண்டின் நிதி முன்னேற்றம் குறைவடைந்துள்ளது. ஆனால், 2018 ஆம் ஆண்டின் இறுதியில் கையில் விலைப்பட்டியல்கள் காணப்படுகின்றன. இவ்வருடத்தில் விலைப்பட்டியல்களைச் செலுத்துவதற்கு போதுமான கட்டுநிதி வழங்கப்படவில்லை.

**அட்டவணை 9.1.8 அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் மாகாண மட்டத்திலான நிதி முன்னேற்றம்**

| தலைப்புக் குறியீடு | கருத்திட்டத்தின் பெயர் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா.மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா.மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % |
| 117-2-5-01,2,3 | மேல் மாகாணம் | 1,361.67 | 990.18 | 73% | 2,217.00 | 756.99 | 34% |
| 117-2-5-04,5,6 | மத்திய மாகாணம் | 534.70 | 436.13 | 82% | 1,018.00 | 473.51 | 47% |
| 117-2-5-07,8,9 | தென் மாகாணம் | 734.30 | 647.43 | 88% | 914.00 | 559.25 | 61% |
| 117-2-5-10, 11,12,13,14 | வட மாகாணம் | 1,003.65 | 975.17 | 97% | 807.00 | 592.88 | 73% |
| 117-2-5-15,16,17 | கிழக்கு மாகாணம் | 367.30 | 367.30 | 100% | 318.00 | 284.27 | 89% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 117-2-5-18, 19 | வடமேல் மாகாணம் | 665.01 | 607.79 | 91% | 759.10 | 595.35 | 78% |
| 117-2-5-20,21 | வடமத்திய மாகாணம் | 666.29 | 666.29 | 100% | 587.90 | 494.13 | 84% |
| 117-2-5-22,23 | ஊவா மாகாணம் | 264.86 | 231.67 | 87% | 319.00 | 177.83 | 56% |
| 117-2-5-24,25 | சப்ரகமுவ மாகாணம் | 325.00 | 374.90 | 115% | 425.00 | 335.04 | 79% |
| 117-2-5-26 | வரி ஆக்கக் கூறு | 714.57 | 714.57 | 100% | 800.00 | 589.74 | 74% |
| 117-2-5-29 | தேசிய சேமிப்பு வங்கியினால் நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள் | 4,100.00 | 3,300.00 | 80% | 2,700.00 | 2,700.00 | 100% |
| 117-2-5-01,2,3 | **மொத்தம்** | **10,737.40** | **9,211.50** | **86%** | **10,865.00** | **7,558.99** | **70%** |

**ஈ. பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் நிர்மாணம்**

**அட்டவணை 9.1.9 பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணங்களின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் | 2017 நிதி முன்னேற்றம் | | | 2018 நிதி முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு ரூபா.மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % | ஒதுக்கீடு ரூபா.மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % |
| பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் நிர்மாணம் | 19,774.4 | 17,556.8 | 89% | 14,333.0 | 13,311.00 | 93% |

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் 11 கருத்திட்டங்களுக்கு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் நிதி முன்னேற்றம் அதிகமாக காணப்பட்ட அதேவேளையில் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் 2018 ஆம் ஆண்டில் குறைக்கப்பட்டது.

**அட்டவணை 9.1.10 பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

| தலைப்புக் குறியீடு | கருத்திட்டத்தின் பெயர் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன்). | முன்னேற்றம் % | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % |
| 117-2-6-8 | சேதமடைந்த/ பலவீனமான பாலங்களின் மீள்நிர்மாணம் | 274.00 | 224.00 | 82% | 400.00 | 243.68 | 61% |
| 117-2-6-14 | பழைய பாலங்களின் பாகங்களைப் பயன்படுத்தி கிராமியப் பாலங்களை நிர்மாணித்தல் | 300.00 | 157.00 | 52% | 343.00 | 221.20 | 64% |
| 117-2-6-16 | பிராந்திய பாலங்கள் கருத்திட்டம் ஐ.இ-11 | 981.90 | 940.90 | 96% | 346.00 | 346.00 | 100% |
| 117-2-6-17 | பாலங்களைப் புனரமைத்தல் 25 பாலங்கள் - குவைத் | 287.00 | 254.60 | 89% | 345.00 | 279.21 | 81% |
| 117-2-6-18 | 46 பாலங்களின் மீள் நிர்மாணம் (இலங்கை அரசாங்கம்- பிரான்ஸ்) | 280.00 | 272.50 | 97% | 119.00 | 118.50 | 100% |
| 117-2-6-19 | தேசிய வீதி வலையமைப்பின் பாரிய பாலங்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் (சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம்) | 2,994.50 | 2,861.60 | 96% | 2,247.00 | 2,212.24 | 98% |
| 117-2-6-20 | பேலியகொடை - புத்தளம் வீதியில் கொச்சிக்கடை பாலத்தின் நிர்மாணம் (ஒஸ்ட்ரியா) | 1,400.00 | 648.20 | 46% | 437.00 | 435.60 | 100% |
| 117-2-6-21 | இரண்டாவது புதிய களனிப் பாலம் (இலங்கை அரசாங்கம் - சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம்) | 8,750.00 | 8,015.40 | 92% | 9,160.00 | 8,525.39 | 93% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 117-2-6-22 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையினல் பாலப் பராமரிப்பு முறைமயை(BAU) தாபித்தல் - சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம் | 27.50 | 20.16 | 73% | 15.00 | 12.27 | 82% |
| 117-2-6-23 | தட்டுத்துறை தரைப் பாலத்தையும் வீதியையும் புனரமைத்தல் (அபிவிருத்திக்கான சவுதி நிதியம்) | 24.60 | 21.90 | 89% | 5.00 | 2.73 | 55% |
| 117-2-6-24 | ராஜகிரிய, பொல்கஹவலை, கணேமுல்லை ஆகிய இடங்களில் 03 மேம்பாலங்களை நிர்மாணித்தல் | 4,454.90 | 4,140.60 | 93% | 916.00 | 914.18 | 100% |
| | **மொத்தம்** | **19,774.4** | **17,556.80** | **89%** | **14,333.0** | **13,311.00** | **93%** |

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சேதமடைந்த / பலவீனமான பாலங்களை மீள்நிர்மாணித்தல், பழைய பாலங்களின் உதிரிப் பாகங்களைப் பயன்படுத்தி கிராமிய பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பாலப் பராமரிப்பு முறைமயை (BAU) தாபித்தல் ஆகிய மூன்று வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்படுகின்றன. தட்டுத்துறை தரைப் பாலத்தையும் வீதியையும் புனரமைத்தல் மற்றும் ராஜகிரிய, பொல்கஹவலை, கணேமுல்லை ஆகிய இடங்களில் 03 மேம்பாலங்களை நிர்மாணித்தல் ஆகியவற்றுக்கான விலைப்பட்டியல்களைச் செலுத்தும் செய்னமுறை 2018 ஆம் ஆண்டில் நடைபெற்று வந்தது. 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட எல்லா கருத்திட்டங்களிலும், 7 பாலங்கள் நிர்மாணித்தல் கருத்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் கூடிய நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

## உ. அவசர உதவி நிகழ்ச்சித்திட்டம்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டில் ஒரு கருத்திட்டம் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டது."தேசிய வீதிகளுக்கான மண்சரிவு அனர்த்தப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்" என்பதே அக்கருத்திட்டமாகும். இரண்டு கருத்திட்டங்களுக்கு வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் "வறுமை ஒழிப்பு கிழக்கு"

கருத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யும் பணிகள் 2018 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

**அட்டவணை 9.1.11 அவசர உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் | 2017 நிதி முன்னேற்றம் | | | 2018 நிதி முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு ரூபா.மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % | ஒதுக்கீடு ரூபா.மில்லியன் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன் னேற் றம் % |
| அவசர உதவி நிகழ்ச்சித்திட்டம் | 2,548.0 | 1,353.2 | 53% | 3805.0 | 3780.75 | 99% |

**அட்டவணை 9.1.12 அவசர உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

| தலைப்புக் குறியீடு | கருத்திட்டத்தின் பெயர் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா.மில்லியன் | செலவினம் ரூபா மில்லியன் | நிதி முன்னேற்றம் % | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா.மில்லியன் | செலவினம் ரூபா மில்லியன் | நிதி முன்னேற்றம் % |
| 117-2-7-8 | வறுமை ஒழிப்பு உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 500.0 | - | - | 723.0 | 722.52 | 99% |
| 117-2-7-13 | தேசிய வீதி வலையமைப்பிற்கான மண்சரிவு அனர்த்தப் பாதுகாப்பு | 2,048.0 | 1,353.2 | 66% | 3082 | 3058.22 | 80% |
| | **மொத்தம்** | **2,548.0** | **1,353.2** | **53%** | **3805.0** | **3780.75** | **99%** |

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொத்த நிதி முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டை விடவும் 2018 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது. வறுமை ஒழிப்பு உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் 2017 ஆம் ஆண்டில் அவ்வேற்பாடுகள் பயன்படுத்தப்படவில்லை. 2018 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தினால் 99% இனால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஊ. நிறுவனம் சார் ஒத்துழைப்பு

நிறுவனம் சார் ஒத்துழைப்பின் கீழ் ஒரு விடயத்திற்கு மட்டும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகள் பெறப்பட்ட 3 விடயங்கள் மற்றைய விடய தலைப்புக்கு மாற்றப்பட்டன.எனவே, நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றமானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (மூலதனம்) தொழிற்பாட்டுச் செலவின் நிதி முன்னேற்றத்துடன் அடையப்பெற்றது.

**அட்டவணை 9.1.13 நிறுவனம் சார் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

| தலைப்புக் குறியீடு | கருத்திட்டத்தின் பெயர் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில் | செலவினம் (ரூபா மில்லியன்) | முன்னேற்றம் % |
| 117-2-8-1 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழிற்பாட்டுச் செலவு - மூலதனம் | 6,110.0 | 6,108.8 | 99% | 6112 | 6112 | 100% |
| | **மொத்தம்** | **6,110.0** | **6,018.8** | **99%** | **6112** | **6112** | **100%** |

நிகழ்ச்சித்திட்டத்தினால் அடையப்பெற்ற ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டில் 99% ஆக காணப்பட்டதுடன் அது 2018ஆம் ஆண்டில் 100% ஆகக் காணப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழிற்பாட்டுச் செலவிற்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் 2018 ஆம் ஆண்டில் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டது.

## எ. கிராமிய வீதி மீள்-எழுச்சி நிகழ்ச்சித்திட்டம்

2018 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஏற்பாடு 2017 ஆம் ஆண்டை விடவும் சிறிது குறைவாகும். நிதி முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டில் 46% அடையப்பெற்றதுடன் 2018ஆம் ஆண்டில் 65% அடையப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகள் 2017 ஆம் ஆண்டை விடவும் குறைவாகக் காணப்பட்டாலும் செலவினம் 2017 ஆம் ஆண்டை விடவும் அதிகமாகும்.

**அட்டவணை 9.1.14 கிராமிய வீதி மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

| தலைப்புக் குறியீடு | கருத்திட்டத்தின் பெயர் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில் | செலவினம் (ரூபா மில்லியன்) | நிதி முன்னேற்றம் % | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா மில் | செலவினம் (ரூபா மில்லியன்) | நிதி முன்னேற்றம் % |
| 117-2-9-1 | கிராமிய வீதி மீள்-எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் | 3,275.0 | 1,512.0 | 46% | 3100.33 | 2003.81 | 65% |

## 9.1.3. உள்ளூர் வங்கிக் கடன்கள்

சில வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பொதுத் திறைசேரி உத்தரவாதத்துடன் உள்ளூர் வங்கி நிதியளித்தலுடன் முன்னெடுக்கப்பட்டன. சில கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதி வழங்குனர் காணப்படாத போதிலே இந்நிதியளித்தல் செயன்முறை விசேடமாக காணப்பட்டது. அத்துடன் பொதுவாக இலங்கை அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படும் விசேடமாக காணி சுவீகரித்தல் மற்றும் மற்றைய ஆக்கக்கூறுகளுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படுகையில் வெளிநாட்டு முகவர்களினால் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்களின் பொருட்டு உள்ளூர் வங்கிக் கடன்கள் பெறப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது ''64 உள்ளூர் வங்கியினால் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்களுக்காக'' முதன் முதலில் 2011 ஆம் ஆண்டில் உள்ளூர் வங்கிக் கடன்களை பெற்றுள்ளது. அவற்றிலிருந்து, 64 உள்ளூர் வங்கியினால் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்கள் மற்றும் மத்திய கடுகதிப்பாதைக் கருத்திட்டம் II ஆகியவற்றிக்கு வெளிநாட்டு நிதியுதவி இன்றி உள்ளூர் வங்கிக் கடன்களுக்கூடாக நிதியளிக்கப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில், மத்திய கடுகதிப்பாதைக் கருத்திட்டம் I, II மற்றும் III, நானாவித வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டம், வீதிகளை அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல், வீதி அபிவிருத்தி அதிகாரசபை காணிப் பிரிவின் காணி இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் உள்ளூர் வங்கியினால் நிதியளிக்கப்படும் 64 கருத்திட்டங்கள் ஆகியவற்றுக்கு இலங்கை வங்கியிடமிருந்து மட்டுமே கடன்கள் பெறப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் மொத்தக் கடன் தொகை இ.ரூ.33.5 பில்லியன் ஆவதுடன் மேற்கூறிய

கருத்திட்டற்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் 2018 ஆம் ஆண்டில் இ.ரூ.30.95 பில்லியன் மாத்திரமே பகிர்நதளிக்கப்பட்டது. கருத்திட்டங்கள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டில் பகிர்தளிக்கப்பட்ட உள்ளூர் வங்கிக் கடன்கள் உரு 9.1.3.1 இல் காட்டப்பட்டுள்ளன.

**உரு.9.1.3.1 கருத்திட்டங்கள் தொடர்பில் பகிர்தளிக்கப்பட்ட உள்ளூர் வங்கிக் கடன்கள் – 2018**




உள்ளூர் வங்கிக் கடன்களில் அதிக பங்கு மத்திய கடுகதிப்பாதைக் கருத்திட்டம் II இற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் நானாவித வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டம் மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் துறை கருத்திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் இ.ரூ.0.6 பில்லியன் தொகையில் மிகக் குறைவான கடன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2018 ஆம் ஆண்டில் மற்றைய இ.ரூ.0.23 பில்லியன் தொகை இன்னும் பகிர்தளிக்கப்படவில்லை.

வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக 2011 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையில் உள்ளூர் வங்கிகளிடமிருந்து ஏறத்தாழ இ.ரூ.239,125.38 மில்லியன் தொகை கடனாகப் பெறப்பட்டுள்ளது. உள்ளூர் வங்கிகளின் அப்பங்களிப்புகள் கீழே உரு 9.1.3.2 மற்றும் அட்டவணை 9.1.3.1 இல் தரப்பட்டுள்ளன.

**உரு 9.1.3.2 வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான கடன்களில் உள்ளூர் வங்கிகளின் பங்களிப்புகள்**




**அட்டவணை 9.1.3.1 உள்ளூர் வங்கிகளின் பங்களிப்புகள்**

| வங்கியின் பெயர் | கடன் தொகை (இ.ரூ.பில்லியன்) |
|---|---|
| இலங்கை வங்கி | 72.02 |
| மக்கள் வங்கி | 33.38 |
| தேசிய சேமிப்பு வங்கி | 74.07 |
| கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி | 7.21 |
| ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி | 28.26 |
| தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி | 8.35 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 14.5 |
| டீஎவ்சிசி வங்கி பிஎல்சி | 1.33 |
| மொத்தம் | 239.12 |

மேற்கூறிய உருவிற்கிணங்க, தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து அதிகூடிய கடன் வசதி பெறப்பட்டுள்ளதுடன் அதற்கடுத்ததாக இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அரச வங்கிகள் அதிக கடன்களை வழங்கியுள்ளன. ஆனால், தனியார் வங்கிகள் சில கடன்களை வழங்கியுள்ளன. உள்ளூர் வங்கிக் கடன்களின் மேலதிக விபரங்கள் ***பின்னிணைப்பு - 20*** இல் தரப்பட்டுள்ளன.

## 9.2. பௌதீக முன்னேற்றம்

2017 ஆம் ஆண்டில், வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டிற்கிணங்க 37 மூலதன கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதற்குப் பதிலாக குறித்த வருடத்தில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களும் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன.

- வீதிகளை அகலப்படுத்தலும் மேம்படுத்தலும்
- கிராமிய மீள்-எழுச்சி நிகழ்ச்சித்திட்டம்

2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் 10 மூலதன கருத்திட்டங்கள் ஏற்கனவே நிறைவுபெற்றுள்ளன. விலைப்பட்டியல்களை கொடுப்பனவு செய்யும் செயன்முறை மாத்திரம் குறித்த வருடத்தில் முன்னெடுக்கப்பட்டன.

## அ. கடுகதிப்பாதைகள் அபிவிருத்தி

2018 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி கடுகதிப்பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 6 கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கடுகதிப்பாதைகள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்ற ஒப்பீடு கீழே அட்டவணை 9.2.1 இல் தரப்பட்டுள்ளன.

### 9.2.1. கடுகதிப்பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்

| இல | கருத்திட்டத்தின் பெயர் | 2016.12.31 இல் உள்ளவாறான கூட்டிய நிதி முன்னேற்றம் | 2017 ஒட்டுமொத்த பௌதீக இலக்கு | 2017 ஒட்டுமொத்த பௌதிக முன்னேற்றம் | 2018 ஒட்டுமொத்த பௌதீக இலக்கு | 2018 ஒட்டுமொத்த பௌதிக முன்னேற்றம் | 31/12/2017 இல் உள்ளவாறான கூட்டிய நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மத்திய கடுகதிப்பாதைக் கருத்திட்டம் | | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெற்று வருகின்றது | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெற்று வருகின்றது | | | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெற்று வருகின்றது |
| | | பிரிவு 1 -62%<br>பிரிவு 2-49%<br>பிரிவு 3-58%<br>பிரிவு 4-8% | பிரிவு 1 -38%<br>பிரிவு 2-30%<br>பிரிவு 3-30%<br>பிரிவு 4-53% | பிரிவு 1-18%<br>பிரிவு 2-15%<br>பிரிவு 3-13%<br>பிரிவு 4-45% | பிரிவு 1 -20%<br>பிரிவு 2-45%<br>பிரிவு 3-30%<br>பிரிவு 4-40% | பிரிவு 1 --6%<br>பிரிவு 2-23%<br>பிரிவு 3-13%<br>பிரிவு 4-15% | பிரிவு 1-86%<br>பிரிவு 2-87%<br>பிரிவு 3-84%<br>பிரிவு 4-68% |
| | | சிவில் வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை | சிவில் வேலை பிரிவு 1 - 20%<br>பிரிவு 2 - 0% | சிவில் வேலைபிரிவு 1 – 1%<br>பிரிவு 2 – 7% | சிவில் வேலைபிரிவு 1 – 25%<br>பிரிவு 2 – % | சிவில் வேலைபிரிவு 1 – 4%<br>பிரிவு 2 – 45% | சிவில் வேலைபிரிவு 1 – 5%<br>பிரிவு 2 -52% |
| 2 | தென்பிராந்திய கடுகதிப்பாதை நீடிப்பு | பிரிவு 1 - 16%. | பிரிவு 1 - 33% | பிரிவு 1 - 36% | பிரிவு 1 -42% | பிரிவு 1 - 30% | பிரிவு 1 -82% |
| | | பிரிவு 2 -4% | பிரிவு 2 - 32% | பிரிவு 2 - 25% | பிரிவு 2 -46% | பிரிவு 2 - 25% | பிரிவு 2 -54% |
| | | பிரிவு 3 -18% | பிரிவு 3 - 62% | பிரிவு 3 - 27% | பிரிவு 3 -51% | பிரிவு 3 - 44% | பிரிவு 3 -89% |
| | | பிரிவு 4 -14% | பிரிவு 4 - 57% | பிரிவு 4 - 48% | பிரிவு 4 -29% | பிரிவு 4 - 24% | பிரிவு 4 -86% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | கடவத்தையிலிருந்து கெரவலப்பிற்றிய வரையிலான வெ.சு.நெ.பிரிவு (இ.அ-சீனா) | 11% | 34% | 32% | 50% | 41% | 84% |
| 4 | கொழும்பு-இரத்தினபுரி-பெல்மடுல்லை கடுகதிப்பாதை | | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெற்று வருகின்றது-18% | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெறுகிறது - 18%, பெறுகை வேலைகள் பிரிவு I - 35% | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெறுகிறது - 40% | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெறுகிறது - 2%, பெறுகை வேலைகள் பிரிவு I - 35% | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெறுகிறது - 20%, பெறுகை வேலைகள்பிரிவு I -70% |
| 5 | புதிய களணிப் பாலத்திலிருந்து அத்துறுகிரிய வரையிலான நிலமட்டத்திற்கு மேலானநெடுஞ்சாலை | | முதலீட்டாளர் பெறுகை பிரிவு I - 55% | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெறுகிறது (அளவை)- 10%, முதலீட்டாளர் பெறுகை பிரிவு I - 50% | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெறுகிறது (அளவை) பிரிவு I - 90%, முதலீட்டாளர் பெறுகை பிரிவு I- 50% | காணி ஆய.வுபிரிவு I- 10%, முதலீட்டாளர் பெறுகை பிரிவு I- 20% | காணி சுவீகரித்தல் செயன்முறை நடைபெறுகிறது (அளவை) - 20%, முதலீட்டாளர் பெறுகை பிரிவு I- 70% |
| 6 | துறைமுக அணுகுகை நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை | | | | சிவில் வேலைகள்10% | சிவில் வேலைகள்- 0% | சிவில் வேலைகள்- 0% விரிவான வடிவமைப்பு- 30% |

2018 ஆம் ஆண்டில், தென்பிராந்திய கடுகதிப்பாதை நீடிப்புக் கருத்திட்டத்தின் எல்லா 4 பிரிவுகளினதும் சிவில் வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்ற அதேசமயத்தில் மத்திய கடுகதிப்பாதையின் பிரிவு 1 மற்றும் பிரிவு 2 இன் சிவில் வேலை நிர்மாணங்களும் நடைபெற்றன.

மத்திய கடுகதிப்பாதையின் பிரிவு 1 இற்கான சிவில் வேலையானது ஆரம்பிக்கபட்ட போதிலும், அதன் முன்னேற்றம் மிகவும் குறைவானதாகும். இந்த குறைவான முன்னேற்றத்திற்கு காரணம் 2018 ஆம் ஆண்டிற்குள் குறித்த பிரிவிற்கான கடன் உடன்படிக்கை கையெழுத்திடப்படாததே பிரதான காரணமாகும். மத்திய கடுகதிப்பாதை கருத்திட்டத்தின் 4 பிரிவுகளினதும் காணி சுவீகரித்தல் செயன்முறை அனைத்தும் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டன. கொழும்பு-இரத்தினபுரி-பெல்மடுல்லை கடுகதிப்பாதை,

புதிய களணிப் பாலத்திலிருந்து அத்துறுகிரிய வரையிலான நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை, துறைமுக அணுகுகை நெடுஞ்சாலைக் கருத்திட்டம் ஆகியவற்றின் சிவில் வேலைகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவில்லை. கொழும்பு–இரத்தினபுரி-பெல்மடுல்லை கடுகதிப்பாதைக் கருத்திட்டத்தின் காணி சுவீகரித்தல் செயன்முறை 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 20% மொத்த முன்னேற்றத்தை எட்டியுள்ளது. நிலமட்டத்திற்கு மேலான நெடுஞ்சாலை கருத்திட்டங்கள் இரண்டு 2018 ஆம் ஆண்டில் அவற்றின் ஆரம்ப கட்டங்களில் காணப்பட்டன.

## ஆ. நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி

**அட்டவணை 9.2.2. நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்**

| இல | கருத்திட்டத்தின் பெயர் | நிதி பௌதீக முன்னேற்றம் 31/12/2016 இல் | 2017 | | 2018 | | நிதி பௌதீக முன்னேற்றம் 31/12/2018 இல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மொத்த பௌதீக இலக்கு | மொத்த பௌதீக முன்னேற்றம் | மொத்த பௌதீக இலக்கு | மொத்த பௌதீக முன்னேற்றம் | |
| 1 | பேஸ்லைன் வீதியை நீடித்தல் | காணி சுவீகரித்தல் செயன்முறை- 48% | மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவினால் காணி சுவீகரித்தல் செயன்முறை டிசம்பர் 2016 ஆம் ஆண்டிலிருந்து மே 2018 ஆம் ஆண்டு வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது 52% | | 52% | 2% | காணி சுவீகரித்தல் செயன்முறை- 50%, சிவில் வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை |
| 2 | பதுளை முதல் செங்கலடி வரையான பேராதனை - பதுளை வீதி (அபிவிருத்திக்கான சவுதி நிதியம்) மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்) | 31/12/2016 ஆம் திகதியில் சிவில் வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை | அபிவிருத்திக்கான சவுதி நிதியம் – 15% சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் – 41% | அபிவிருத்திக்கான சவுதி நிதியம்-0% சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்- 6% | அபிவிருத்திக்கான சவுதி நிதியம் – 8% சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் – 25% | அபிவிருத்திக்கான சவுதி நிதியம்- 3% சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்- 10% | அபிவிருத்திக்கான சவுதி நிதியம்- 3% சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்- 16% |
| 3 | வடபிராந்திய வீதி இணைப்புக் கருத்திட்டம் – (இலங்கை அரசாங்கம்-ஆசிய அபிவிருத்தி வங்கி) | 9 ஒப்பந்தப் பொதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 1 ஒப்பந்தப் பொதி பூர்த்தி | 83% | 49% | 20% | 50% | 99% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | செய்யப்படவேண்டியுள்ளது. | | | | | |
| 4 | வீதி வலையமைப்பு அபிவிருத்திச் கருத்திட்டம் | ஒப்பந்தப் பொதி I,II,III, IV - 100% ,ஒப்பந்தப் பொதி V– 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது | ஒப்பந்தப் பொதி V– 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது | ஒப்பந்தப் பொதி V - 5% | ஒப்பந்தப் பொதி V- 55% | ஒப்பந்தப் பொதி V - 30% | ஒப்பந்தப் பொதி I,II,III, IV - 100% ஒப்பந்தப் பொதி V - 35%. |
| 5 | கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் - சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்) | ஒப்பந்தப் பொதி I - 100%, ஒப்பந்தப் பொதிII - 37% | காணி சுவீகரிப்பு – 48% சிவில் வேலைகள் -20% | காணி சுவீகரிப்பு– 52% சிவில் வேலை முன்னேற்ற சராசரி 10% , கோட்டே-போப்பே வீதி - 14%,கொட்டாவ தலகல வீதி - 12% | ஒறுகொடவத்த-பத்தலே வீதி-45%, கோட்டே - போப்பே வீதி - 55%, கொட்டாவ தலகல வீதி -- 51% | ஒறுகொடவத்த-பத்தலே வீதி-23%, கோட்டே - போப்பே வீதி - 32%, கொட்டாவ தலகல வீதி -- 14% | பொதி I,II - 100%, ஒறுகொடவத்த-பத்தலே வீதி-23% கோட்டே-போப்பே வீதி - 46% கொட்டாவ தலகல வீதி -- 26% |
